ஆசிரியர் உரை

# பிசாசின் தந்திரங்கள்

## THE WILES OF THE DEVIL

Byron Nichols

**பி**சாசு ஒரு சராசரி எதிராளியோ அல்லது சத்துருவோ அல்ல. அவன் மிகவும் சக்தி வாய்ந்த சத்துரு என்பதை நாம் நேர்மையாக ஒத்துக்கொள்ள வேண்டும். பிசாசு தான் எவைகளைச் செய்கிறானோ அவைகளை மிகத்திறமையாகச் செய்யும் தன்மை உடையவன். மேலும், விடாப்பிடியாக அவன் காரியங்களைச் செய்தாலும் ஒருபோதும் களைப்படைவதில்லை. விளையாட்டு மைதானத்தில் சாத்தான் பயிற்சியாளரின் மகிழ்ச்சியாயிருக்கிறான். அவன் வெற்றி பெற தன் முழு முயற்சியையும் ஆற்றலையும் வெளிப்படுத்துவான். அவன் தன் பயிற்சியாளர் தன்னிடம் எதை எதிர்பார்க்கிறாரோ அதை விட அதிகமாகச் செய்வான். பயிற்சியின் போது முதலில் வருபவன் அவனாகத்தான் இருப்பான். அதேபோல், கடைசியாக பயிற்சி களத்தை விட்டுப் புறப்படுபவனும் அவனாகத்தான் இருப்பான். அவன் எப்போதும் வெற்றிபெறவே விரும்புவான். தோல்வியை அவன் எப்போதுமே விரும்புவதில்லை. எதிரணி போட்டியிடவே பயப்படுகிற ஒரு விளையாட்டு வீரனாகவே இருப்பான். துரதிஷ்டவசமாக பிசாசு விளையாட்டு மைதானத்தையும் தாண்டி நம் வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் கோர விளையாட்டு விளையாடிவிடுகிறான்.

எபேசியார் *6:11* -ல், அப்போஸ்தலனாகிய பவுல் **நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள்** என்று எச்சரிக்கிறார். பவுல், பிசாசின் தந்திரங்கள் என்று சொல்லும்போது அவர் என்ன பொருள்படும்படி பேசுகிறார்? சாத்தான் ஒரு போதும் நம்பகத்தகுந்தவனல்ல. அவன் பொய்யன், அவன் தந்திரமும், வஞ்சகமும் நிறைந்தவனாயிருக்கிறான். நாம் ஒரு போதும் பிசாசை ஜெயிக்கவே முடியாது என்று பவுல் சொல்லவில்லை. ஆனால், நாம்

அவனை வெல்ல முன்கூட்டியே **ஆயத்தமாயிருக்க வேண்டுமென்று** சொல்கிறார்.

நாம் எதைச் செய்யக்கூடாதோ அதைச் செய்ய வைப்பதில் எப்படி பிசாசு வெற்றி பெறுகிறானோ அதேபோல் நாம் எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்யவிடாமல் செய்வதிலும் அவன் கை தேர்ந்தவனாயிருக்கிறான். யாக்கோபு 4:17. ல், நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற தேவ ஆவியினால் ஏவப்பட்ட வார்த்தை நம்மிடத்தில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். **ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும் அதைச் செய்யாமற்போனால் அது அவனுக்குப் பாவமாயிருக்கும்.**

நாம் செய்யக் கூடாததை செய்யும் பாவத்தைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். அதுபோல், செய்ய வேண்டியதை செய்யாமலிருக்கும் பாவத்தைப் பற்றியும் பேசிக் கொண்டிருக்கிறோம். இங்கே பிசாசு பயன்படுத்தும் தந்திரம் என்னவென்றால், செய்ய வேண்டியதை நாம் செய்யாததற்காக குற்ற உணர்வுடன் இருக்கும் போது, மற்றவர்கள் அப்பாவத்தைப் பார்த்து அது மிகக் கொடுமையான பாவம் என்று சொல்லாத பாவத்தில் நம்மை வீழ்த்தி விடுகிறான். சில வேளைகளில், நம்முடைய தனிப்பட்ட பாவத்தை மற்றவர்கள் தங்கள் வாழ்வில் பின்பற்றும்படி ஒரு தாக்கத்தை ஏற்படுத்தாமல் இருக்கலாம். ஆயினும், எது செய்யப்பட வேண்டுமோஅதை நாம் செய்யத் தவறும் போது அது மற்றவர்களிடத்தில் ஒரு மோசமான தாக்கத்தை ஏற்படுத்தி விடுகிறது. அது அவர்களிடத்தில் எது செய்யப்பட வேண்டுமோ அதைச் செய்யாமல் இருப்பதில் தவறில்லை, அது பரவாயில்லை என்கிற தவறான அல்லது எதிர்மறையான எண்ணத்தை ஏற்படுத்தி விடுகிறது. நான் செய்வதை விட மற்றவர்களுக்கு அதிக பொறுப்பு இருக்கிறது அல்லது இந்த விஷயத்தில் மற்றவர்களைப்போல் எனக்கு திறமை இல்லை, எனவே, நான் மன்னிக்கப்படுகிறேன் அல்லது எனக்கு மன்னிப்பு உண்டு என்கிற எண்ணத்தை பிசாசு மிக நேர்த்தியாக உட்புகுத்தி விடுகிறான்.

ஒரு தனிப்பட்ட கிறிஸ்தவனோ அல்லது ஒரு கூட்ட கிறிஸ்தவர்களோ செய்ய வேண்டிய நற்கிரியைகளைக் குறித்து அக்கறையில்லாமல் இருக்கும் போது, அந்த எண்ணத்தை அவன் சாதகமாகப் பயன்படுத்தி விடுகிறான். எப்படியென்றால், உள்ளூர் சபையில் தலைமைப் பொறுப்பில் இருப்பவர்களை சத்தியத்திற்காக

நிற்க வைப்பதில் வழிகாட்டுவதிலும் சரி, தவறுக்காகப் போராட வேண்டுமென்று வழிநடத்துவதிலும் சரி, பிசாசு அவர்கள் மெத்தனப்போக்கை கடைப்பிடிக்கும்படி செய்துவிடுகிறான். உண்மையாய் சபையை வழி நடத்துகிறவர்கள், உண்மையாகவே சத்தியத்திற்காக நிற்பார்கள். உண்மையற்றவைகளுக்காக அவர்கள் போராடுவார்கள் என்பது உண்மையாயிருந்தாலும் கூட, கர்த்தர் சபையை வழிநடத்தும் மூப்பர்கள் மற்றும் பிரசங்கியார்களிடமிருந்து இன்னும் அதிகமாக எதிர்பார்கிறார். இப்பிரச்சனை சம்மந்தமாக நான் கவனத்தை ஈர்க்கவிரும்புகிறேன். நன்மை செய்யப்பட வேண்டிய நிலையில், அது கண்டுகொள்ளப்படாமலிருக்கும் போதோ அல்லது மறைக்கப்படும் போதோ எது நடக்குமோ அதற்கு மிகச்சிறந்த உதாரணம் தான் இது.

யாக்கோபு *4:17* ல் சொல்லப்பட்டிருக்கும் போதனை தனிப்பட்ட நபர்களுக்குச் சொல்லப்பட்டதாக வெளிப்படையாகத் தெரிகிறது. இருப்பினும், இப்போதனையில் இயற்கையாவே இடம் பெற்றிருக்கிற ஒரு கருத்து தனிப்பட்டவர்களுக்குப் பொருந்துவது போல குழுவுக்கும் பொருந்துகிறதாக இருக்கிறதா? இல்லையா? எப்படி ஒரு தனிமனிதன் நன்மை செய்ய அறிந்தவனாய் இருந்தும் அதைச் செய்யாமல் போனால் பாவமாயிருக்குமோ அதேபோல் ஒரு பிராந்திய சபையோ அல்லது பிராந்திய சபையின் தலைமையோ ஒரு காரியத்தைக் குறித்து சரியானதைச் செய்ய அறிந்திருந்தும் அதைச் செய்யாமற்போனால் அது பாவமாயிருக்கும். எப்படிப் பார்த்தாலும் தேவனுடைய பிள்ளைகளாகிய நம்மை சாத்தான் வசப்படுத்தி கர்த்தர் நிமித்தம் நாம் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யவிடாமல் தடுக்கவும் அவன் விரும்பியபடி நடத்த மிக வல்லமையான ஆயுதத்தையும் வைத்திருக்கிறான்.

நம் தேவன் பிசாசை விட மிகப் பெரியவர், வல்லமையானவர் என்பதை நிச்சயமாக நாம் அறியும்போது எவ்வளவு ஆறுதலாயிருக்கிறது! உலகத்தையும், தேவத்துவத்தையும் ஒப்பிட்டு அப்போஸ்தலனாகிய யோவான் சொல்லும்போது பிள்ளைகளே நீங்கள் தேவனால் உண்டாயிருந்து அவர்களை ஜெயித்தீர்கள். ஏனெனில், உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர் என்று சொல்கிறார் (Iயோவான் *4:4*).

✞

நிர்வாக ஆசிரியர் உரை

# தூக்கு நூல் தேவன்

# God of Plumbline

**E.Z.S. Rajanayagam**

**அவர் எனக்குக் காண்பித்ததாவது! இதோ தூக்குநூல் பிரமாணத்தினால் கட்டப்பட்ட ஒரு மதிலின் மேல் நின்றார். அவர் கையில் தூக்குநூல் இருந்தது.** கர்த்தர் என்னை நோக்கி **ஆமோசே, நீ என்னத்தைக் காண்கிறாய் என்றார். தூக்கு நூலைக் காண்கிறேன் என்றேன்; அப்பொழுது ஆண்டவர்; இதோ இஸ்ரவேலென்னும் என் ஜனத்தின் நடுவே தூக்கு நூலை விடுவேன். இனி அவர்களை மன்னிக்கமாட்டேன். ஈசாக்கின் மேடைகளைப் பாழும், இஸ்ரவேலின் பரிசுத்த ஸ்தலங்கள் அவாந்தரமுமாக்கப்படும். நான் யெரொபெயாம் வீட்டாருக்கு விரோதமாய் பட்டயத்தோடே எழும்பி வருவேன்** என்றார் (7:7-9).

இவ்வசனங்களைக் கவனித்தால், நம்முடைய தேவனை நாம் தூக்கு நூலின் தேவன் என்றும் தாராளமாக அழைக்கலாம் என்றே தெரிகிறது. **யெகோவா** என்னும் நாமமுள்ள அவர், அவருடைய தன்மைகள் மற்றும் செயல்பாட்டினடிப்படையில் விதவிதமாக வேதாகமத்தின் பக்கங்களில் வர்ணிக்கப்பட்டுள்ளார். ஆம், அவர் **உன்னதமான தேவன்** ( ஆதி.14:18), **சதாகாலமுள்ள தேவன்** (எரே 32:18) **ஞானமுள்ள தேவன்** (IIயோ.1:17) **சோதிகளின் தேவன்** (யாக்.1:17) **சேனைகளின் தேவன்** ( II சாமு 5:10) என்று. இந்த வரிசையில், அவர் **தூக்கு நூல்** தேவன் என்பதையும் நாம் சேர்த்துக்கொள்ளலாம்.

சரி, ஆமோஸ் தீர்க்கனுடைய கூற்றுப்படி, நம்முடைய தேவன் தூக்கு நூல் தேவனாக இருப்பது, நமக்கு எந்த வகையான பாடங்களைக் கற்றுக்கொடுக்கிறதென்று இப்பொழுது கவனித்து, அதன் மூலம் நாம் பயனடைய முயற்சிப்போம்.

## I. கட்டப்படுவது தூக்கு நூலின்படியாகவே கட்டப்பட வேண்டும்

நம்முடைய தேவன், தூக்கு நூலின் தேவனாக இருக்கிறார்

என்பதிலிருந்து நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற முதல் பாடம், ஆன்மீக காரியங்களில் கட்டப்படுவது எதுவாக இருந்தாலும், அது தூக்குநூலின்படியாகவே கட்டப்பட வேண்டுமென்பது.

நாம் ஒவ்வொருவரும் நம்முடைய ஆன்மீக வாழ்க்கையில், கிறிஸ்தவ வாழ்விற்கான ஒரு சுவரை அல்லது பக்தி வாழ்வுக்கான ஒரு சுவரை அன்றாடம் எழுப்பிக்கொண்டிருக்கிறோம். நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் இந்தச் சுவர் நம் செய்கையினடிப்படையில் மேலே எழும்பிக் கொண்டேயிருக்கிறது.

இச்சுவரை எழுப்புவதற்கு தேவனுடைய பிரமாணம் என்னும் தூக்கு நூலை நாம் பயன்படுத்த வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார். அதற்காகவே தன்னுடைய நீதிப் பிரமாணமாகிய நியாயப்பிரமாணத்தை பழைய ஏற்பாட்டின் காலத்திலும், கிறிஸ்துவின் உபதேசங்களடங்கிய புதிய ஏற்பாட்டை நம்முடைய நாட்களிலும் தந்துள்ளார். அப்போஸ்தலன் பவுல் தீமோத்தேயுவுக்குச் செல்லும்போது, **வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனிதன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத்தகுதி உள்ளவனாகவும் இருக்கும்படியாக அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது** என்கிறார். ( II தீமோ.*3:16,17*) ஆனாலும், அநேகர் இந்த வேதவாக்கியங்களின் அடிப்படையில் தங்கள் சுவரை எழுப்பாமல், தங்கள் மனம்போன போக்கில் சுவரை எழுப்பிக் கொண்டிருக்கின்றனர்.

இன்னும் சிலபேர், தங்களுக்குத் தெரிந்ததே சரி என்றும், தங்களுக்குப் போதிக்கப்பட்டதே உண்மை என்றும் எண்ணி, அதனடிப் படையில், தங்கள் பக்திக்கான சுவரை எழுப்புகின்றனர். மேலும் பலர், தங்கள் ஆன்மீக வாழ்வுக்கான சுவரைப் பெரும்பான்மையானவர் களைப் பின்பற்றுவதன் மூலமாக எழுப்புகின்றனர். தாங்கள் செய்வது சத்தியத்தின்படியானதா அல்லது அசத்தியத்தின்படியானதா என்றும், நீதியின்படியானதா அல்லது அநீதியின்படியானதா என்றும், எண்ணாமல், திரளான மக்களின் செய்கையினடிப்படையில் தீர்மானிக்கின்றனர். ஆனால், வேதாகமம் **தீமை செய்யத் திரளான மக்களைப் பின்பற்றாதிருங்கள்** என்றே சொல்லுகிறது ( யாத்.*23:2*). நீதியின் குரல்வளையை நெஞ்சார நெறித்த பிலாத்துவுக்கு முன்பாக இயேசு விசாரணைக்காக நின்றபோது, பெரும்பான்மையானவர்கள் என்ன செய்தார்கள்? ஒரு பாவமும் அறியாத இயேசுவைச்

சிலுவையிலறையும் என்றும், பரபாசை விடுதலை செய்யும் என்றுதானே கூச்சலிட்டார்கள் ( லூக்கா 23:18). பெரும்பான்மையானவர்கள் நீதிக்கு தங்களை ஒப்புக்கொடுத்தார்கள் என்று வேதாகமம் எங்காவது சொல்லுகிறதா?

அருமையானவர்களே, நம்முடைய ஆன்மீக வாழ்க்கையின் சுவரை நாம் எப்படி எழுப்பிக் கொண்டிருக்கிறோம்? எதனடிப்படையில் கட்டிக் கொண்டிருக்கிறோம்? சொல்லுங்கள்.

**II. கட்டப்படுவது ஒவ்வொரு கட்டத்திலும் சரிபார்க்கப்பட வேண்டும்.**

தூக்கு நூல் தேவனிடமிருந்து நம்மால் கற்றுக்கொள்ளமுடிகின்ற இரண்டாவது பாடம், நம்முடைய ஆன்மீக வாழ்க்கையில் நாம் எழுப்பும் சுவரை, ஒவ்வொரு கட்டத்திலும் தவறாமல் சரிபார்த்துக் கொள்ளவேண்டுமென்பது.

கட்டிட வேலை செய்யும் ஒரு கொத்தனாரோ அல்லது ஒரு மேஸ்திரியோ கட்டிட வேலை முடியும் வரை, தூக்கு நூலையே பயன்படுத்தாமல் கட்டிக்கொண்டிருந்தால், அக்கட்டிடம் எப்படி இருக்குமென்று எண்ணிப்பாருங்கள். கண்டிப்பாக அது இருக்க வேண்டிய பிரகாரமாகவும், மற்றவர்களின் பாராட்டுக்கு உகந்ததாகவும் இருக்காது. இன்னும், சொல்லப்போனால் அது ஒரு முட்டாள்தனமான செயலாகவே இருக்கும். அதுபோல் தான், அவ்வப்போது தூக்கு நூலாகிய வேத வசனங்களின்படியாகச் சரிபார்க்கப்படாத கிறிஸ்தவ வாழ்வும், அதன் முடிவும் இருக்கும்.

வேத வசனங்கள், நாம் நம்மை சோதித்தறிகின்றவர்களாக இருக்க வேண்டுமென்றே வலியுறுத்துகிறது. அப்போஸ்தலன் பவுல், கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபத்தில் என்ன சொல்லுகிறார் என்று பாருங்கள். **நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்தறியுங்கள். உங்களை நீங்களே பரீசித்துப்பாருங்கள். இயேசு கிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறார்கள் என்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள்** என்கிறார் (II கொரி 13:5).

அப்படியானால், நாம் ஒவ்வொருவரும் நம் பக்திக்குண்டான காரியங்களை, அதாவது, நம்முடைய விசுவாசம், நம்முடைய மனந்திரும்புதல், நம்முடைய அறிக்கை, நம்முடைய ஞானஸ்நானம், நம்முடைய இரட்சிப்பு, நாம் சார்ந்திருக்கும் சபை, அந்த சபை தரிக்கும்

பெயர், இன்னும் நம்முடைய ஆராதனை முறைக்குண்டான பாடல், ஜெபம், காணிக்கை கொடுத்தல், கர்த்தரின் பந்தியில் பங்கு பெறுதல் இவைகளனைத்தும் கிறிஸ்துவின் உபதேசங்களினடிப்படையில் இருக்கிறதா என்று சோதித்துப் பார்க்கிறவர்களாக உள்ளோமா?

ஆகையால், பிரியமானவர்களே, நம்முடைய ஆன்மீக வாழ்க்கையை, நம்முடைய விசுவாச வாழ்க்கையை நாம் எவ்விதம் கட்டிக்கொண்டுள்ளோம்? நாம் நம்முடைய அன்றாட நடக்கையால் எழுப்பும் பக்திக்கான சுவரை, வேதவசனங்களைக் கொண்டு அடிக்கடி சோதித்துப் பார்க்கிறவர்களாக உள்ளோமா? ஒருவேளை, நாம் சோதிக்கத் தவறினாலும், நம்முடைய தூக்கு நூல் தேவன் நம்மைச் சோதிப்பார்.

## III. கட்டப்படுவது எப்படியிருந்தாலும் நியாத்தீர்ப்பு உண்டு

தூக்கு நூல் தேவனிடமிருந்து நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற அடுத்த பாடம், நம்முடைய ஆன்மீக வாழ்க்கையில் நாம் கட்டுவது எதுவாக இருந்தாலும், அது ஒரு நாளில் நியாந்தீர்க்கப்படும் என்பது.

வேதாகமத்தில் தூக்கு நூல் நியாயந்தீர்ப்பிற்கான அடையாள மாகவே சொல்லப்பட்டிருக்கிறது. பரலோகத்தின் தேவன் ஏசாயா தீர்க்கனைக் கொண்டு சொல்லுகிறதை கவனியுங்கள், **ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது. இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன். அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப் பட்டதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும், விசுவாசிக்கிறவன் பதறான். நான் நியாயத்தை நூலும், நீதியைத் தூக்கு நூலுமாக வைப்பேன் ...** (ஏசா. *28:16,17*) என்று தீர்க்கனைப்போலவே, ஏசாயா தீர்க்கனும் சொல்லியுள்ளார். ஆகவே, தூக்கு நூல் தேவன், ஒரு நாளில் நியாயந் தீர்க்கப்போகிறார். அந்த நியாயத்தீர்ப்புக்கு எந்தவொரு மனிதனும் தப்பித்துக்கொள்ளமுடியாது என்பதையும் எபிரெயர் ஆசிரியரைக் கொண்டு நமக்குத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறார் (எபி.*9:27*).

அப்படியானால், இந்த நியாயத்தீர்ப்பு எதனடிப்படையில் இருக்கும்? எல்லாவற்றுக்கும் போதுமானதாக இருக்கும் வேதாகமம் இதற்கு என்ன பதில் தருகிறது என்று பாருங்கள். **.....தேவனுடைய நியாயத்தீர்ப்பு சத்தியத்தின்படியே இருக்கும்** ( ரோம *2:2*). அப்படியானால் எது சத்தியம்? **...உம்முடைய வசனமே சத்தியம்** ( யோவா *17:17*)என்று இயேசு கூறுகிறார். நம்முடைய ஆண்டவர் அதோடு நிற்காமல்,

சத்தியமாக இருக்கக்கூடிய வசனமே நம்மை கடைசி நாளில் நியாயந்தீர்க்குமென்று எச்சரிக்கவும் செய்கின்றார். **என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது. நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்** என்று ( யோவா 12:48 ) வாசிக்கிறோம்.

ஆகையால், அன்பானவர்களே, நம்முடைய ஆன்மீக வாழ்வில் அனைத்தையும் வேத வசனங்களினடிப்படையில் அமைத்துக் கொண்டு, அதன்படி மாத்திரமே வாழ்வோம். வேதவசனங்களே, தேவனுடைய கையில் தூக்கு நூலாக இருக்கப் போகிறது. நம்முடைய தூக்கு நூல் தேவன், அதை வைத்துத்தான் நம்மை நியாயந் தீர்ப்பார். ஆகவே, விழிந்திருந்து செயல்படுவோம்.

✞

## தேவனுடைய பெட்டிகள்

என்னுடைய கைகளில் இரண்டு பெட்டிகள் உள்ளன
அவைகளை நான் பிடித்துக் கொள்ளும்படி தேவன் கொடுத்தார்
"உன்னுடைய கவலைகளை கறுப்புப் பெட்டியில் போடு
மகிழ்ச்சிகளை பொன்நிறப் பெட்டியில் போடு" என்றார்.

தேவன் சொன்னபடியே இரண்டு பெட்டிகளிலும்
என் மகிழ்ச்சிகளையும், கவலைகளையும் போட்டு வந்தேன்
பொன்நிறப் பெட்டி ஒவ்வொரு நாளும் கனமாகிக் கொண்டே வந்தாலும்
கறுப்பு நிறப்பெட்டி பழையபடி இலகுவாகவே இருந்தது.

மிகுந்த ஆர்வத்தோடு, கறுப்புப் பெட்டியைத் திறந்து
காரணம் என்னவென்று கண்டுபிடிக்க விரும்பினேன்
பெட்டியின் அடியில் ஒரு துவாரம் இருக்கக் கண்டேன்
நான் அதில் போட்ட கவலைகளெல்லாம் அதில் விழுந்து மாயமாயிற்று

தேவனிடத்தில் துவாரத்தைக் காட்டி நான் கேட்டேன்
"என் கவலைகளெல்லாம் எங்கே போயிற்று என்று"
அவர் சிரித்துக் கொண்டே இவ்விதம் சொன்னார்
"என் பிள்ளையே, அவைகளனைத்தும் என்னிடத்தில் உள்ளன..."

கடவுளே, ஏன் பெட்டி கொடுத்தீர்கள் என கேட்டேன்
ஏன் பொன்நிறப் பெட்டியும், ஓட்டையுள்ள கறுப்புப் பெட்டியும் என்று
"என் பிள்ளையே, பொன் நிறப்பெட்டி உன் ஆசீர்வாதங்களை நீ கணக்கிட
கறுப்புப் பெட்டி அவைகளை வெளியே விட என்றார்.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| பிசாசின் தந்திரங்கள் | Byron Nichols | ... 1 |
| தூக்குநூல் தேவன் | Rajanayagam | ... 4 |
| தேவசெயலில் விசுவாசம் | Jerry bates | ... 11 |
| ...சபைக்காக நான் பயப்படுகிறேன் | J.C.Choate | ... 14 |
| மன்னிப்பதும், மன்னிப்பு கேட்பதும் | Philemon Raja | ... 18 |
| மாயமற்ற விசுவாசம் | B.Arjunan | ... 22 |
| சத்தியத்தை நேசி | Benny martin | ... 27 |
| **தேவன்** | **God** | |
| ஓ! அந்தக் கைகள் | Harshel Dyer | ... 31 |
| துக்கம் நிறைந்தவரும் பாடு... | Perry N. Hall | ... 33 |
| கவனத்தை ஈர்க்கும் இயேசுவின்... | David R. Kenney | ... 35 |
| **தேவனுடைய வார்த்தை** | **The word of God** | |
| புதிய ஏற்பாட்டு புத்தகங்கள் | Allen webster | ... 38 |
| **இரட்சிப்பு** | **Salvation** | |
| ஞானஸ்நானம் நாம் ஒத்துக்... | Owen D. Olbricha | ... 41 |
| ஒன்றுதானா அல்லது அநேகமா? | | ... 43 |
| பிரதானக் கட்டளையின்.... | David Deffenbaugh | ... 44 |
| **வாழ்வதற்கான உபதேசம்** | **Doctrine to Live by** | |
| முப்புரி நூல் | Albert Hardnet | ... 46 |
| மாதிரியின்படி | Grey Tidwell | ... 48 |
| **செயலில் கிறிஸ்தவம்** | **Christianity in Action** | |
| நம்புகிறீர்களா அல்லது.... | Bob Plunket | ... 50 |
| நல்ல விதைக்கிறவனாக.... | Jack Hariman | ... 52 |
| கிறிஸ்துவை அறிவித்தல் | Gary C. Hampton | ... 54 |
| **ஆராதனை** | **Worship** | |
| ஆராதனையில் பயபக்தி | Louis Rushmore | ... 56 |
| ...தேவனுடைய சமூகத்தில் வருதல் | Ronala G.Bylant | ... 58 |

| | | |
|---|---|---|
| தேவனைத் துதித்தல் | Rick Cunningham | ... 61 |
| இருதயத்திலிருந்து வரும் இசை... | Jason Fox | ... 63 |
| **அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை** | **Daily Christian living** | |
| இதை எப்படிப் பார்க்கிறீர்கள் | | ... 67 |
| சத்தியத்தைச் சொல்லும்படி | Dalton Key | ... 68 |
| பெண்ணிடமிருந்து பெண்ணுக்கு | Kerstin Alison | ... 69 |
| ....இதை எழுத விரும்பவில்லை | Dawn Weaver | ... 71 |
| தைரியம் | Bill Dillon | ... 73 |
| **கிறிஸ்தவ இல்லம்** | **The Christian home** | |
| வாலிபன் தன் வழியை... | Bonnie Rushmore | ... 75 |
| உங்கள் இல்லத்தில் | Wendell winkler | ... 79 |
| என் தாய் காலத்தை... | Bob Plunket | ... 81 |
| வீடு நெருக்கடியிலிருக்கிறது | Dennis Gultedge | ... 83 |
| நாம் எப்படி வாழ்வோம் ? | Clinton storm | ... 85 |
| கவனச் சிதறல்கள் | Alex Gibson | ... 86 |
| **வசனப் பகுதி பாடங்கள்** | **Textual studies** | |
| புறங்கூறும் பேச்சு | Tom Kelton | ... 89 |
| விலையேறப் பெற்ற தைலம் | Owen Cosgrove | ... 91 |
| மூன்றாம், நான்காம் தலைமுறை... | David Tarbet | ... 94 |
| **வேதாகம கதாப்பாத்திரங்கள்** | **Bible Characters** | |
| தெபொராள் ஒரு தீர்க்கதரிசி... | Charles Box | ... 96 |
| எந்த மோசே ? | Charles R. Rose | ... 98 |
| ஒன்றின் வல்லமை ... | Mike Benson | ... 100 |
| நான் யார்? | Rebecca Rushmore | ... 101 |
| **வேதாகம கேள்விகள்** | **Bible questions** | |
| ஆவியினால் பிறப்பது என்றால்... | Gary Clayton | ... 102 |
| என் வேதமும், நானும் | Hollis miller | ... 106 |
| கிறிஸ்துவுக்குள் | Harvey Porter | ... 108 |

# தேவ செயலில் விசுவாசம்
# Faith in the operation of God

Jerry Bates

மத உலகில் ஞானஸ்நானம் என்பது சூடாக விவாதிக்கப்படும் தலைப்புகளுள் ஒன்றாக இருக்கிறது. பெரும்பாலான மத அமைப்புகள் சிலவகையான ஞானஸ்நான முறைமையைக் கடைபிடித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால், பெரும்பாலும் இது இரட்சிப்பிலிருந்து பிரிந்துதான் இருக்கிறது. ஒருவருடைய இருதயத்தில் காணப்படும் உட்புறமான கிருயையின் அடையாளந்தான் ஞானஸ்நானம் என்று சொல்லப்படுகிறது. இந்நிலையை நியாயப்படுத்த பல வசனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவைகளுள் ஒன்று கொலோசெயர் *2:11-15*. **அல்லாமலும் நீங்கள் கிறிஸ்துவைப் பற்றும் விருத்தசேதனத்தினாலே மாமிசத்திற்குரிய பாவ சரீரத்தைக் களைந்துவிட்டதினால், கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள். ஞானஸ்நானத்திலே அவரோடே கூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும் அதிலே, அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடுகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள். உங்கள் பாவங்களினாலேயும் , உங்கள் மாமிச விருத்த சேதனமில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடுகூட உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து...** என்பதாக உள்ளது.

சில வேளைகளில் வாக்குவாதம், பழைய ஏற்பாட்டு சடங்காச்சாரமான விருத்தசேதனத்தோடு ஒப்பிடப்படுகிறது. விருத்தசேதனம் என்பது தேவன் இஸ்ரவேலோடு ஏற்படுத்தின உடன்படிக்கையின் அடையாளமாயிருக்கிறது. ஆகவே, ஞானஸ்நானமானது ஒருவர் கிறிஸ்துவில் கொண்டிருக்கும் புதிய வாழ்வின் அடையாளமாயிருக்கிறது. இவ்வசனங்களை சில நிமிடங்கள் சற்று விரிவாகப் பார்ப்போம்.

முதலாவது, ஞானஸ்நானமானது விருத்தசேதனத்தோடு

ஒப்பிடப்படவில்லை. இங்கே ஒப்பீடு **பழைய ஏற்பாட்டு மாமிசவிருத்தசேதனத்திற்கும், ஞானஸ்நானத்தில் ஏற்படும் ஆவிக்குரிய விருத்தசேதனத்திற்கும் தான்.** பழைய ஏற்பாட்டு விருத்தசேதன சடங்காச்சாரமானது மனிதர்களால் செய்யப்பட்டது. அது மாம்சீகத் தன்மையைக் கொண்டது. பெரும்பாலும் யூதர்கள் இந்த சரீரப்பிரகாரமான செயலைத் தங்கள் இரட்சிப்பின் ஆதாரமாக நம்பியிருந்தார்கள். ஆனால், அது ஒருபோதும் இரட்சிப்பை அளிக்கும்படி உத்தேசிக்கப்படவே இல்லை. விருத்தசேதனமானது தேவன் தம்முடைய ஜனங்களோடு செய்த உடன்படிக்கையின் அடையாளமாகத்தான் இருந்தது. தேவன் எப்போதுமே இருதய விருத்தசேதனத்தை அதாவது, வாழ்க்கை மாற்றத்தைத்தான் விரும்புகிறார். **ஆகையால், நீங்கள் இனி உங்கள் பிடரியைக் கடினப்படுத்தாமல், உங்கள் இருதயத்தின் நுனித்தோலை விருத்தசேதனம் பண்ணுங்கள்** (உபாகமம் 10:16) இதேவிதமான கட்டளை எரேமியா 4:4 லிலும் கொடுக்கப்பட்டுள்ளது.

மறுமுனையில் கிறிஸ்துவின் விருத்தசேதனம் ஆவிக்குரிய தன்மையைக் கொண்டது. இது கைகளால் செய்யப்படுவதில்லை. இது மாம்சத்தின் பாவங்களை நீக்கக்கூடிய இருதய விருத்தசேதனமாகும். இது முற்றிலும் தேவனுடைய செயலாகும். இந்த ஆவிக்குரிய விருத்தசேதனம் ஞானஸ்நானத்தில் நடக்கிறது. இது யூதர்களின் விருத்தசேதனத்தில் மாம்சத்தின் ஒரு பகுதி நீக்கிப்போடப்படுகிறது. ஞானஸ்நானத்தில் நம் சரீர இச்சைகளும், பாவ பழக்கவழக்கங்களும் அகற்றப்படுகிறது.

இரண்டாவதாக, ஞானஸ்நானத்தின்போது, நமக்கு மூன்று காரியங்கள் நடப்பதாகச் சொல்கிறார். முதலாவது, நாம் கிறிஸ்துவோடுகூட அடக்கம் பண்ணப்படுகிறோம். இது வெளிப்படையாகவே பாவத்திற்கு மரிப்பதைத்தான் குறிக்கிறது. ஏனென்றால், நீங்கள் மரித்ததைத்தானே அடக்கம் பண்ணுவீர்கள். இரண்டாவதாக, நாம் கிறிஸ்துவோடுகூட எழுந்தவர்களாகவும், அவரோடுகூட உயிர்பிக்கப்பட்டவர்களாகவும் இருக்கிறோம். நாம் தேவனிடத்தில் வைத்திருக்கும் விசுவாசத்தை அடிப்படையாக வைத்து, அவர் நம் எல்லா பாவங்களையும் மன்னிக்கிறார். **கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்** (எபேசியர் 2:8)

இந்த விசுவாசம் வெறுமனே தேவனுடைய வல்லமையில் நாம் கொண்டிருக்கும் விசுவாசமல்ல, அதேபோல் இது கிறிஸ்துவின்உயிர்த்தெழுதலில் நாம் கொண்டிருக்கும் விசுவாசமல்ல. மாறாக, இயேசு கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து, உயிரோடு எழுப்பி தம்முடைய வல்லமையை நிரூபித்திருக்கிற தேவனுடைய வாக்குத்தத்தங்களில் நாம் கொண்டிருக்கும் விசுவாசமாகும். தேவன் நம்மை கிறிஸ்துவோடுகூட எப்பொழுது எழுந்திருக்கச் செய்தார்? ஞானஸ்நானத்தில் ஞானஸ்நானம் மாற்றத்திற்கான வழி அல்ல. ஆனால், நம்மை மாற்ற தேவன் செயல்படும்போதுதான் மாற்றம் ஏற்படுகிறது.

மூன்றாவதாக, ஞானஸ்நானத்தை நம் இரட்சிப்போடு தொடர்புபடுத்தாமல் அதை வெறுமனே ஓர் அடையாளமாக ஆக்கும்போது என்ன நடக்கிறது? தேவன் நம்மை ஞானஸ்நானத்தின் மூலமாக புதிய சிருஷ்டிகளாக மாற்ற செயல்படுகிறார். ஞானஸ்நானத்தில் தேவனுடைய செயலில் (நிகழ்காலம்) நாம் விசுவாசம் வைக்கிறோம் என்று அப். பவுல் சொல்கிறார். ஏற்கனவே அவர் நமக்காகச் செய்திருக்கிறவைகளில் விசுவாசம் வைக்கிறதாகச் சொல்லவில்லை. நாம் ஞானஸ்நானத்தை வெறும் அடையாளமாக வைத்தால் தேவன் அங்கே ஒன்றையும் செய்வதில்லை. இந்த விதியின்படி தேவனுடைய வேலை என்ற கிரியை ஏற்கனவே முடிந்துவிட்டது. ஆகவே, ஞானஸ்நானத்தில் ஏதோ ஒன்றைச் செய்கிறவன் மனிதனாகத்தான் இருக்க முடியும். இங்கே தேவன் வெறுமனே பார்வையாளராகிவிடுகிறார். இது பவுலின் உபதேசத்திற்கு எதிரானதாக இருக்கிறது. எனவே, இப்படிச் செய்யப்படும் ஞானஸ்நானம் வெற்றுச் சடங்காச்சாரமாகி விடுகிறது.

ஞானஸ்நானம் வெறுமனே சடங்காச்சாரமல்ல. ஞானஸ்நானத்தில் நடக்கும் ஆவிக்குரிய விருத்தசேதனமே ஞானஸ்நானமாகிவிடாது. அதேபோல் இது பழைய ஏற்பாட்டு விருத்தசேதனம் போன்றதுமல்ல. ஞானஸ்நானம் மாத்திரமே நம்மை இரட்சித்து விடாது. நிச்சயமாகவே, நம்மை நாமே இரட்சித்துக்கொள்ளவும் முடியாது. இரட்சிக்கும் வல்லமை தேவனுக்கு மாத்திரமே உண்டு. இன்னும் விசுவாசமே நம் இரட்சிப்பின் ஆதாரமாயிருக்கிறது. நம் இருதயங்களில் தேவன் எப்போது கிரியை செய்யத் தெரிந்துகொள்கிறார்? ஞானஸ்நானத்தில் தான்! தேவனை வெறும் பார்வையாளராக கீழ்நிலைக்குத் தள்ளிவிடாதீர்கள். ✝

# இந்நாட்களிலான சபைக்காக நான் பயப்படுகிறேன்

# I Fear For the Church Today

J.C. Choate.

இன்றைய நாட்களில் சபைகளில் என்ன நடக்கிறதென்பதைக் கவனிக்கும் நமக்கு மிகுந்த கவலையை அளிக்கிறது. பல சபைகள் மோசமான, தகுதியற்ற தலைமைத்துவத்தைக் கொண்டுள்ளன. பெரும் பாலான பிரசங்கிமார்கள் காலியான இடத்தை நிரப்புகிறார்களே தவிர சரியாகப் பிரசங்கிப்பதுமில்லை, அதிகமாக வேலை செய்வதுமில்லை. ஊழிய இலக்கும், வளர்ச்சி இலக்கும் எப்பொழுதாவது ஒருமுறைதான் வைக்கப்படுகிறது. கர்த்தருடைய காரியங்களில் நாங்கள் சுறுசுறுப்பாக இல்லாத காரணத்தினால் சபை அங்கத்தினர்களுக்கு சலிப்பும், அலுப்பும் ஏற்பட்டு விடுகிறது. நம் இளைய தலைமுறையினர் பொழுது போக்கு காரியங்களில் ஈடுபடுத்தப்படுகிறார்கள் ஆனால், சபைப் பணியில் ஈடுபடுத்தப்படுவதில்லை. அதுபோல் உபதேசம் மற்றும் சபைக்கடுத்த காரியங்களில் போதிக்கப்படுவதில்லை. இதனால் சபை அங்கத்தினர்களில் பெரும்பாலோர் மறுமைக்கான ஆயத்தம் இல்லாத நிலையில் இருப்பதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

பல சம்பவங்களை வைத்துப்பார்க்கும் போது நம் ஆராதனை பரிதாபமாகக் காட்சியளிக்கிறது. தேவனை ஆராதிக்கும் போது பாடல்கள் பாடும்படியாக கட்டளைப் பெற்றிருக்கிற கிறிஸ்தவர்கள் வாயைத் திறக்காமல் இருக்கையில் அமர்ந்திருக்கிறார்கள். பலர் கர்த்தருடைய பகுதியில் ரோபோக்கள் போல் பங்கு பெறுகிறார்கள். சபையின் பணிகள் எந்த அளவுக்கு இருக்க வேண்டுமோ அந்த அளவுக்கு இல்லாதபடியால் நம் காணிக்கையும் எந்த அளவுக்கு இருக்க வேண்டுமோ அந்த அளவுக்கு இருப்பதில்லை. பிரசங்கங்கள் அறிவுசார்ந்த ஒன்றாக இருக்க வேண்டும் என்று நம்மால் எதிர்பார்க்கப்படுகிறது. அப்போது தானே ஒரு மணி நேரத்திற்குள் நாம் வெளியே போக பெரும்பாலான நேரங்களில் நம் இளைய

தலைமுறையினர் கண்டு கொள்ளப்படுவதில்லை. சபை பணிகளிலும், ஆராதனையை நடத்துவதிலும் அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கப்படுவதில்லை. அதேபோல் பெண்களுக்கு சவாலான காரியங்கள் கொடுக்கப்படுவதில்லை, சபைகளிலும் போதுமான பணிகள் கொடுக்கப்படுவதில்லை. சபை வளர்ச்சிக்கான திட்டங்களும், இலக்குகளும் பலவீனமாயிருக்கின்றன. பல வேளைகளில் நாம் கர்த்தருடைய சபை போலில்லாமல் **ஒரு கிளப்** போலவும், சமூக சேவை மையங்கள் போலவும் காட்சியளிக்கிறோம். கர்த்தருடைய காரியங்கள் உற்சாகமின்மையால் முடக்கிவிடப்பட்டிருக்கும் போது, இத்தகைய சூழ்நிலைகளில் நாம் இணைந்து செயல்படுவது கடினமான ஒன்றுதான். தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களில் பெரும்பாலானோர்களுக்கு கர்த்தருக்கென்று செலவழிக்க நேரம் இருப்பதில்லை. ஆனால், சிறுசிறு செயல்பாடுகளைக் கொண்டு இந்த **கிளப்புகள்** செயல்பட்டுக் கொண்டு தான் இருக்கிறது.

வெளிநாட்டு ஊழியங்களுக்கு நாம் கொடுப்பது வெறும் கண் துடைப்பாகவும், சபைக்காக நாம் அதிகம் செய்யாததற்கான சாக்காகவும் பயன்படுத்துகிறோம். நாம் ஆராதனைக்காக சபை கூடிவரும் போது அவருடைய பணியைத் தானே செய்கிறோம் என்றும் நினைப்பு இருக்கும் வரை சபையின் உண்மையான பணியை அறிய வேண்டிய அளவுக்கு அறியாதவர்களாயிருக்கிறோம். பல வேளைகளில் சபை கூடிவருவதே நாம் உண்மையுள்ளவர்களாக எண்ணப்படுகிறது. பல சபைகள் சுவிசேஷ கூட்டங்கள் நடத்துவதையே நிறுத்திவிட்டன அல்லது பொழுது போக்குக்காக நேர அளவை சுருக்கிக்கொண்டு கூட்டங்களை நடத்துகிறார்கள், நாம் நடத்தும் சுவிஷேசக் கூட்டங்களில் வெளியிருந்து வருபவர்களின் எண்ணிக்கையும் குறைவாக இருக்கிறது. சபை அங்கத்தினர்களின் எண்ணிக்கையும் குறை வாகவே இருக்கிறது. மேலும், அப்படிப்பட்ட கூட்டங்களில் கர்த்த ருடைய அழைப்பை நாம் ஒழித்தே விட்டோம். ஒரு வருடகாலத்தில் ஒரு சிலரை கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறார்கள். கிறிஸ்துவுக்குள் கீழ்ப்படி கிறவர்களை பாப்பதே கிட்டத்தட்ட மறந்துவிட்டது. சில சபை அங்கத் தினர்களுக்கு வெளிநாட்டு ஊழியங்களைப் பற்றி பேசினாலே பிடிப்பதில்லை. காரணம், மற்றவர்களுடைய சூழ்நிலைகளைப் பற்றித் தெரிந்து கொள்ள அவர்கள் அக்கறைப்படுவதில்லை.

சகோதரர்களே, நாம் எதுவரைக்கும் இப்படி இருப்போம்? யார் எழுந்திருந்து கர்த்தருக்காக வேலைக்கு போவார்? முதலில் முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய காரியங்களுக்கு முதலில் முக்கியத்துவம் கொடுப்பதற்கு எது நம்மை ஏவப்போகிறது என்று எனக்கு தெரியவில்லை. ஆனால், ஒன்று எனக்கு தெரியும். நம்மை நாமே

கண்டுபிடித்து, கர்த்தரிடத்தில் துரிதமாக திரும்பவில்லையென்றால் நாமும் இழந்து போவோம். உலகில் பெரும்பாலான மக்களும் இழந்து போவார்கள், நம் ஆவிக்குரிய மந்த நிலைமையிலிருந்து நாம் எழுப்பப்பட வேண்டுமென்றால் பழங்கால இஸ்ரவேலைப் போல சரீரப்பிரகாரமான சிட்சை நமக்கு அவசியமா? கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுத்தின விசேஷம் 2,3 அதிகாரங்களில் எச்சரிப்பது போல நம்மையும் எச்சரிக்க வேண்டுமா? அங்கே அவர் நாம் மனந்திரும்பாத பட்சத்தில் உண்மையுள்ளவர்களின் ஐக்கியத்திலிருந்து நம் விளக்குத்தண்டை நீக்கி விடுவார்.

நான் எதிர்மறையான கருத்துக்களை சொல்ல விரும்பவில்லை. ஆனால், அதே நேரத்தில் உண்மைக்கு என் கண்களை மூடவும் விரும்பவில்லை. நான் சுட்டிக் காட்டினவைகளில் சில விதிவிலக்குகள் உண்டு. ஆனால், பல சபைகளும் அங்கத்தினர்களும் நான் குறிப்பிட்ட இப்பிரிவில் வந்துவிடும். நாங்கள் தாய்நாட்டிலும், வெளிநாடுகளிலும் ஊழியம் செய்து வருவதால் காரியங்களை ஒப்பிட்டுப்பார்த்து இவைகள் உண்மையென்பதை அறிகிறோம்.

நான் சொல்லிய காரியங்கள் தனிப்பட்ட நபர்கள் மற்றும் சபை பற்றி உண்மையாக இல்லையென்றால் அது மிகவும் அருமையானது. அதற்காக நான் உங்களைப் பாராட்டுகிறேன். நீங்கள் நிச்சயமாகவே வளரும் கூட்டமாக இருக்க வேண்டும். நான் குறிப்பிட்ட குறைபாடுகள் உங்களுக்குப் பொருந்தவில்லையென்றால் அதைக்குறித்து கவலைப்பட வேண்டாம். அதற்காக நன்றியுள்ளவர்களாயிருங்கள். ஆனால், உங்களைச் சுற்றிலும் இருக்கிற சகோதரர்களிடத்தில் என்ன நடந்து கொண்டிருக்கிறது? உங்களைச் சுற்றிலும் நடந்து கொண்டிருக்கிற வைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா? அல்லது கேட்டுக் கொண்டிருக்கிறீர்களா? நான் சபையைக் குறித்து தாழ்வான கருத்துக்களை சொல்ல விரும்பவில்லை. சபை உயிரற்றதாகி விட்டது என்று நான் நம்பவில்லை. சபை இனிமேல் எழுச்சியே அடையாது என்று என் நம்பிக்கையை முழுமையாக இழந்து விடவில்லை. சபையானது வளர்ச்சியில் மிகவும் தாழ்வான நிலையில் இருக்கிறதென்பது நிதர்சனமான ஒன்றாக உள்ளது. இன்றைய நாட்களில் கிறிஸ்துவின் சபைகளில் எண்ணிக்கை குறைந்துவிட்டது. நமக்கு முன்பாக பல பிரச்சனைகள் உள்ளன. நாம் நேர்மையாக இருந்து, அவைகளை உணர்ந்து, அதற்காகத் தீர்வுகளைக் காண வேண்டும்.

அநேகமாக எல்லா சகோதரர்களும் இதைச் செய்ய மாட்டார்கள். அநேகமாக, பல சபைகள் வீழ்ச்சியின் பாதையில் பாராமுகத்துடன் தொடந்து செயல்படும். ஆனால், இது உங்களையும் என்னையும் எங்கே கொண்டு போய் விடுகிறது? மற்றவர்கள் எதையாவது செய்கிறார்களோ

இல்லையோ, நாம் அவர்களைப் போல் தவறான காரியங்களுக்கு அடிபணிந்து விடக்கூடாது. மாறாக, தனிப்பட்ட நபராகவும், சபையாகவும் நாம் தேவனுக்கு உண்மையாயிருந்து அவர் இவ்வுலகில் நாம் செய்யவேண்டுமென்று வைத்துப் போயிருக்கிற வேலையைச் செய்ய நம் மனதில் தீர்மானம் எடுத்துக் கொள்ள வேண்டும். நாம் அப்படிச் செய்தால், நம் மாதிரியைப் பின்பற்றும்படி நம்மை சுற்றிலுமிருக்கிறவர்களை உற்சாகப்படுத்த முடியும். மேலும், உலகம் முழுவதிற்கும் சுவிசேஷத்தை எடுத்து செல்லக் கவனமாக இருக்க முடியும். தேவன் ஒருபோதும் நம்முடைய சித்தத்தைச் செய்ய பெரும்பான்மையைப் பார்த்ததில்லை. மாறாக, தங்கள் வாழ்வில் அவருக்கும் அவருடைய வேலைக்கும் முதலிடம் கொடுக்கும் சிலரைத் தான் பார்க்கிறார். ✝

## மதுபானக்கடையும், சபையும்

ஒரு சிறிய பாரம்பரியமிக்க பட்டணத்தில், வியாபாரி ஒருவர் மது பானக்கடை ஒன்றை கட்ட ஆரம்பித்தார். அப்பட்டணத்திலிருந்த பாப்டிஸ்ட் சபை அதற்கெதிராக பிரச்சாரங்களில் ஈடுபட்டு அது திறக்கப்படாதபடி விண்ணப்பங்களையும், ஜெபங்களையும் ஏறெடுத்தது.

ஆயினும், அந்த மதுபானக்கடை திறக்கப்படுவதற்கு ஒரு வாரம் முன்புவரை வேலை மும்மரமாக நடந்து கொண்டுதான் இருந்தது. ஆனால் திடீரென்று ஒரு நாள் அக்கட்டடம் மின்னலால் தாக்கப்பட்டு கருகிப்போனது.

அந்த சபை மக்கள் உடனே தங்கள் மனநிலையில் கர்வத்தோடு காணப்பட்டனர். ஆனால், அக்கடை உரிமையாளர் தன் கட்டடம் இல்லாமல் போனதற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அச்சபைதான் காரணம் அல்லது பொறுப்பு என்று சபையின் மீது வழக்குத் தொடர்ந்தார்.

சபை அதற்கான பதிலை நீதிமன்றத்திற்கு அளிக்கும்போது அந்த மதுபானக்கடை இல்லாமல் போனதற்கு அல்லது எரிந்து போனதற்கு சபை எவ்விதத்திலும் பொறுப்பல்ல என்று திட்டவட்டமாக மறுத்தது.

நீதிமன்றத்தில் தொடர்ந்து வழக்கு நடந்து கொண்டிருக்கும் போது, வழக்கை விசாரித்த நீதிபதி விசாரணையின்போது, " இந்த வழக்கில் எப்படி தீர்ப்பளிப்பதென்று எனக்குத் தெரியவில்லை, ஆனால், நடந்த சம்பவங்களை வைத்துப் பார்க்கும்போது மது பானக்கடை உரிமையாளருக்கு ஜெபத்தின் வல்லமையில் நம்பிக்கை இருப்பதாகவும், ஒட்டுமொத்த சபைக்கு அதில் நம்பிக்கை இல்லையென்பதாகவும் தெரிகிறது " என்று சொன்னாராம். இது எப்படி?

# மன்னிப்பதும், மன்னிப்பு கேட்பதும்
# Forgiving and asking Forgiveness

Philemon Rajah

அன்பானவர்களே! மன்னிப்பு மனுக்குலத்தின் இன்றியமையாத தேவையாகும். மன்னிப்பதும், மன்னிப்புப் பெறுவதும் இல்லை என்றால், நாமெல்லாரும் இல்பொருளாகிவிடுவோம். தெய்வீக குணமாகிய மன்னிப்பைப் பற்றி நாம் வேதாகமத்தின் துணைகொண்டு படிப்போம்.

## I. ஏன் மன்னிப்பு தேவை?

### 1. உங்களுக்கு நீங்களே உதவி செய்து கொள்ள:

நான் பிறரை மன்னிப்பது என்பது, எனக்கு நான் செய்து கொள்ளுகிற மிகப்பெரிய உதவியாக இருக்கிறது. பல் துலக்குவது, குளிப்பது, உண்பது, சுவாசிப்பதை விட இது பேருதவியாக இருக்கிறது.

மன்னியாதிருந்தால், நம் ஆத்துமா கசப்பு, துர்க்குணத்தினால், விஷமேற்றப்பட்டதாகிவிடும். நம்மைக் காயப்படுத்தினவரை மன்னிப்பதால் நமக்கு நாமே நன்மை செய்கிறோம்.

### 2. உங்களை நீங்களே கட்டுப்படுத்த:

மன்னிப்பதின் மூலம் உங்கள் வாழ்க்கையை நீங்களே, எப்படி (அடக்கி ஆள்வது) கட்டுப்படுத்துவது என்பதைக் கற்றுக்கொள்ளுகிறீர்கள். மன்னிப்பதின் மூலம் நமது வாழ்வை நாம் கட்டுப்படுத்துகிறோம்.

மன்னிப்பு அழகானது, மன்னிப்பது ஒரு பரிசு, மற்றும் ஈடு இணையற்றதாகும். நாம் **இலவசமாக பெற்றதையே** பிறருக்கு இலவசமாகக் கொடுப்போம். மற்றவர்களை மன்னியாமலிருந்தால், நாம் பிறரை மன்னிக்க மாட்டோம்.

### 3. உங்களை நீங்களே தெய்வீக உறவுக்குள் நெருக்கமாக்க:

நம்முடைய பாவங்கள் இயேசு கிறிஸ்துவினால் மன்னிக்கப்பட்டதால், தேவனுடன் ஒரு நெருக்கமான உறவை மீண்டும் பெறுகிறோம்.

மனக்காயத்தின் வேதனையினின்றும், இதை ஏற்படுத்தும் காரியங்களையும், நபர்களையும் கண்டுகொள்ளாமல் விட்டு விடுவதன்

மூலம், நம் வாழ்வில் நீதியைக் கொண்டு வரும் நீதிபதியாகிய தேவனை **அவர் இருக்கின்றார்** என்ற அந்த விசுவாசத்தின் மூலம் விடுதலையை நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

**4. மன்னியாமையின் வேர்களானது மிகவும் அபாயகரமானது:**

அது ஆழமாக வளர்ந்து, நம் மனதின்ஆழத்தைப் பற்றி பிடித்துக்கொள்ளும். இது கண்ணியாக (ஆபத்து) நமக்கே மாறிவிடும். யாரோ ஒருவர் தண்டிக்கப்படும் வரை நம்மால் சந்தோஷமாக இருக்க இயலாது. இதையே, மன்னியாமை ஆழ்மனதில் இடித்துக்கொண்டே இருக்கிறது.

அ) தேவன் என்னை மன்னித்தார்.
ஆ) எதிரியை மன்னிக்கச் சொல்லி நமக்கு கட்டளையிட்டார்.
இ) அந்த சத்தியத்திற்கு ( போதனைக்கு ) கீழ்ப்படிய வேண்டும்.
ஈ) எதிராளிகளால் ஏற்படும் நஷ்டத்தை ( நமக்கு ஏற்பட்ட காயம், ஏமாற்றம் ) தேவன் ஈடு செய்வார்.

ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வாரமும் நாம் மனக்காயமடைந்து கோபமடையும்படியான வாய்ப்புகள் பல உண்டு. ஆனால், தேவ சித்தத்தைக் குறித்து, சரியான அறிவானது, இந்த கோபத்தைக் கடந்து செல்லத் தேவையான தைரியத்தைக் கொடுத்து தேவன் தந்த வாழ்வை அனுபவிக்க உதவும். **உங்களை துன்புறுத்திய ஒருவர் மீது நீங்கள் கோபமாக இருப்பது என்பது உங்கள் எதிரி சாகவேண்டும் என்பதற்காக நீங்கள் விம் குடிப்பதை போன்றது.** ஆம்! பிறரை மன்னியாதது என்பது, நம்மை நாமே அதிகமாக தீமை செய்து துன்புறுத்திக் கொள்வதாகும். நமக்குத் தீமை வராது இருக்க தேவன் நமக்குச் சொல்வதையே நம்ப வேண்டும், மற்றும் செயல்படுத்த வேண்டும்.

## II. இது நியாயமில்லை

உதாரணமாக, ஒரு குடும்பம் நல்ல நிலையில் கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டு விருத்தியாகி நன்றாக வளர்ந்திருந்தது. அவர்கள் சபை கூடுகைகளில் பங்கு கொள்வது உண்டு; ஆனால், கடவுளிடம் ஈடுபாடு கொள்ளாதிருந்தனர். எப்படியென்றால், தங்கள் தொழில், படிப்பு, தனி மனித வாழ்வில் தேவனுடைய சித்தம் நிறைவேற, தம் வாழ்வையும் செயல்களையும், வசனம் மட்டுமே கட்டுப்படுத்தும்படி அவர்கள் அனுமதிக்கவில்லை. எப்படியெனில், வசனம் தீர்மானிக்க நம்மை முழுவதும் அனுமதிப்பதென்பது, நமது தீர்மானம் மற்றும் சூழ்நிலை என்னவாக இருந்தாலும், **வேத வசனம் (தேவ சித்தத்திற்கு) சொல் லும்படி நம் முடிவுகளையும், செயல்களையும் மாற்றி அமைப்பது என்பது தான். இதுவே கடவுள் நம் வாழ்வை கட்டுப்படுத்துவது ஆகும்.**

இந்தக் குடும்பத்தினரின் வாழ்விலே புயல் வீசியது. கணவனோ, மனைவியோ ஒருவருக்கொருவர் உண்மை இல்லாதவர்களாய் மாறிவிட்டனர். இதன் விளைவு, வெறுப்பும், கசப்புணர்வும் அவர்களுக்குள்ளே வந்தது, பிறகு இது வளர்ந்தது. பாதிக்கப்பட்டவர் தன் குடும்பத்திலுள்ள மற்ற நபர்களிடம் அன்பு, கரிசனை, அரவணைப்பை எதிர்பார்த்தார். அவர்கள் சொன்னது: நீங்கள் எனக்கு பணம் தந்தீர்கள், படிப்பு தந்தீர்கள், ஆனால் எங்களுடைய உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளவில்லையே! எனவே, உங்களை புரிந்து கொள்ள எங்களாலும் முடியவில்லை என்றனர். குடும்பத்தினர் மீது இருந்த இந்த வெறுப்பு அவருக்கு கடைசியில் கடவுள் மீதே வந்தது.

நல்ல உழைப்பாளி தான்; குடும்பத்தை செழிப்பில் வளர்த்ததும் உண்மை தான்; ஆனால், தேவசித்தத்திற்குள் வளர்க்கவில்லையே! **கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா.** ( சங்127:1 ) இந்த வசனம் ஒரு செய்தி சொல்கிறது. கவனமாக இருப்போம்: ஏனென்றால் வெறுப்பு, மனக்கசப்பு, கோபம், மன்னிப்பு இல்லாநிலை இவைகள் சாத்தானுடைய குணம். இக்குடும்பம் சபையில் எண்ணிக்கையாக ( Number ) இல்லாமல், கிறிஸ்துவின் அங்கமாய் ( Member ) இருந்திருந்தால், பிரச்சனைகளில் வேத வசனம் அவர்களை கட்டுப்படுத்த, வழி நடத்த அனுமதித்திருந்தால், சுயநல மானவர்களாகவும் கரிசனையற்றவர்களாகவும் மாறுவது தடுக்கப் பட்டிருக்கும் அல்லது மாறியிருக்கும். கணவன், மனைவி ஒருவரை யொருவர் மன்னிக்க, அல்லது ஒருவர் பிறரிடம் மன்னிப்பு கேட்க நினைக்கவில்லை. காரணம், கிறிஸ்து மன்னிக்கச் சொன்னது நினைவிலே வரவில்லை. தனிப்பட்ட வேத தியானம், சபையில் நடைபெறும் வேதபாட வகுப்புகளில் ஈடுபாடு இல்லை. இதனால் அநேக பிரச்சனைகளை, தேவ ஆலோசனைப்படி சரி செய்யப்படு வதற்குப் பதில் வெடித்து சிதறியது.

**1. எல்லோருக்கும் கோபம் வரும் தானே?**

கொடுமையான நம் நிலையில் மிகவும் கோபம் வரும், சத்தங்கள் வெடிக்கும்; ஆனால், தேவ அன்பை அறிந்திருந்தால், தேவன் இத்தகைய துன்பங்களிலிருந்து தப்பித்துக்கொள்ள ஒரு வழியை உண்டாக்குவார் என்று மனது செயல்பட ஆரம்பிக்கும். அவரவர்க்கு தெரிந்த சரியானவற்றை செய்யும்படி தங்கள் உள் உணர்வினால் வாழாமல், ஜீவனுள்ள வாழ்வு வாழ, வசனங்களினாலே, எதிர்மறை உணர்வுகளை வசன சிறைக்குள் பூட்டிவிட்டு மன்னித்து இருந் திருக்கலாம்.

அநேகர் கோபத்துடன் இருப்போம். அந்த நிலையில் நமக்கு நாமே உதவி செய்து பிறரை மன்னித்து விடலாமே! மனிதனால் வரும்

ஏமாற்றத்தைத் தள்ளிவிட்டு தேவனுடன் சேர்ந்து கொள்ளலாமே! கடந்த காலத்தின் துன்பம், காயங்களில் மூழ்குவதைவிட எதிர் காலத்தை விசுவாசத்துடன் பார்த்து தன்னுடைய தவறுகளிடமிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்ளும் முயற்சியில், **வேத வசனம்** வேண்டாம் என்று சொல்வதை விட்டுவிட்டு, வேண்டும் என்று சொல்வதை செய்யலாமே!

**2. கோபத்தின் விளைவுகள்:**

நாமும்கூட கோபங்கொள்ள நிறைய காரணங்கள் உண்டு. சம்பள பிரச்சனை, பெரியவர்களின் அறிவுரை, பாத்ரூமை சுத்தமாக வைக்காதது, சீப்பு கிடைக்காதது அல்லது நன்றியில்லா பிள்ளைகள், மற்றும் கனிவற்ற வார்த்தைகளை கூறிவிட்டு வருத்தமே காட்டாத பெற்றோர் என நீண்டு கொண்டே பட்டியல் போகலாம். இதற்காக ஏன் உங்களை நீங்களே காயப்படுத்திக்கொண்டிருக்கிறீர்கள்? ஏன் உங்களை நீங்களே ஏமாற்றுகிறீர்கள்? காரணம், ' நமக்கு காயம் உண்டாக்கினவரைவிட, நமக்கு நாமே மிக மோசமான காயத்தை கோபத்தினால் உண்டாக்கிக் கொள்கின்றோம்' :

**3. கோபத்தினை வெற்றிக்கொள்ள**

**அ. தேவனிடம் ஒப்படையுங்கள்:**

கசப்புணர்வுள்ளவர்களாக, கோபமுள்ளவர்களாக உள்ள மனப்பான்மை எப்பொழுதுமே பிறர் மீது கோபத்தைக் காட்டிவிட்டு, நம்மை நாமே சரி என்றும் கூறிக்கொள்ளும். நமக்கு ஏற்படும் அநேக காரியங்கள் சரியாக இருப்பதில்லை. ஆனால், தேவனை நம்பி, அவரின் வசனம் சொன்னபடியே கீழ்ப்படிவோமென்றால், அவர் அதை நமக்கு சரிக்கட்டுவார். பழிக்கு பழி வாங்குவது பூமிக்குரிய (மனித) குணம்; ஆனால், இது இரட்சிக்கப்பட்ட விசுவாசியின் செயலே அல்ல: அதை தேவன் பார்த்துக்கொள்வார்( எபி 10:30 ) என்று விசுவாசித்து, பிறரை மன்னிக்க வேண்டும்.

மன்னிப்பது, என் கோபத்தை மற்றும் கசப்பை விட்டுவிட்டு, தேவன் தம்முடைய சொந்த வழியில் அவரே எனக்கு பிறர் செய்த தீமையைச் சரிசெய்யும்படி, தேவனை நான் நம்ப என்னை உற்சாகப் படுத்துகிறது. நான் மன்னிக்க வேண்டிய மக்கள் அநேகர் தகுதியற்ற வர்களும், என் மன்னிப்பை ஏற்காதவர்களும் மட்டுமல்ல, என்னை காயமடையச் செய்யக்கூடியவர்களாயும் இருக்கிறார்கள்.

நாம் மீண்டும் மீண்டும் மன்னிக்கின்ற தேவனை கொண்டுள் ளோம். நாம் பிறரை மீண்டும் மன்னிக்க வேண்டியது நிபந்தனையற்ற கட்டளையாகும்.

# மாயமற்ற விசுவாசம்

# The Genuine Faith

B. Arjunan

விசுவாசம் எல்லோருக்குள்ளும் இருக்கிறது. அந்த விசுவாசம் மாயமற்ற விசுவாசமாயிருக்கிறதா? இந்த மாயமற்ற விசுவாசத்தை அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவிடம் கண்டார். **உன்னிலுள்ள மாயமற்ற விசுவாசத்தை நினைவுகூருகிறதினால், என் முன்னோர்கள் முதற்கொண்டு சுத்த மனச்சாட்சியோடே ஆராதித்துவரும் தேவனை நான் ஸ்தோத்திரிக்கிறேன்** என்றார் ( 2 தீமோ. 1:4 ). இப்படிப்பட்ட விசவாசத்தை நாம் பார்ப்பது அரிதாயிருக்கிறது. இந்த **விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. அதனாலே முன்னோர்கள் நற்சாட்சி பெற்றார்கள்** ( எபி.11:1,2 ). நாம் காணாத ஒரு காரியத்தை விசுவாசிக்கும்போது அது உண்மையிலே இருக்கிறது என்று நம்புகிறோம். அதுவே சிறந்த விசுவாசமாயிருக்கிறது.

எடுத்துக்காட்டாக பாருங்கள் : **விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமானென்று சாட்சிபெற்றான்; அவனுடைய காணிக்கைகளைக் குறித்துத் தேவனே சாட்சி கொடுத்தார்; அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்** (எபி.11:4). காயீனும், ஆபேலும் காணிக்கைகளை தேவனுக்குச் செலுத்தினார்கள். இதிலே குறிப்பாக ஆபேலுடைய காணிக்கைகளை கர்த்தர் அங்கீகரித்தார். காயீனுடைய காணிக்கைகளை அவர் அங்கீகரிக்கவில்லை. இருவருமே காணிக்கை செலுத்தினார்கள். ஒருவனுடைய காணிக்கையை மட்டும் அங்கீகரித்ததன் காரணம் என்ன? **தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டுவந்தான். ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரித்தார்** என ஆதி.4:4-ல் படிக்கிறோம். ஆபேல், காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான் என வேதம் தெளிவாக எடுத்துரைக்கிறது. காணிக்கை செலுத்துவதில் போதனை இல்லாத நாட்களில்கூட ஆபேலுடைய இருதயத்தில் தேவனுக்கு முதல் தரமான கொழுமையானதை செலுத்த வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. காயீனுடைய விஷயத்தில் நாம் பார்க்கும்போது; அவன்

நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாக கொண்டுவந்தான் என்று தான் சொல்லப்பட்டிருக்கிறது. அவனோ ஒரு விவசாயி நிலத்தை பயிரிடுகிறவன். அதில் விளைந்த கனிகளைக் கர்த்தருக்கு கொண்டு வந்தான். ஆபேலுக்கும், காயீனுக்கும் என்ன வித்தியாசம். ஆபேல் தலையீற்றுகளில் முதன்மையானதை செலுத்தினான் என்பதே குறிப்பிடத்தக்கது. முதற்பலனை கொடுத்தான் என்பது இதன் தனிச்சிறப்பு என்று சொல்லலாம். இருதயத்தைப் பார்க்கிற கர்த்தரை, துவக்க காலத்திலே ஆபேல் நன்கு புரிந்துகொண்டு கர்த்தருக்குக் காணிக்கை செலுத்தினான். அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான் என்பது அவனுக்குக் கிடைத்த மாபெரும் பாக்கியம் என்றே சொல்ல வேண்டும். இவர்கள் எல்லாம் அநேக காரியங்களைக் காணாதிருந்தும் விசுவாசத்தினாலே கர்த்தரைத் தொழுதுகொண்டார்கள்.

விசுவாசத்தின் தகப்பன் ஆபிரகாமை நாம் அறிவோம். **ஆபிரகாம் பெயெர்செபாவிலே ஒரு தோப்பை உண்டாக்கி, சதா காலமுமுள்ள தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை அவ்விடத்தில் தொழுதுகொண்டான்** என ஆதி.*21:33*-ம் வசனத்தில் வாசிக்கின்றோம். அவனை அழைத்த கர்த்தரை நம்பி தன்னுடைய வீட்டையும், தேசத்தையும், இனத்தையும் விட்டு விட்டு, தேவன் காண்பிக்கிற தேசத்திற்கு கடந்துசென்று அங்கு தேவனைத் தொழுது கொண்டான். அநேகர் வெளியிடங்களுக்கு சென்றுவிட்டால் சபைக்கு போக வசதியில்லை. இங்கு சபை எங்கு இருக்கிறது என்று தெரியவில்லை. ஆகையால், நாங்கள் தேவனைத் தொழுது கொள்ள முடியவில்லை என்று சாக்குபோக்கு சொல்வதை கேள்விப்படுகிறோம். இந்த ஆபிரகாமைப்போல செல்லக்கூடிய இடத்தில் நாமே ஒரு தொழுகையை ஆரம்பித்தால், தேவனை அறியாத புறஜாதி மக்களும் ஜீவனுள்ள தேவனைத் தெரிந்துகொள்ள ஒரு வாய்ப்பு ஏற்படுமல்லவா! இதை ஏன் நீங்கள் செய்யாமல் ஒரு சில காரியங்களைச் சொல்லி அதற்குத் தடையாக இருந்துவிடுகிறீர்கள். நம்முடைய விசவாசம் சரியாய் இருக்கும்போது நாம் செல்லக்கூடிய இடங்களில் ஒரு இடத்தை தெரிந்துகொண்டு அங்கே கர்த்தரை நாம் தொழுதுகொள்ளலாம்.

மாயமற்ற விசுவாசம் நம் முற்பிதாக்களிடம் இருந்ததைப்போல தீமோத்தேயுவின் பாட்டியினிடத்திலும், அவனுடை தாயினிடத்திலும் இருந்ததாக பவுல் குறிப்பிடுகிறார்: **அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும் உன் தாயாகிய ஐனிக்கேயாளுக் குள்ளும் நிலைத்திருந்தது; அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன்** என்று எழுதுகிறார் (2தீமா.*1:5*). பாரம்பரியமாக அநேகரிடத்தில் தேவையற்ற காரியங்கள் தொங்கிக்கொண்டிருக்கிறது. ஆனால், மாயமற்ற விசுவாசம் தீமோத்தேயுவின் குடும்பத்தில்

காணப்பட்டது. அவனுடைய பாட்டி காலமுதல் அது அவர்களுடைய ஜீவியத்தில் தொடர்ந்தது. அன்பானவர்களே, நாம் ஆபிரகாமின் குமாரரும், குமாரத்திகளுமாயிருப்போமானால் நம்முடைய ஜீவியத்திலும் நம் முற்பிதாக்களின் விசுவாசம் காணப்படவேண்டும். காணாததை அவர்கள் விசுவாசத்தினாலே பெற்றுக்கொண்டார்கள்.

யோவான் 9-ம் அதி காரத்தில் ஒரு பிறவிக்குருடன் ஆண்டவர் இயேசுவினால் பார்வையடைந்தான். அவர் அவனை நோக்கி: நீ போய் ஸீலோவாம் குளத்திலே கழுவு அப்பொழுது பார்வையடைவாய் என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டார். பின்பு ஒரு முறை அவனை சந்திக்கும்போது நீ அவரைக் கண்டிருக்கிறாய் உன்னுடனே பேசுகிறவர் அவர்தான் என்றார். **உடனே அவன் : ஆண்டவரே, விசுவாசிக்கிறேன் என்று சொல்லி அவரைப் பணிந்துகொண்டான்** *( யோவா.9:38)*. காணாத அவன் விசுவாசத்தினாலே பின்பு கண்டுகொண்டான்.

அன்பானவர்களே, காணாதவர்கள் காணும்படியாகவும் காண்கிறவர்கள் குருடராகும்படியாகவும் நியாயத்தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன் என்று இயேசு சொல்கிறார். நீங்கள் அவரை காணவில்லை. ஆனால் விசுவாசிப்பீர்கள் என்றால் ஒரு நாள் அவரைக் காண்பீர்கள். இந்தவிதமான நம்பிக்கையிலே நாம் வளர்ந்து பெருக வேண்டும். பவுல் தீமோதேயுவுக்கு சொல்லும் ஆலோசனை என்னவென்றால்: **உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு** என்பதே *(தீமோ.4:12)*.

எல்லாவற்றிலும் ஓர் ஊழியன் விசுவாசிகளுக்கு மாதிரியாக இருக்கவேண்டியவனாயிருக்கிறான். அவனுடைய பிரசங்கத்தையும், நடத்தையையும் ஒவ்வொருவரும் உன்னிப்பாக கவனிப்பார்கள். ஆகையால், பவுல் எழுதும்போது, குறிப்பாக விசுவாசத்திலும் என்ற ஒரு வார்த்தையை படிக்கிறோம். ஊழியனுக்கு விசுவாசமானது மிக அவசியம். அநேகரை வழிநடத்தக்கூடிய அவனுக்கே விசுவாசமில்லாமல், நம்பிக்கையற்றவனாயிருப்பானேயானால் விசுவாசிகளை எப்படி விசுவாசப் பாதையில் நடத்த முடியும்? பவுலுடைய நாட்களில் பேதுருவினுடைய மாயமாலத்தை பவுல் கடிந்துகொள்கிறதை நாம் கலாத்தியர் 2:11-14 வசனங்களில் படிக்கிறோம். எப்படியெனில், **யாக்கோபினிடத்திலிருந்து சிலர் வருகிறதற்குமுன்னே அவன் புற ஜாதியாருடனே சாப்பிட்டான்; அவர்கள் வந்தபோது, விருத்த சேதனமுள்ளவர்களுக்குப் பயந்து, விலகிப் பிரிந்தான். மற்ற யூதரும் அவனுடனேகூட மாயம் பண்ணினார்கள் பர்னபாவும் இழுப்புண்டான். இப்படி அவர்கள் சுவிசேத்தின் சத்தியத்திற்கேற்றபடி சரியாய் நடவாததை நான் கண்டபோது, எல்லாருக்கும் முன்பாக நான் பேதுருவை**

**நோக்கிச் சொன்னது என்னவென்றால்; யூதனாயிருக்கிற நீர் யூதர் முறைமையாக நடவாமல், புறஜாதியார் முறைமையாக நடந்து கொண்டிருக்க, புறஜாதியாரை யூதர் முறைமையாக நடக்கும்படி நீர் எப்படிக் கட்டாயம் பண்ணலாம்?** என்றான். யாராக இருந்தாலும் உபதேச விஷயத்தில் நாம் கடிந்து கொண்டு கண்டனம் பண்ணி போதிக்க வேண்டியவர் களாயிருக்கிறோம். இதிலே பிரசங்கிக்கிற நாம் மிகவும் கவனமுள்ள வர்களாக இருக்கவேண்டும்.

விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாக வாழும்படி அநேகர் முயற்சிக்கிறார்கள். ஆனால், வேதம் நமக்குப் போதிப்பதென்ன? **விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்** என காண்கிறோம் *(எபி.11:6)*. தேவன் ஒருவர் உண்டென்பதை அநேகர் விசுவாசிப்பதில்லை. அப்படி விசுவாசிப் பார்களேயானால் அவர்கள் அவருக்குக் கீழ்ப்படிந்து தேவசித்தம் செய்ய ஒவ்வொரு நாளும் தங்களை ஒப்புக்கொடுப்பார்கள். ஆனால் பிசாசுகள் விசுவாசிப்பதைப்போல விசுவாசிக்கிறார்கள். அந்த விசு வாசம் ஒருவனுக்குள் இரட்சிப்பை கொண்டுவராது. ஏனெனில், பிசாசுகளும் தேவன் ஒருவர் உண்டென்று சொல்லி நடுங்குகின்றன. இதைக்குறித்து யாக்கோபு 2-ம் அதிகாரத்தில் 19-வது வசனத்தில் படிக் கிறோம். நம்மில் உள்ள விசுவாசத்தை காத்துக்கொண்டு ஒவ்வொரு நாளும் வெற்றியுள்ள கிறிஸ்தவர்களாக வாழவேண்டும். பேதுரு சொல் லுகிறார்; **கடைசிகாலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப் பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக்கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது** என்பதை நமக்கு நினைப்பூட்டுகிறார் *(1பேது.1:5)*. விசுவாசத்தைக் காத்துக்கொண்டு முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவர்களே இரட்சிக்கப்படுவார்கள். மற்றபடி உங்க ளுடைய விசுவாசம் வீணாய் போய்விடும். மேலும், சொல்லுகிறார்; **உங்கள் விசுவாசமும் நம்பிக்கையும் தேவன் மேலிருக்கும்படி, அவரை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவருக்கு மகிமையைக் கொடுத்தார். ஆகையால், நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோட ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்** என்கிறார் *(1பேது.1:21.22)*. அன்பு திரளான பாவங்களை மூடும். ஆகையால், நாம் ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூர வேண்டியவர்களாயிருக்கிறோம். அன்பு செலுத்துகிறேன் என்று வாயினால் சொல்லி விட்டு சகோதரனுக்கு விரோதமாக

நடப்போமென்றால் அந்த அன்பு எப்படிப்பட்ட அன்பாயிருக்கும். நாம் மாயமற்ற சகோதர சிநேக முள்ளவர்களாயிருந்து மாயமற்ற விசுவாசத்தோடு அன்பு செலுத்த வேண்டும். அன்பில்லாதவன் தேவனை அறியான். ஏனென்றால்: தேவன் அன்பாகவே இருக்கிறார். அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே.

இந்த விசுவாசத்தை நம்முடைய முற்பிதாக்கள் பெற்றவர் களாயிருந்து, கர்த்தருடைய சமூகத்தில் அநேக ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார்கள். மேலும், **விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள். நீதியை நடப்பித்தார்கள், வாக்குத் தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைந்தார்கள். அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலன் கொண்டார்கள்: யுத்தத்தில் வல்லவர்களானார்கள். அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள்** ( *எபி.11:33,34* ). இவைகளை யெல்லாம் தங்களுடைய விசுவாசத் தினாலே நடப்பித்து விசுவாசத்தினாலே வெற்றிகொண்டார்கள்.

**நம்முடைய மாயமற்ற விசுவாசத்தினால் நமக்குக் கிடைக்கும் பலன் என்ன?**

பலன் இல்லாமல் ஒரு காரியத்திற்காக போராடமாட்டோம். நாம் போராடுகிற ஒவ்வொன்றிற்கும் பலன் உண்டு. இதிலே ஆவிக்குரிய விஷயத்தில் அதிகமாகவே உண்டு. **உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்துமரட்சிப்பை அடைகிறீர்கள்** என பேதுரு குறிப்பிடுகிறார் *(1பேது.1:9 )*. ஆத்தும இரட்சிப்பு என்பது மிகவும் அருமையானது. நம் முடைய ஆத்துமா இப்பூமியில் இந்த மண்ணான சரீரத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறது. இந்த மண்ணான சரீரத்தை விட்டு ஆத்துமா ஒரு நாள் தேவனிடத்தில் எடுத்துக்கொள்ளப்படும். அப்பொழுது இந்த ஆத்துமா தேவனோடு நித்திய நித்தியமாக வாழ வேண்டும். அதற்காகவே நாம் தேவனுடைய கட்டளைகளின்படி ஒவ்வொரு நாளும் வாழும்படி ஆசைப்படுகிறோம். பரிசுத்த வேதாகமம் அதை நமக்குப் போதிக்கிறது. மனிதன் எதை எதையோ இரட்சிக்கிறான். ஆனால், அவனால் அவனுடைய ஆத்துமாவை இரட்சிக்க முடியாது. இரட்சிப்பு தேவனிடத்தில் இருக்கிறது. இரட்சிக் கிறவர் கர்த்தர். அவர் தமக்குச் சித்தமானவனை இரட்சிக்கிறார். அந்த இரட்சிப்புக்கு தேவையானது பணமோ, பொருளோ இல்லை. உங்களுடைய விசுவாசமோ! அந்த விசுவாசம் மாயமற்ற விசுவாசமாக இருக்கும்போது உங்களுடைய ஆத்துமா இரட்சிக்கப்படும். இந்த ஆத்தும இரட்சிப்பை பெற்றுக்கொள்ள உங்களுக்காக ஜெபிக்கிறோம். ✞

# சத்தியத்தை நேசி

# Love The Truth

Benny Martin

**நா**ம் வாழ்ந்து கொண்டிருக்கிற இவ்வுலகம் முன்னெப்போதையும் விட மோசமாகிவிட்டது என்பதற்கு ஆதாரமாக இவ்வுலகில் நடந்து கொண்டிருக்கும் சம்பவங்கள் உள்ளன. இன்றைய நாட்களில் விரல் நுனியில் பாவங்கள் அரங்கேறுகின்றன. பலர் பாவம் என்னும் வார்த் தையைப் பயன்படுத்துவதற்கே தயங்குகிறார்கள், அதைத் தவறு என்ற ழைத்து அதன் கோரத்தைக் குறைக்க விரும்புகிறார்கள். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று வேத வசனங்கள் சொல்கின்றன ( *பிலி.2:15* ). தேவனால் அழகாகப் படைக்கப்பட்ட இவ்வுலகம் அதன் அடையாளத்தைத் தொலைத்து அழிந்து போய்க்கொண்டிருப்பதற் கான காரணம் இவ்வுலகத்தின் மக்கள் சத்தியத்தை நேசிக்காமல் போவதுதான். சத்தியம் என்றால் என்ன? இவ்வுலகத்தின் மக்களிடம் இதைக் குறித்து விசாரித்தால், அவர்கள் ஆணையிடுதல் என்னும் பொருளைக் கொடுப்பார்கள். சத்தியம் என்பது ஒரு சமஸ்கிருதச் சொல். தமிழில் உண்மை என்பது அதன் பொருளாய் இருக்கிறது. பொய்கள் நிறைந்த இவ்வுலகில் பொய்க்குப் பிதாவாகிய பிசாசு சத்தியம் என்னும் வார்த்தையையே ஏறக்குறைய மக்களிடம் மறக்கடித்துவிட்டான். இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் சத்தியமாகிய தேவனு டைய வார்த்தையை இப்பாழாய்ப்போன உலகில் தூக்கிப்பிடிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். இப்போது சத்தியம் நம் வாழ்வில் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்றும், நாம் சத்தியத்தை எப்படிக் கையாள வேண்டுமென்றும் பார்ப்போம்.

## I. நாம் சத்தியத்தை நேசித்தால் அதைப்படிப்போம்

நாம் சத்தியத்தை நேசிப்பவர்களாக இருந்தால் அதற்கென்று நேரம் எடுத்து அதைப்படிப்போம். அப்போஸ்தலனாகிய பேதுரு நாம், சத்தியமாகிய தேவனுடைய வார்த்தையை ஒரு சிறு குழந்தை

பால் குடிக்க எவ்வளவு விரும்புகிறதோ, ஏங்குகிறதோ அதேபோல் நாம் விரும்ப வேண்டுமென்றும், அது நம்முடைய விருப்பமாக மட்டுமல்லாமல் நமக்கு அவசியமான ஒன்றாகவும் இருக்க வேண்டும் ( I பேதுரு *2:3* ) என்றும் கூறுகிறார். நாம் திருவசனமாகிய ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருந்து அதை உட்கொண்டால் தான் ஆவிக்குரிய பிரகாரமாக வளர முடியும். மேலும், 2 பேதுரு 1:5-7 வசனங்களில், இடம் பெற்றிருக்கிற கிறிஸ்தவ பண்புகளை நம்முடையதாக்கிக் கொண்டால்தான் நாம் ஆவிக்குரிய பிரகாரமாக வளர முடியும். நாம் தேவனுடைய வார்த்தையை நேசிக்கிறவர்களாக இருந்தால் நாள் முழுவதும் அது நம் தியானமாக இருக்க வேண்டும் ( *சங். 119:97* ). நாம் பல பிரசங்கங்களிலே வேத பாட வகுப்புகளிலே தேவனுடைய வார்த்தைகளைக் கேட்டாலும் தனிப்பட்ட வேத தியானத்திற்கு இணையாக நாம் எதையும் சொல்லவே முடியாது. இன்று பெரும்பாலான வாலிபர்கள் சினிமா கதைகளிலும், நாவல்களிலும் தங்கள் நேரத்தை விரயம் செய்வதை நாம் பார்க்கிறோம். அதற்குப் பதிலாக சத்தியமாகிய தேவனுடைய வார்த்தையை நேசித்து, அதைத் தியானித்துப் படித்தால் அது தேவனுக்கு எவ்வளவு பிரியமாக இருக்கும்!

## II. நாம் சத்தியத்தை நேசித்தால் அதற்கு ஆதரவாகப் பேசுவோம்

இன்று உலகத்தின் மக்கள் தேவனுடைய வார்த்தைகளிலிருந்து விலகி எவ்வளவு தூரம் போகமுடியுமோ அவ்வளவு தூரம் போக விரும்புகிறார்கள். அவர்கள் தங்களால் முடிந்தவரை தேவனுடைய வார்த்தையை எதிர்க்கிறார்கள். வேதாகமத்தைப் பின்பற்றுகிறோம் என்று சொல்கிறவர்கள் கூட அதில் சில ஓட்டைகளைக் கண்டுபிடித்து தங்கள் செயல்பாடுகளை நியாயப்படுத்த விரும்புகிறார்கள். நாம் உண்மை யாகவே தேவனுடைய வார்த்தையை நேசிக்கிறவர்களாக இருந்தால் மற்றவர்கள் அதைக் குறித்து இழிவாகப் பேசும்போது நாம் அதற்காக நின்று ஆதரவாகப் பேச வேண்டும். தாராளக் கொள்கைகள் ஏராளமாய் மலிந்து கிடக்கின்ற இந்நாட்களிலே நாம் அவைகளை நம் முழுபலத்தோடு எதிர்க்க வேண்டும். சிலவேளைகளில் பரிகாசத் திற்குட்படுத்தப்படும்போது நமக்கென்ன என்னும் மனப்போக்குடன் போய் விடுகிறோம். தேவனுடைய வார்த்தை தாக்குதலுக் குள்ளாக்கப்படும் போது, அது தவறாகப் போதிக்கப்படும்போது நாம் அவைகளைக் கடுமையாகக் கடிந்துகொள்ள வேண்டும். வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் ஏவப்பட்டது

என்பதற்கு நமக்கு விஞ்ஞானப்பூர்வமாக சரித்திரப் பூர்வமாக ஆதாரங்கள் உள்ளன. ( *2:தீமோ.3:16* ). எனவே, நாம் எதற்கும் பயப்பட வேண்டிய அவசியமோ அல்லது வெட்கப்பட வேண்டிய அவசியமோ இல்லை. நாம் தேவனுடைய வார்த்தையை நேசித்தால் முந்தைய தலைப்பில் வாசித்தோம். உலகத்தில் பல வாலிபர்கள் தாங்கள் விரும்பும் அரசியல்வாதிகளுக்காக நடிகர்களுக்காக, விளையாட்டு வீரர்களுக்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணிக்கும்போது, விசுவாச வீரர்களாகிய நாம் ஜீவனுள்ள வார்த்தையை வைத்துக் கொண்டு ஏன் சும்மா இருக்க வேண்டும்? அதே நேரத்தில் நம்மிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து நம்மிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும், வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல நாம் எப்பொழுதும் ஆயத்தமாயிருக்க வேண்டும் (I பேதுரு *3:15*).

## III. நாம் சத்தியத்தை நேசித்தால் அதற்குக் கீழ்ப்படிவோம்

சிலரிடம் உரையாடும் போது தாங்கள் சத்தியத்தை அதிகமாக நேசிப்பதாகவும் அதற்காக எதையும் செய்வதாகவும் வீரவசனம் பேசுவார்கள். ஆனால், அதற்குக் கீழ்ப்படிவதென்று வரும்போது மெத்தனப்போக்கை கடைபிடிப்பார்கள். நாம் உண்மையாகவே சத்தியத்தை நேசிக்கிறவர்களாக இருந்தால் அதற்குக் கீழ்ப்படிய வேண்டும். நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள் என்று இயேசு கிறிஸ்து சொன்னார் ( யோவான் *14:15* ). தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் வேத அறிவினால் அறியப்பட வேண்டும். அதைவிட நம் வாழ்வின் எல்லா நிலைகளிலும் சத்தியத்திற்குக் கீழ்ப்படிகிறோம் என்று அறியப்பட வேண்டும். யாக்கோபு ஆசிரியர் இது பற்றிச் சொல்லும் போது **அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர் களாயும் இருங்கள். என்னத்தினாலெனில் ஒருவன் திருவசனத்தைக்கேட்டும் அதின்படி செய்யாதவனானால், கண்ணாடியிலே தன் சுபாவ முகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான்; அவன் தன்னைத்தானே பார்த்து, அவ்விடம் விட்டுப் போனவுடனே தன் சாயல் இன்னதென்பதை மறந்து விடுவான்** என்று சொல்கிறார் ( யாக். *1:22-24* ).

பிரியமானவர்களே! சத்தியம் நமக்கு எதைப் போதிக்கிறதோ அதை அப்படியே நாம் செய்கிறவர்களாயிருக்க வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார். சத்தியத்தை நம் சூழ்நிலைக்கேற்ப திரித்துப்

பேசுவதோ, அதை மாறுபாடாகப் பேசுவதோ சத்தியத்தை நேசிப்பவர்களுக்கு ஏற்றதல்ல. அதேபோல் நாம் சத்தியத்தை நேசிக்கிறவர்களாக இருந்தால் அதை நாம் பகிர்ந்து கொள்வோம். நாம் சத்தியத்திற்குக் கீழ்ப்படியும் போது, சத்தியத்தின்படி நடக்கும்போது தேவனுக்கு கீழ்ப்படிந்து, அவருக்குப் பிரியமானவர்களாயிருப்போம். நாம் சத்தியத்தின்படி நடக்கத் தீர்மானிக்கும்போது பிசாசானவன் நம் பாதைகளில் பல பாடுகளையும், தடைகளையும் கொண்டு வருவான். நாம் அவைகளைப் பொருட்படுத்தாமல், அவைகளைத் தகர்ந்தெறிந்து தேவனுடைய வார்த்தையாகிய சத்தியத்திற்கு நாம் கீழ்ப்படியும்போது அதற்கான பலன் இப்பூமியிலும், பரலோகிலும் நமக்கு உண்டு என்பது நிச்சயம்.

அருமையான வாலிப உள்ளங்களே! இவ்வுலகில் நாம் திரைகடல் ஓடி திரவியம் தேடுகிறோம். ஆனால், சத்தியத்தைத் தேடுகிறோமா? அதை நாம் நேசிக்கிறோமா? அதை நாம் நேசித்தால் அதை தியானித்துப் படிப்போம். அது தாக்குதலுக்கு உள்ளாக்கப்படும் போது அதற்கு ஆதரவாக நாம் பேசி நம் அன்பை வெளிப்படுத்துவோம். நாம் சத்தியத்தை உண்மையாக நேசித்தால் அதற்கு நாம் கீழ்ப்படிவோம். நாம் சத்தியத்திற்காக இவைகளைச் செய்யும்போது தேவனால் வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருக்கிற ஆசீர்வாதங்களை நாம் அபரிதமாக சுதந்தரித்துக் கொள்வோம்.

✝

**வேதத்தை வாசிக்க நேரத்தைக் கண்டுபிடிப்பதற்கான ஐந்து வழிகள்**

1. தினமும் காலையில் பத்து நிமிடங்கள் முன்பாக எழுந்து வாசியுங்கள்.
2. தினமும் இரவில் வாசிக்கும்படி தலையணையின் கீழ் ஒரு வேதாகமப் பகுதியை வையுங்கள்.
3. நீங்கள் உங்கள் பேச்சை குறைத்துக் கொண்டால் வேதத்தை வாசிக்க சில நிமிடங்கள் கூடுதலாக கிடைக்கும்.
4. வேதாகமத்தை எடுக்காமல் எங்கும் பயணிக்க வேண்டாம்.
5. குடும்பமாக நீங்கள் சேர்ந்து சாப்பிடும்போது ஒன்று அல்லது இரண்டு வசனங்களை வாசியுங்கள்.




தேவன்

# ஓ! அந்தக் கைகள்!

# Oh, Those Hands!

*Harshel Dyer*

ஒருமுறை ஒரு சிறுபெண் தன் தாயைப் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தாள். அச்சிறு பெண் தாயின் கண்களையும் ,முடியையும், முகத்தையும் பாராட்டி விட்டு, பிறகு உங்கள் கைகள்..... என்று தன் சத்தத்தைக் குறைத்தாள்.

காரணம், அந்தத் தாயின் கைகள் உருமாறி அலங்கோல மாய்க் காட்சியளித்தன. தாய், தன் கைகள் உருமாறியதற்கான காரணத்தைத் தன் மகளிடம் விளக்குவதற்கு சரியான நேரம் அதுதான் என்று உணர்ந்தாள். சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பு தங்களது வீட்டில் ஏற் பட்ட தீ விபத்தைப்பற்றி தன் மகளிடம் சொன்னாள். தன் மகள் தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தபோது, அந்த அறையில் தீப்பிடித்துவிட்டது. உடனே அவள் ஓடிப்போய் தன் பிள்ளையைத் தூக்கியெடுத்துக் காப்பாற்றினாள். அப்படிச் செய்ததினால் அவள் கைகளில் தீப்பிடித்து காயங்கள் ஏற்பட்டு, தன் வாழ்நாள் முழுவதும் அது மாறாத தழும்புகளாகிவிட்டது என்றாள் தன் மகளிடம்.

தாயின் இவ்வார்த்தைகளை மிகவும் கவனமாகக் கவனித்துக் கொண்டிருந்த அந்த சிறுபெண், தன் தாயின் கரங்களை இப்போது மிகுந்த அக்கறை யுடனும், பாசத்துடனும் பார்த் தாள். மேலும், தன் தாயைப் பார்த்து, **உங்களிடத்தில் எனக்கு அதிகமாகப் பிடித்தது உங்கள் கைகள் தான்** என்று சொன்னாள்.

நம்முடைய ஆண்டவரின்

உயிர்த்தெழுதலின்போது இப்படியொரு சம்பவம் நடந்தது. இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்கள் கதவுகள் பூட்டப்பட்ட நிலையில் அவர்கள் மத்தியில் தோன்றினார். அப்பொழுது அவர்கள் அவரைப் பார்த்து ஆவியென்று எண்ணி பயந்தார்கள். ஆணிகளால் கடாவப்பட்ட தன் கைகளை அவர் அவர்களிடம் காட்டினபோது அவர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள். இயேசு கிறிஸ்து தமது சீஷர்களிடத்தில் வந்திருந்தபோது அப்போஸ்தலர்களில் ஒருவராகிய தோமா அங்கே இருக்கவில்லை. மற்ற அப்போஸ்தலர்கள் கர்த்தரைக் கண்டோமென்று அவனுடனே சொன்னார்கள். அதற்கு தோமா, அவருடைய கைகளில் ஆணிகளாலுண்டான காயத்தை நான் கண்டு அந்தக் காயத்திலே என் விரலைவிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்க மாட்டேன் என்று சொன்னார். மறுபடியும் எட்டு நாளைக்குப் பின்பு அவருடைய அப்போஸ்தலர்கள் வீட்டுக்குள்ளே இருந்தார்கள். தோமாவும் அவர்களுடனே இருந்தார்.

கதவுகள் பூட்டப்பட்டிருந்தது. அப்பொழுது இயேசு வந்து நடுவிலே நின்று உங்களுக்குச் சமாதானம் என்றார். பின்பு அவர் தோமாவை நோக்கி நீ உன் விரலை இங்கே நீட்டி என் கைகளைப் பார், உன் கையை நீட்டி என் விலாவிலே போடு என்றார் (யோவான் 20:27)

விசுவாசிகளின் கண்களுக்கு நம் மீட்புக்காக, ஆணிகளால் கடாவப்பட்ட இயேசுவின் கைகளைவிட அழகான கைகள் வேறெதுவும் இருக்க முடியாது!

---

நான் அவரை அறிந்து

அவர் அருகில் நின்று மீட்கப்படுவேன்

ஆணிகளால் கடாவப்பட்ட

அவருடைய கைகளால் அவரை

அறிந்து கொள்வேன்...



தேவன்

# இயேசு: துக்கம் நிறைந்தவரும் பாடு அனுபவித்தவருமாயிருந்தார்

# Jesus: A Man of Sorrows and Acquainted With Grief

*Perry N.Hall*

மனிதன் பாடுகள் சம்பந்தமான பிரச்சனைகளோடு போராடும்போது, மற்ற எல்லாரையும்விட அதிகப் பாடுகள் பட்ட ஒருவருடைய உதவி நமக்கு உண்டு என்பதை நாம் அறிந்து கொள்வது உண்மையாகவே நமக்கு ஆறுதலாக இருக்கிறது. நாம் அவரோடுகூடப் பாடுபட்டால் அவரோடு கூட நாம் மகிமைப்படுத்தப் படுவோம் (ரோமர் 8:17).

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன புத்தகமாகிய ஏசாயா புத்தகத்தில் இயேசு கிறிஸ்து பாடு அனுபவிக்கும் தாசனாக காட்டப் பட்டிருக்கிறார். குறிப்பாக, ஏசாயா 53:3-ல் அவர் துக்கம் நிறைந்தவரும் பாடு அனுபவித்தவருமா யிருந்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வதிகாரத்தின் ஒன்பது வசனங்களுக்கிடையில் பன்னிரெண்டு முறை தீர்க்கதரிசி, கிறிஸ்து பட்ட பாடுகளெல்லாம் நமக்காகத்தான் என்பதை திரும்பத் திரும்ப வலியுறுத்துகிறார். மனிதனை பாவத்தின் விளைவுகளிலிருந்து காப்பாற்றவும், அவனை மகா தண்டனையிலிருந்து தப்புவிக்கவும் இயேசு கிறிஸ்து அப்பாடுகளையெல்லாம் நமக்குப் பதிலாக சகித்தார். **நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது.** அவர் துக்கம் நிறைந்தவராக இருந்தார் என்னும் வெளிப்பாட்டை நாம் சற்று உற்றுப் பார்க்கும்போது இந்த வார்த்தையானது மனித இனத்தில் இயேசு கிறிஸ்துவுக்கு

மட்டும் தான் பொருந்தும். இயேசு கிறிஸ்து மனித உருவ மெடுத்து நமக்காகப் பாவ மானார். மனிதர்களுடைய வலி, வேதனையை அவர் உணர்ந்தார், தனிமையை உணர்ந்தார், அவர் பாடுபட்ட வர்களோடு சேர்ந்து பாடு பட்டார் அதே நேரத்தில் அவர் எவர்களை நேசித்தாரோ அவர்களால் நிராகரிக்கப் பட்டதோடு, அதனால் ஏற்படும் துக்கத்தையும் அவர் அறிந்திருந்தார். அவர் யாரை இரட்சிக்கும்படி வந்தாரோ, அவர்களால் வெறுக்கப்பட்ட போது அதனால் ஏற்படும் துக்கத்தையும் அவர் அறிந்திருந்தார்.

பாவமில்லாத அவர் மீது இவ்வுலகத்தின் ஒட்டுமொத்த பாவமும் சுமத்தப்பட்டது. பிதா தம்மை கைவிட்டுவிட்டார் என்று தெரிந்திருந்தாலும் கூட, வலியும் வேதனையும் நிறைந்த அந்த சிலுவைப்பாடுகளை அவர் சகித்தார். இயேசு கிறிஸ்து இப்பூமியில் சஞ்சரித்த நாட்களில் அவர் அழுதார், கதறினார், பலமுறை துன்பப் படுத்தப்பட்டார். மேலும், அவர் நம்மைப் போல சோர் வடைந்தார், களைப்படைந் தார்.

நம் பலவீனங்களை யெல்லாம் அவர் அறிந்திருந் தார். **நம்மைப் போல் அவர் எல்லாவிதத்திலும் சோதிக்கப் பட்டும், அவர் பாவம் செய்ய வில்லை; ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும் ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத் தண்டையிலே சேரக்கடவோம்** *(எபி 4:16)*. இயேசு கிறிஸ்துவுக்கு மனிதர்கள் மீதிருந்த அன்பினிமித்தமாக, அநேகம் பிள்ளைகள் மகிமை யில் கொண்டுவரும் படியா கவும், துக்கம் நிறைந்த தமக்குச் சந்தோஷத்தை அநேகம் பிள்ளைகள் ஏற்படுத்தும் படியாகவும் அவர் அவமானத் தை எண்ணாமல் சிலுவையைச் சகித்தார் *(எபிரெயர் 2:10;12:2)*.

மனிதப்பாடுகள் சம்பந்தமான பிரச்சனைகள் என்று வரும்போது இயேசு கிறிஸ்து, நாம் பின்பற்றும்படி நமக்கு மாதிரியை வைத்துப் போயிருக்கிறார். அவருடைய அடிச்சுவடுகளை நாம் பின்பற்றுவோம் (I பேதுரு *2:19-25)*.

# கவனத்தை ஈர்க்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வாக்கியங்கள்

## Striking Statements oF Jesus Christ


David R. Kenney

இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளில் கவனத்தை அதிகமாக ஈர்த்தது எது? சமீபத்தில் பதிலுக்காக எனக்கு முன்பாக வைக்கப்பட்ட கேள்வி இதுதான். நான் ஒன்றைத் தெரிந்தெடுக்க முயற்சிக்கிறேன் என்று கற்பனை செய்து கொள்ளுங்கள்! ஆனால், என்னால் எதையும் தெரிந்து கொள்ள முடியவில்லை. இவ்வுலக வரலாற்றில் கடந்த காலத்திலும், நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் இயேசு கிறிஸ்து பிரபலமாயிருந்தார், இருக்கிறார், இருக்கப்போகிறார். இயேசு கிறிஸ்துவின் வாக்கியங்களில் எனக்கு பிடித்தமான மூன்றை குறிப்பிட்டு அது ஒரு தாக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக அதை ஒருங்கிணைக்க ஆசைப்படுகிறேன்.

என் மனதுக்கு வரும் முதல் வாக்கியம் யோவான் 8:58 தான். இவ்வசனப்பகுதியில், இயேசு கிறிஸ்து யூதர்களிடம், உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று சொன்னது. அப்பொழுது யூதர்கள் அவரை நோக்கி, உனக்கு இன்னும் ஐம்பது வயதாகவில்லையே, நீ ஆபிரகாமைக் கண்டாயோ என்று கேலி செய்தார்கள். அதற்கு இயேசு ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று பதிலளித்தார் (யோவான் 8 : 58 )

சிலர் இவ்வாக்கியத்தின் முக்கியத்துவத்தை குறைத்து விடுகிறார்கள். இது மோசே தேவனிடம், இஸ்ரவேல் புத்திரரிடத்தில் போய் உங்கள் பிதாக்களுடைய தேவன் உங்களிடத்தில் என்னை அனுப்பினார் என்று அவர்களுக்குச் சொல்லும் போது, அவருடைய நாமம் என்ன என்று அவர்கள் என்னிடத்தில் கேட்டால் நான்

அவர்களுக்கு என்ன சொல்லுவேன் என்றான். அதற்குத் தேவன் இருக்கிறவராக இருக்கிறேன் என்று மோசேயுடனே சொல்லி, இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக என்றார். இது இவ்வார்த்தைகளை நமக்கு நினைவுப்படுத்துகிறது. ( யாத்திராகமம் 3 :14 ) நான் இருக்கிறவராகவே இருக்கிறேன் என்னும் நாமம் தேவனுடைய மகிமையான பண்புகள் எல்லாவற்றிலும் அவருடைய நித்திய தெய்வீகத் தன்மையைப் பற்றிப் பேசுகிறது. இயேசு கிறிஸ்து இந்த வார்த்தைகளைச் சொன்னபோது தாம் தேவனுடைய பண்புகளையும், அதிகாரத்தையும் பெற்றிருப்பதாகவே சொன்னார். இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையை உணர்ந்து கொள்ளாத யூதர்கள் அவர் தேவதூஷணம் செய்து விட்டார் என்று சொல்லி அவர்மேல் கல் எறியும்படி கல்லுகளை எடுத்துக் கொண்டார்கள். ( யோவான் 8:59 ) இயேசுவின் கவனத்தை ஈர்க்கும் இந்த வார்த்தைகள் இன்று இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனாக ஏற்றுக் கொள்ளாதவர்களுடை கவனத்தையும் ஈர்க்கிறதாகவே உள்ளது.



கவனத்தை ஈர்க்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாவது வாக்கியம், சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்பது; ( யோவான் 8 : 32 ) இங்கே சத்தியம் நம்மை விடுதலையாக்கும் ஒன்றாக விவரிக்கப்பட்டிருக்கிறது. சிலர், நாங்கள் பாவத்திலிருப்பதையும், பாவத்திற்கு அடிமைகளாயிருப்பதையும் உணராதிருக்கிறார்கள்.

கவனத்தை ஈர்க்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூன்றாவது வாக்கியம் நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன் என்பது. (யோவான் 14:5,6 ) நம்முடைய நாட்களில் நம் கவனத்தை அதிகமாக ஈர்க்கும் வாக்கியமாக இது இருக்கிறது. ஒருவர் கிறிஸ்தவத்திற்கு வெளியே இருந்து கொண்டு உலக மதங்களின் நம்பிக்கைகளைப் பின்பற்றிக் கொண்டு இயேசுவையும் பின்பற்றுவதாக உரிமை கோர முடியாது. நிச்சயமாக, ஒருவேளை ஒருவர் தான் இயேசுவைப் பின்பற்றுவதாகச் சொல்லிக் கொள்ளலாம். ஆனால், சொல்லிக் கொள்வதற்கும், பெற்றுக் கொள்வதற்கும் பெரிய வேறுபாடு இருக்கிறது.

மேற்சொல்லப்பட்ட மூன்று வாக்கியங்களையும் இணைத்துப்பார்த்தால், உலகில் காணப்படும் பிரபலமான தத்துவங்களுக்கு எதிராக....

பிரபலமான தத்துவங்களுக்கு எதிராக சத்தியம் தொடர்ந்து இருந்து வருகிறது.

பிரபலமான தத்துவங்களுக்கு எதிராக சத்தியம் தனித்துவம் வாய்ந்ததாயிருக்கிறது.

பிரபலமான தத்துவங்களுக்கு எதிராக சத்தியம் வியக்கத்தக்கதாயிருக்கிறது.

பிரபலமான தத்துவங்களுக்கு எதிராக சத்தியம் பகுத்தறியத்தக்கதாயிருக்கிறது.

பிரபலமான தத்துவங்களுக்கு எதிராக நாம் சத்தியத்தை அறிந்து கொண்டால், அது நம்மை விடுதலையாக்குகிறது.

பிரபலமான தத்துவங்களுக்கு எதிராக நாம் சத்தியத்தை அறிந்து கொள்ள மறுத்தால், அது நம்மை இழந்து போகச் செய்கிறது.

நாம் பிதாவினிடத்தில் போய்ச் சேருவதற்கு இயேசுவே ஒரே வழி. இயேசுவின் வார்த்தை மட்டுமே. சத்தியம் அவருடைய வார்த்தைக்கு வெளியே ஆவிக்குரிய மரணமே காத்திருக்கிறது. அநேகமாக இந்த மூன்று வாக்கியங்களும், இன்றைய உலகில் காணப்படும் கருத்துக்களுக்கு எதிரான பட்டியலில் முதல் மூன்று இடங்களில் படிக்கத்தக்கவைகளாயுள்ளன. ✝

# புதிய ஏற்பாட்டு புத்தகங்கள்

## THE BOOKS OF THE NEW TESTAMENT

ALLEN WEBSTER

*27* புத்தகங்கள் / *260* அதிகாரங்கள் / *7956* வசனங்கள் / *1,38,020* வார்த்தைகள்

வாரத்தில் ஐந்து நாட்கள் தினமும் ஓர் அதிகாரத்தை வாசித்தால் ஒரு வருடத்தில் புதிய ஏற்பாட்டை வாசித்து முடித்து விடலாம். தினமும் **மூன்று** அதிகாரங்களாக வாசித்தால் வருடத்திற்கு நான்கு முறை வாசித்து முடிக்க முடியும். தினமும் **ஒன்பது** அதிகாரங்கள் வாசித்தால் ஒரே மாதத்தில் புதிய ஏற்பாட்டை வாசித்து விடமுடியும்.

**கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறு (4)**

† **மத்தேயு** - கிறிஸ்து யூதர்களின் ராஜா (யூதர்களுக்கு எழுதப்பட்டது)
முக்கிய வசனங்கள் - *2:2; 21:5; 25:34,40; 27:11,29,37; 27:42.*

† **மாற்கு** - கிறிஸ்து தேவனுடைய தாசன் (ரோமர்களுக்கு எழுதப்பட்டது).
முக்கிய வசனங்கள் - *10:43,45*

† **லூக்கா** - கிறிஸ்து மனுஷகுமாரன் (புறஜாதிகளுக்கு எழுதப்பட்டது)
மனுஷகுமாரன் என்ற பதம் 26 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.
முக்கிய வசனங்கள் - *5:24; 6:5; 9:22,26,44,56,58; 19:10*

† **யோவான்** - கிறிஸ்து தேவனுடைய குமாரன் (எல்லோருக்காகவும் எழுதப்பட்டது).
முக்கிய வசனங்கள் - *1:35, 43; 3:18; 9:35; 11: 4,27; 19:7; 20:30, 31.*

**கிறிஸ்துவின் சபை வரலாறு (1)**

† **அப்போஸ்தலருடைய நடபடிகள்** - மனமாற்றமடைந்து கிறிஸ்துவினிடத்தில் சேர்ந்தவர்களைப் பற்றிய வரலாறு
முக்கிய வசனங்கள் - *2: 38-41; 8:35-40; 9: 1-5; 10;1-7; 19:1-6*

கிறிஸ்துவுக்காக வாழ்வதற்கான நிருபங்கள் (21)

† ரோமர் - கிறிஸ்துவுக்குள் நீதி. நீதி என்னும் வார்த்தை **31 முறை** இடம்பெற்றுள்ளது.
முக்கிய வசனங்கள் - *1,16,17; 3:22,25,26;10:3-6,10; 14:17.*

† I. கொரிந்தியர் - கிறிஸ்துவின் சபையில் எழுந்த பிரச்சனைகளைக் கையாளுதல்
முக்கிய வசனங்கள் - *1:10 -12*

† II. கொரிந்தியர் - உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்
முக்கிய வசனங்கள் - *13:5-9*

† கலாந்தியர் - கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விட்டு விலகாதிருங்கள்
முக்கிய வசனங்கள் - *1:6-9*

† எபேசியர் - கிறிஸ்துவின் சரீரத்தில் ஒன்றாயிருங்கள்
முக்கிய வசனங்கள் - *4:1-3*

† பிலிப்பியர் - கிறிஸ்துவுக்குள் சந்தோஷமாயிருங்கள் சந்தோஷம் என்னும் வார்த்தை 18 முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது.
முக்கிய வசனங்கள் - *1:26; 3:1; 4:4*

† கொலொசெயர் - சபைக்குத் தலையாயிருக்கிற கிறிஸ்துவுக்கு கீழ்ப்படியுங்கள்
முக்கிய வசனங்கள் - *1:18*

† I. தெசலோனிக்கேயர் - கிறிஸ்து மீண்டும் வருகிறார்
முக்கிய வசனங்கள் - *4:13-18*

† II. தெசலோனிக்கேயர் - நீங்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறபடியால் பொறுமையாயிருங்கள்
முக்கிய வசனங்கள் - *3:5*

† I. தீமோத்தேயு - விசுவாசத்தில் நல்ல போரட்டத்தைப் போராடு
முக்கிய வசனங்கள் - *(6:12)*

† II. தீமோத்தேயு - கிறிஸ்துவின் திருவசனத்தைப் பிரசங்கி
முக்கிய வசனங்கள் - *4:1-2*

† தீத்து - கிறிஸ்துவுக்காக நற்கிரியைகளைத் தொடர்ந்து செய்
முக்கிய வசனங்கள் *- 2;7, 14; 3:8,4*

† பிலேமோன் - கிறிஸ்துவுக்குள் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுங்கள்
முக்கிய வசனங்கள் *- 1:12, 15, 17*

† எபிரெயர் - கிறிஸ்து மேலானவர். மேலானவர் என்று பன்னிரெண்டு முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது.
முக்கிய வசனங்கள் *- 1;4; 7;19; 8;6; 11;8,16*

† யாக்கோபு - கிறிஸ்துவுக்காக நடைமுறை வாழ்க்கை
முக்கிய வசனங்கள் *- 1;26, 27*

† I. பேதுரு - கிறிஸ்துவுக்காகப் பாடுபடுதல். பாடுபடுதல் என்று பதிமூன்று முறைகள் வருகிறது.
முக்கிய வசனங்கள் *- 2:19-23; 3:14, 17,18; 4:15, 16, 19*

† II. பேதுரு - கிறிஸ்துவைப் பின்பற்றுபவராக உங்கள் விசுவாசத்தோடு இவைகளைக் கூட்டுங்கள்
முக்கிய வசனங்கள் *- 1;5-10*

† I. யோவான் - கிறிஸ்துவுக்குள் இருக்கும் உங்கள் அன்பு சகோதரனிடமும் இருக்கட்டும். அன்பு என்னும் பதம் 37 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.
முக்கிய வசனங்கள் *- 3;11,14;16- 18; 4;7,8*

† II. யோவான் - கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருங்கள்
முக்கிய வசனங்கள் *- 1:9-11*

† III. யோவான் - கிறிஸ்துவுக்கு உடன் வேலையாட்களாயிருங்கள்
முக்கிய வசனங்கள் *- 1:5,8*

† யூதா - ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காகத் தைரியமாய்ப் போராடுங்கள்
முக்கிய வசனங்கள் *- 1:3.*

† தீர்க்கதரிசனம் (1) - கிறிஸ்துவுக்குள் வெற்றி
முக்கிய வசனங்கள் - *12:11; 15;2.*

**என்னைத்தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது. நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்** *(யோவான் 12:48).* ✞

இரட்சிப்பு

# ஞானஸ்நானம்

## நாம் ஒத்துக் கொள்ளக் கூடியதா?

## Baptism, Can We Agree?

*Owen D.Olbricha*

கிறிஸ்தவ மத உலகில், நாம் ஞானஸ்நான காரியத்தில் ஒத்துக்கொள்ள முடியாது என்னும் பொதுவான கருத்து நிலவுகிறது. உங்கள் அபிப்பிராயம் இது, நமக்குள் ஓர் உடன்பாடு வராத காரணத்தால் நாம் ஞானஸ்நானத்தைப் பற்றி விவாதிக்கவே வேண்டாம் என்று பலர் பேசுவதை நாம் அவ்வப்போது கேட்கிறோம்.

ஆனால், பேதுரு, அனனியா மற்றும் பவுலைப் பொறுத்தவரை அது அப்படியாயிருக்கவில்லை. அவர்களுக்கு இயேசுவின் உபதேசத்தோடு உடன்பாடு ஏற்பட்டால், நமக்குள் இயேசுவின் காரியங்களோடு ஒருமனம் ஏற்பட்டு ஞானஸ்நானம் சம்மந்தமாக ஒருவருக்கொருவர் உடன்பாடு ஏற்பட வேண்டும்.

### பேதுரு இயேசுவின் வார்த்தைகளை ஏற்றுக்கொண்டார்

சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும்போது அந்த சுவிசேஷத்தை விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் இயேசு கிறிஸ்து போதித்தார் (மாற்கு 16:15,16) அப்போஸ்தலனாகிய பேதுரு அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப் பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவிமுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது ( I பேதுரு 3:21 ) என்று இயேசுவின் வார்த்தைகளை ஏற்றுக்கொள்கிறார் என்று நமக்குத் தெரிய வருகிறது.

### பவுல் இயேசுவின் வார்த்தைகளை ஏற்றுக் கொண்டார்

ஒருவர் ஜலத்தினாலும், ஆவியினாலும், பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று இயேசு போதித்தார் ( யோவான் 3:5 ) அப்போஸ்தலனாகிய பவுல் ஒருவர்

புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும் படிக்கும், பாவத்தில் மரித்தவர்கள் உயிர்ப்பிக்கப்படும்படியாகவும் ஞானஸ்நானம் பெறவேண்டுமென்றும் பவுல் போதித்தார் ( கொலோ *2:11-13* ).

**பேதுரு, அனனியா மற்றும் பவுலும் ஏற்றுக்கொண்டனர்.**

ஞானஸ்நானம் பெறுகிறவர் சுவிசேஷத்தை விசுவாசிக்க வேண்டுமென்று இயேசு கிறிஸ்து போதித்தார் (மாற்கு *16:15,16* ). இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்ததை உள்ளடக்கியது தான் சுவிசேஷம் ( I கொரிந்தியர் *15:1-3* ). எனவே, ஒருவர் ஞானஸ்நானம் பெறும்போது சுவிசேஷத்தை விசுவாசிப்பது, அவருடைய பாவங்கள் மன்னிக்கப்படுகிறது என்பதை விசுவாசிப்பதையும் உள்ளடக்கியதாகும். இவைகளை பேதுரு ஏற்றுக்கொண்டார். மேலும், அவர் சொல்லும் போது அந்த இயேசுவை நீங்கள் பிடித்து அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தீரகள் என்று சொன்னார் ( அப் *2:235 36 3741* ) பேதுரு அவர்களை நோக்கி; நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் ( அப்போஸ்தலர் *2:38* ) என்றார். இயேசுவின் செய்தியைக் கொண்டுசென்ற அனனியா இதை ஏற்றுக்கொண்டார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சவுல் என்ன செய்ய வேண்டுமென்று அறிவிப்பதற்காக அனுப்பினார்? ( அப்போஸ்தலர் *9:6,10-16* ). அனனியா போய் சவுல் ( பின்னாளில் பவுல் )பாவங்கள் கழுவப்பட ஞானஸ்நானம் பெறும்படி அறிவித்தார். ( அப் *22:16* ) தேவனுடை ய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே ஒருவர் ஞானஸ்நானம் பெறும்போது. அந்த நபருடைய எல்லா அக்கிரமங்களிலிருந்தும் மன்னிப்படைகிறார் ( கொலோ. *2:12,13* )

**முடிவுரை**

நாம் இயேசுவின் வார்த்தைகளை அவருடைய உண்மையுள்ள அப்போஸ்தலர்களைப் போலவும், முதல் நூற்றாண்டில் வாழ்ந்த பரிசுத்தவான்களைப் போலவும் ஏற்றுக்கொண்டால் பலரால் முரண்பாடான தலைப்பாகப் பார்க்கப்படுகிற ஞானஸ்நான காரியத்தில் நாம் ஒருவரொடு ஒருவர் உடன்படுவோம். ஒரு பாவி தன் பாவங்கள் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினாலே கழுவப்பட வேண்டுமென்று விரும்பினால் அவரை விசுவாசித்து ஞானஸ்நானம் பெறும்போது அவரை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிடும்போது ஒரு பாவியின் பாவங்கள் கழுவப்படுகிறது. ✞

# ஒன்று தானா அல்லது அநேகமா?

# Is these one or Are there Many?

Tim Childs

- எல்லாவற்றுக்கும் மேலான பிதாவாகிய தேவன் ஒருவரே.
- தேவனுடைய ஒரேபேறான குமாரனாகிய இயேசு ஒருவரே.
- பரிசுத்த ஆவியானவர் ஒருவரே.
- மாற்ற முடியாத வேதாகமம் ஒன்றே.
- பரலோகத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்ட விசுவாசம் ஒன்றே.
- தேவனுடைய ஆவிக்குரிய குடும்பமாகிய சரீரம் ஒன்றே.
- சரீரத்தை ஆளுகை செய்கிற தலை ஒன்றே.
- பிரமாணத்தை தருகிறவர் ஒருவரே
- இயேசுவின் சீடர்கள் எந்த நம்பிக்கைக்காக அழைக்கப்பட்டார்களோ அந்த நம்பிக்கை ஒன்றே.
- பிரதானக் கட்டளையின் ஞானஸ்நானமாகிய ஞானஸ்நானம் ஒன்றே.
- இரட்சிப்புக்கு தேவ பெலனாயிருக்கிற சுவிசேஷம் ஒன்றே.
- எல்லா மனுஷரும் சுற்றி நிற்க வேண்டிய சிலுவை ஒன்றே.
- எல்லா மனிதர்களுக்கும் நியாயாதிபதி ஒருவரே.
- அன்பின் ஊற்றாக இருக்கிற தேவன் ஒருவரே.
- உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி ஒருவரே.
- நித்திய ஜீவனுக்கு வழிவகுக்கிற இடுக்கமான வாசல் ஒன்றே.
- கேட்டுக்குப்போகிற வரிவான, விசாலமான வாசலும் ஒன்றே. ✝

# பிரதான கட்டளையின் மகத்துவம் தான் என்ன?

## What's So Great About The Commission?

David DeffenBaugh.

சில வேளைகளில் பழகப் பழக பாலும் புளிக்கும் என்கிற பழமொழி உண்மையாகிவிடுகிறது. அதினிமித்தம் அது உதாசினப்படுத்தப்படும் அளவுக்கு மோசமாகி விடுகிறது. பிரதான கட்டளையைவிட மிகப் பரிச்சயமான வசனம் கிறிஸ்தவர்கள் மத்தியில் எதுவும் இருக்க முடியாது என்று நான் நினைக்கிறேன். **பின்பு அவர் அவர்களை நோக்கி; நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேத்தைப் பிரசங்கியுங்கள், விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்க்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்** மாற்கு *(16:15 16)* என்றார்.

பிரதான என்கிற வார்த்தையானது, அது பயன்படுத்தப் படுகிறபடியே அதற்குத் தகுதி வாய்ந்ததாயிருக்கிறது. அது எந்த அளவு பரிச்சயமாயருக்கிறதோ அந்த அளவு அது பொருத்தமாயிருக்கிறது. இப்பிரதானக் கட்டளை எத்தனை காலமாய் இருக்கிறது? இயேசு கிறிஸ்து கொடுத்த கட்டளையை எது பிரதான கட்டளையாக மாற்றுகிறது?

### *1. சொன்னது யார்?*

சில வேளைகளில் குறிப்பிட்ட மக்கள் பேசும்போது ஜனங்கள் கேட்பார்கள். உதாரணமாக, பில்கேட்ஸ் கணினி பற்றி ஏதாவது பேசினால் ஜனங்கள் உற்சாகமாக அதைக் கேட்பார்கள். அது போல, பொருளாதார மேதை ஒருவர் பொருளாதாரத்தைப் பற்றிப் பேசினால் ஜனங்கள் அதைக் கவனிப்பார்கள். பிரபல எழுத்தாளர் ஒருவர் எழுதினால் ஜனங்கள் அதை ஆர்வத்துடன் வாசிப்பார்கள். மேற்சொல்லப்பட்டவர்களை அறியாமலேயே ஒருவரால் வெற்றியுள்ள வாழ்க்கை வாழ முடியும் என்பது உண்மையாக இருந்தாலும் கூட, இவ் வுண்மையானது இயேசு கிறிஸ்துவுக்குப் பொருந்தாது. ஏனென்றால், நித்திய ஜீவ வசனங்கள் இயேசுவினிடத்தில் மட்டுமே உண்டு என்று அப்போஸ்தலனாகிய பேதுரு சொல்லியிருக்கிறார். ( யோவான் *6:68* ). இவ்வுண்மைதான் இயேசுவின் கட்டளையைப் பிரதானமாக்குகிறது.

## 2. யாருக்குப் பொருந்துகிறது?

மேலே நாம் கண்ட பிரபலங்களெல்லாம். அதாவது, ஒரு கணினி நிபுணரோ, பொருளாதார மேதையோ, சிறந்த ஒரு எழுத்தாளரோ ஒரு குறிப்பிட்ட வட்டத்தின் மீதே தாக்கத்தை ஏற்படுத்த முடியும். ஏனென்றால், ஒட்டுமொத்த மக்களும் கம்ப்யூட்டர்களைப்பற்றியோ, பொருளாதாரத்தைப் பற்றியோ அல்லது நாவல்களைப்பற்றியோ கவலைப்படுவதில்லை. இவர்கள் சமுதாயத்தில் ஒரு பிரிவினராக இருக்கிறார்கள். ஆனால், இயேசுவின் வார்த்தைகள் எல்லோருக்கும் பொருந்துகிறதாக இருக்கிறது. அதாவது, சர்வ சிருஷ்டிக்கும் இது பொருந்துகிறதாக இருக்கிறது. இதற்கு தேசம், பொருளாதார நிலைமை, இனம், ஜாதி போன்ற பேதங்கள் எதுவுமில்லை. கிறிஸ்துவின் கட்டளை எல்லா மனிதர்களுக்கும் பொருந்துகிறபடியால் இது பிரதான கட்டளை என்றழைக்கப்படுகிறது.

## 3. இது எதைப் பற்றியது?

சில குறிப்பிட்ட விசயங்கள் குறிப்பிட்ட மக்களின் கவனத்தை ஈர்க்கும். உதாரணமாக, கிரிக்கெட் என்னும் வார்த்தையைக் கேட்டவுடனேயே சிலருடைய ஆர்வம் தூண்டப்படும். ஆனால், அதேநேரத்தில் சிலர் எவ்வித அக்கறையும், ஆர்வமுமின்றி இருப்பார்கள். ஒருவருடைய விருப்பமே அவருடைய செயலைத் தீர்மானிக்கிறது. ஆனால், விருப்பம் முக்கியத்துவத்துக்கு சமமானதல்ல. அதிக விருப்பத்தை அதிக முக்கியத்துவத்தோடு குழப்பிக் கொள்ளக்கூடாது. பலர் நித்திய இரட்சிப்பைக் குறித்து ஆர்வமும், அக்கறையுமில்லாமலிருந்தாலும் அதைவிட முக்கியமும் அவசியமுமான தேவை எதுவுமேயில்லை. ஒவ்வொருவருடைய பிரதான கவலையாக நித்திய இரட்சிப்பு மாறும் நாள் சமீபத்திலிருக்கிறது. பிரதான கட்டளையை விட மேலான கட்டளை எதுவுமே இல்லை.

**உண்மையில், இயேசுவின் கட்டளை பிரதானமானதே!!**

**எப்போதாவது நினைத்துப் பார்த்ததுண்டா ?**

பாவ மன்னிப்புக்காக முழுக்கு ஞானஸ்நானம் பெறுவது ஒரு எளிமையான செயலாயிருந்தாலும் கூட பெரும்பாலான மதப் போதகர்களால் ஏன் அது தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது, குழப்பப் படுகிறது, மறுக்கப்படுகிறது? குழப்பத்தால் மறுபிறப்பை தடுக்க முடியும் என்பதை சாத்தான் அறிந்திருப்பதால் அப்படியிருக்குமோ?

# முப்புரி நூல்

## A Three Fold Cord

Albert Gardner

**முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது (பிரசங்கி 4:12)**

**1.கிறிஸ்தவ இல்லம்**

பிள்ளைகளிடத்தில் ஒழுக்கநெறிகளை ஏற்படுத்துவதற்கும் நற்பண்புகளை வளர்ப்பதற்கும் கிறிஸ்தவ இல்லமே முதன்மையானதும், முக்கியமான சக்தியாகவும் விளங்குகிறது. பெற்றோர் தங்கள் பிள்ளைகளிடத்தில் அன்பு செலுத்துவதும் அவர்களைப் பயிற்றுவிப்பதும் தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அதுபோல், பெற்றோர் தங்கள் பிள்ளைகளிடத்தில் அன்பு செலுத்து வதும், தங்கள் பிள்ளைகளுக்கு சிறந்த முன்னுதாரணமாக இருந்து சரியான வழியைப் பிள்ளைகளுக்குக் காட்டுவதும் அவசியமா யிருக்கிறது. இக்கடமை பெற்றோர்களால் தவிர்க்கப்படவும் கூடாது, மற்றவர்களிடத்தில் திருப்பி விடப்படவும் கூடாது (எபேசியர் 6:4)

**2. சபை**

சபையானது பிள்ளைகளுக்கு இல்லத்தில் கொடுக்கப்படும் உபதேசங்களை மேலும் பலப்படுத்துவதாக இருக்க வேண்டும். தேவபக்தியுள்ள பெற்றோர் சம்மந்தமான பிரசங்கங்கள் சபைகளில் பிரசங்கிக்கப்பட வேண்டும், அங்கத்தினர்கள் தேவனிடத்தில் உண்மையுள்ளவர்களாயிருக்கும்படி ஆழமான அறிவைப் பெற்றுக்கொள்ளும்படியான பிரசங்கங்கள் செய்யப்பட வேண்டும்.

பொதுவாக, பெரும்பாலான சபைகள் இளைய தலைமுறையினரை இழந்து கொண்டிருக்கிறது. உண்மையில், சபை இளைய தலைமுறையினரை இழக்கவில்லை. இல்லங்கள் தான் இளைய தலைமுறையினரை இழந்து கொண்டிருக்கின்றன. ஓர் இல்லம் அது செய்யவேண்டிய வேலையைச் சரியாகச் செய்யும்போது, சபை அதே பாடங்களை இளைய தலைமுறையினருக்கு மேலும் வலியுறுத்தி இல்லங்களுக்கு வலுசேர்க்க முடியும்.

3. பள்ளி

நம் பிள்ளைகளின் வாழ்க்கையில் பள்ளி ஒரு பலம் வாய்ந்த சக்தியாகத் திகழ்கிறது. பள்ளியானது இல்லத்தில் போடப்பட்ட ஒழுக்க ரீதியான அஸ்திபாரத்திற்கு ஆதாரமாக இருக்க வேண்டும். ஆனால், யதார்த்த நிலையைக் கவனித்தால் காரியம் இப்படியாக இல்லை. பள்ளியானது இல்லத்திற்கு எதிராகச் செயல்படும் நிலை காணப்படுகிறது. எப்படியென்றால், பள்ளிக்கூடங்களில் தேவனுடைய படைப்புக்கு எதிராக பரிணாமக் கொள்கை கற்பிக்கப்பட்டு வருகிறது. ஆனால், ஆதியாகமம் ஒன்றாம் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ள சிருஷ்டிப்பின் காரியங்கள் விஞ்ஞானப் பூர்வமற்றவையென்றும், கல்லாதவர்களால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படக்கூடியவை என்றும் போதிக்கப்பட்டு அங்கே பிரச்சனை உருவாக்கப்படுகிறது. இந்த நடவடிக்கை தேவன் மீதான விசுவாசத்தைத் அவமாக்கித் தேவனுடைய அளவுகோலை அர்த்தமற்றதாக்குகிறது.

ஒன்றுக்கொன்று ஆதரவாக இருந்தால் இந்த இல்லம், சபை, பள்ளி ஆகிய முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது! ✞

## சபைக்குள் ஏன் பிரவேசிக்க வேண்டும்?

ஏனெனில், கிறிஸ்து சபையை நேசித்தார் ( எபே. 5:25 )

இரட்சிக்கப்பட்டவர்கள் அனைவரும் அங்குள்ளனர் ( அப். 2:47 )

இருளின் அர்தகாரத்திலிருந்து விடுபட ( கொலோ. 1:13 )

தேவனை மகிமைப்படுத்த ( எபே. 3:21 )

கர்த்தருக்குள் மரிக்கவும், ஆசீர்வதிக்கப்படவும் ( வெளி 14:13 )

என்றென்றும் அவருடன் வாழும்படி எடுத்துக்கொள்ளப்பட ( I தெச. 4:17 )

சபைதான் தேவன் கொடுத்த ஒரே அமைப்பு ( மத். 16:18 )

# மாதிரியின் படி

## According to the Pattern

Greg Tidwell

**தே**வன் வேதாகமத்தின் பக்கங்களில் தம்முடைய சபைக்கான மாதிரியை வெளிப்படுத்தியிருக்கிறார். புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்க இம்மாதிரியை உண்மையாகப் பின்பற்றுவது அவசியமாயிருக்கிறது.

ஆதித்திருச்சபை வேதவாக்கியங்களை தேவனுடைய வார்த்தையாக கனப்படுத்தினபடியால் ( II தீமோ.*3:16,17*) பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் பிழையற்றதென அதை உறுதியாய் நம்புகிறோம். நாம் நம்முடைய வேத வகுப்புகளிலும் ஆராதனையிலும் வேதாகமத்தின் போதனைகளை வலியுறுத்துகிறோம். மேலும், தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்திற்கும், எல்லா உபதேசக் காரியங்களுக்கும் நாம் வேதாகமத்தைத் தான் பின்பற்றுகிறோம்.

ஆதித்திருச்சபை அப்போஸ்தலருடைய உபதேசத்தில் அதிக கவனம் செலுத்தியபடியால் (அப்*2:42*) நாமும் சபை ஆளுகை அமைப்புக்கும், ஆராதனைக்கும் அப்போஸ்தலருடைய உபதேசத்தையே உற்றுப் பார்க்கிறோம். ஆதித்திருச்சபை உலகத்திற்கு உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்கும்படியாக கட்டளையிடப் பட்டிருந்தபடியால் (மத்தேயு *5:13,14*) சபைக்கு வெளியே இருக்கிறவர்களுக்கு இரட்சிப்பின் செய்தியாகிய தேவனுடைய வார்த்தையை அறிவிக்க நாடுகிறோம்.

ஆதித்திருச்சபை முடிந்தவரை யாவருக்கும் நன்மைசெய்யக் கட்டளை பெற்றிருந்தபடியால் (கலா. *6:10*). வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் நம்மைச் சுற்றிலும் இருக்கிறவர்களின் ஆவிக்குரிய, சமூக, சரீரத் தேவைகளை சந்திக்க நாடுகிறோம்.

ஆதித்திருச்சபை பக்திவிருத்தி அடையச் செய்வதற்கான காரியங் களில் ஈடுபட்டபடியால் (ரோமர் *14:19*). சபையிலுள்ள ஒவ்வொரு அங் கத்தினரின் முழுத்திறமையையும் வெளியே கொண்டு வர நாடுகிறோம்.

ஆதித்திருச்சபை சகலத்தையும் பொதுவாக வைத்து அனுபவித்தபடியால் (அப் 2:44). வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் கிறிஸ்தவ ஐக்கியத்தை மதிப்புமிக்க ஒன்றாக எப்போதும் கருதுகிறோம்.

நியாயத்தீர்ப்பில் தேவனுக்கு முன்பாக நம் உக்கிராணத்துவத்தைக் காட்டுவது அவசியமாயிருக்கிறபடியால், மேற்சொல்லப்பட்ட காரியங்களை நம்மால் முடிந்தவரை சிறப்பாகச் செய்ய நாடுவது அவசியம் (I கொரி 4:2).

✝

---

# மாதிரியின் வல்லமை

### Ken Tylex.

ஓர் அருமையான வாலிபன் ராணுவத்தில் சேர்ந்தான். வீரர்கள் தங்குமிடத்தில் முதல் நாள் இரவில் அவன் படுக்கைக்கு சென்றபோது உண்மையான சோதனையை எதிர்கொண்டான். அவ்வாலிபன் வீட்டி லிருந்தபோது வேதத்தை வாசித்து பின்பு முழங்கால்படியிட்டு ஜெபிப் பதை வழக்கமாகக் கொண்டிருந்தான். ஆனால், ராணுவ விடுதியில் அவன் முரட்டுத்தனமான ஆட்களால் சூழப்பட்டிருந்தான். பலர் கூச்சலும் கும்மாளமும் போட்டு சத்தமாக சிரித்துக் கொண்டிருந்தனர். அவ்வாலி பன் யாரும் தன்னைக் காணாத நேரத்தில் படுக்கைக்குப் போய் அங்கே வேதத்தை வாசித்து ஜெபிப்பது நலமாயிருக்கும் என்று நினைத்தான்.

பின்பு அவ்வாலிபன் நான் கிறிஸ்தவன் சக ராணுவ வீரர்களுக்கு முன்பு. கிறிஸ்துவுக்காக சிறந்த மாதிரியாக இருப்பேன் என்று தைரியமாக முடிவெடுத்தான். இச்சூழலுக்குத்தக்க என்னை நான் மாற்றிக்கொள்ள மாட்டேன், நான் வீட்டில் எவைகளைச் செய்தேனோ அவைகளையே இங்கேயும் செய்வேன் என்று சொன்னான். சொன்ன உடனேயே வேதாகமத்தை எடுத்து வாசித்தான். பின்பு, அவன் முழங்கால்படியிட்டு ஜெபிக்கத் தொடங்கினான். அப்போது வீரர்கள் தங்கியிருந்த இடமே அமைதியானது. சிறிது நேரத்திற்குப் பிறகு பேச்சு சத்தம் கேட்டது. ஆனால், அது கட்டுப்படுத்தப்பட்டது. அந்த இளம் வீரனின் வழக்கத்திற்கு மாறான நடவடிக்கையைக் குறித்து யாரும் எதுவும் செய்யவில்லை. அடுத்த நாள் இரவு அவ்வாலிபன் வேதாகமத்தைக் கையில் எடுத்தபோது மற்ற எட்டு ராணுவ வீரர்களும் தங்கள் வேதாகமத்தை கையில் எடுத்தார்கள்.

ஒரு மாதத்திற்குள் வீரர்கள் தங்குமிடத்தில் இருந்த ஒவ்வொரு ராணுவ வீரனும் இந்த வாலிபனுக்கு ஆதரவாக இருந்தனர். அவர்கள் தங்கள் கேள்விகளுடனும், பிரச்சனைகளுடனும் இந்த வாலிபனிடம் வந்தார்கள். உங்களுக்கும், எனக்கும் இந்த வாலிபனிடமிருந்த தைரியமும், அர்ப்பணிப்பும் இருப்பதாக. இயேசு கிறிஸ்து இவ்விதமாகச் சொன்னார்; இவ்விதமாய், *மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது* (மத்தேயு 5:16) என்று. ✝

# நம்புகிறீர்களா அல்லது இல்லையா?

## Belive It or Not

### Bob Plunket

"Rupley **என்னும் அமெரிக்க கேலிச்சித்திரக் கலைஞர் செய்தித் தாளில் நம்புகிறீர்களா அல்லது இல்லையா?** என்னும் தொடர் கட்டுரையை எழுதி வந்தார். அதில் உலகின் வினோதமான நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கு வதை வாடிக்கையாகவும் வேடிக்கையாகவும் கொண்டிருந் தார். அவர் ஒரு கட்டுரையில் தூண்டில் போடுவதில் கை தேர்ந்த ஒருவனுக்கு பதக்கம் வழங்கப்பட்டதைக் குறிப்பிட் டிருந்தார். ஆனால், இதில் வேடிக்கையான காரியம் என்ன வென்றால், அந்த மனிதன் இதுவரை ஒரு மீனைக்கூட பிடித் ததில்லையாம். தூரத்திலிருந்து துல்லியாமாக தூண்டில் போடு வதில் அவன் கை தேர்ந்தவனா யிருந்திருக்கிறான். அவன் பெரும்பாலும் தன் வீட்டிற்குப் பின்புறத்தில் தூண்டில் போட்டி ருக்கிறான், அவனுடைய உண்மையான விருப்பம் மீன் பிடிக்கும்படி இருக்கவில்லை. துல்லியமாகத் தூண்டில் போடு வதில் தான் இருந்திருக்கிறது. மீன்பிடிப்பது சற்று சிரமமான வேலைதானே! மீன் தூண்டிலில் மாட்டியவுடன் அதை தூண்டி லில் இருந்து எடுக்க வேண்டும். இதற்கெல்லாம் பொறுமை அவசியமாயிருக்கிறது.

நீங்கள் நம்புகிறீர்களோ இல்லையோ, பல சபைகளில் நாற்பது ஐம்பது வருடங்களாக அங்கம் வகிப்பவர்களில் பலர் இதுவரை ஒரு ஆத்துமாவைக் கூட ஆதாயம் செய்ததில்லை. இருந்தாலும் அவர்கள் நேர்த்தியான ஜெபங்களை ஏறெடுக்கிறார்கள். மிகுந்த உற்சாகத்துடன் அவர்கள் பாடுகிறார்கள். மற்ற எல்லாரை யும் விட அவர்களுக்கு அதிகமான வேதவசனங்கள் தெரியும்.

என்னுடைய கருத்து இதுதான்: கிறிஸ்தவர்களாக இருக்கும் நமக்கு தூரமாகவும், துல்லியமுமாகவும் வலைகளைப் போடுதல் இலக்குகளாக இருந்துவிடக்கூடாது என்பது தான் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இது நம்முடைய திறமையைக் காட்டும் மேடையல்ல. மற்றவர்களுடைய சாதனை



களை முறியடிக்கும் களமும் அல்ல. பல வேளைகளில் குத்துச்சண்டை வீரர்கள் தங்கள் திறனை மேம்படுத்தும் பயிற்சியில் ஈடுபடுவார்கள். அவர்கள் திருப்பித் தாக்காத மூட்டைகளை நோக்கி குத்து வார்கள். அவர்கள் மிகப்பெரிய நிழல் குத்துச்சண்டை வீரர்களாக இருக்கிறார்கள். ஆயினும், அவர்கள் ஒரு போதும் குத்துச்சண்டை பட்டத்தை வென்றதில்லை.

தேவன் நம்மை நம் திறமை, ஆற்றல் மற்றும் அறிவைக் கொண்டு மற்றவர்களுக்குப் போதித்து, அன்பு செலுத்தி அவர்களை ஆதாயப்படுத்துவதற்காக அழைத்திருக்கிறார். அந்திரேயா இயேசுவோடு இருந்தபோது அவரைப் பற்றி இவ்விதமாகச் சொல்லப்பட்டது. **அவன் முதலாவது தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு மேசியாவக் கண்டோம் என்று சொன்னான்** (யோவான் 1:41). அந்திரேயாவின் குறிக்கோள் எல்லாம் தான் நேசித்தவர்களிடம் இயேசுவைப் பற்றிச் சொல்வதாகத் தான் இருந்தது. ஞானி சாலமோன் **ஆத்து மாக்களை ஆதாயம் செய்கிறவன் ஞானவான் என்று சொன்னார் ( நீதி. 11:30) ஆதித் திருச்சபையின் ஆச்சரிய மூட்டும் வளர்ச்சிக்கான காரணம் அவர்களுடைய திறமையோ, துல்லியமோ அல்ல. அவர்கள் எந்த மக்களோடு வாழ்ந்தார்களோ அவர்களோடு கிறிஸ்துவைப் பகிர்ந்து கொண்டது தான்.** நாம் எப்படி என்று சிந்தியுங்கள்!

✞

# நல்ல விதைக்கிறவனாக இருப்பது

# On Being a Good Sower

Jack Harriman

தேவனுடைய வார்த்தைகளைப் போதிக்கிறவர், வேதவாக்கியங்களில் விதைக்கிறவனாக குறிப்பிடப்படுகிறார். இதற்கு மிகச்சிறந்த உதாரணம் விதைக்கிறவனுடைய உவமை (லூக்கா 8)

விதைக்கிறவர்கள் இருக்க வேண்டும். கிறிஸ்தவம் (விதைக்கப்படுகிற, போதிக்கப்படுகிற) மார்க்கமாயிருக்கிறது. பிரதான கட்டளையை மூன்று வார்த்தைகளில் சுருக்கிவிடலாம். **போங்கள் போய் விதையுங்கள்** என்று (மாற்கு 16:15). இதற்கு உதாரணமாக, லூக்கா ஆசிரியர் ஒரு வசனத்தைப் பதிவு செய்திருக்கிறார். **சிதறிப் போனவர்கள் எங்குந்திரிந்து சுவிசே வசனத்தைப் பிரசங்கித்தார்கள்** என்று (அப் 8:4) ஒவ்வொரு மனமாற்றச் சம்பவத்திலும் விதையை விதைத்தல் முதலில் வருகிறது. விதைக்கிறவர்கள் இருக்க வேண்டும்.

நாம் எவ்வளவு சிறப்பாக விதைக்கிறோமோ அவ்வளவு சிறப்பாக அறுவடையும் இருக்கும். பவுலைப் பற்றியும், பர்னபாவைப் பற்றியும் இவ்விதமாகச் சொல்லப்பட்டுள்ளது.

**இக்கோனியா பட்டணத்திலே அவர்கள் இருவரும் யூதருடைய ஜெப ஆலயத்தில் பிரவேசித்து யூதரிலும் கிரேக்கரிலும் திரளான ஜனங்கள் விசுவாசிக்கத்தக்கதாகப் பிரசங்கித்தார்கள் (அப். 14:1) இங்கே ஜனங்கள் விசுவாசிக்கதக்கதாகப் பிரசங்கித்தார்கள்** என்னும் சொற்தொடரைக் கவனியுங்கள். இது அவர்களின் விதைக்கும் தரத்தைக் குறிக்கிறது.

விதைக்கப்படும் நிலம் பெரிதாக இருந்து, அதிகமான விதைகள் விதைக்கப்பட்டால் அறுவடையும் சிறப்பாக இருக்கும். **தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்** (அப் 5:48).

யூதருடைய ஆலோசனைச் சங்கம் அப்போஸ்தலர்களைப் பார்த்து **நீங்கள் எருசலேமை உங்கள் போதகத்தினாலே நிரப்பிவிட்டீர்கள்** என்று குற்றஞ்சாட்டியது. (அப் *5:28*). அப்போஸ்தலர்கள் தினந்தோறும் எல்லா இடங்களிலும் விதைகளை விதைத்தார்கள்.

விதைப்பதற்கு இரண்டு காரியங்கள் உந்தும் சக்தியாக காணப்படுகின்றன. அவைகளுள் ஒன்று, இவ்வாக்கியத்தில் அடங்கியிருக்கிறது. உங்களுக்கு உண்டான அழைப்பினால் நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல ஒரே சரீரமும், ஒரே ஆவியும், ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ் ஞானமும் எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார் மேலும் எல்லாரோடும் உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர் (எபேசியர் *4-6*). மற்றொன்று, இவ்வாக்கியத்தில் அடங்கியிருக்கிறது. **அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்து போனவர்களும் சிதறப்பட்டவர் களுமாய் இருந்தபடியால் அவர்கள் மேல் மனதுருகி என்று..** (மத்தேவு *9:36*).

✞

# என் ஜெபம்

நான் பெலனுக்காக ஜெபித்தேன்
தேவன் என்னைப் பெலப்படுத்தக் கடினமான
பாதைகளில் கடந்து போகும்படிச் செய்தார்.

நான் ஞானத்திற்காக ஜெபித்தேன்
தேவன் நான் தீர்வுகண்டு ஞானத்தில் தேறும்படி
பல பிரச்சனைகளைத் தந்தார்.

நான் செழிப்புக்காக ஜெபித்தேன்
தேவன் எனக்கு வேலைச் செய்வதற்கு தேவையான
மூளையையும், உடல் வலிமையையும் கொடுத்தார்.

நான் உதவிக்காக ஜெபித்தேன்
தேவன் எனக்கு வாய்ப்புக்களைத் தந்தார்

**நான் கேட்டது எதுவுமே எனக்கு கிடைக்கவில்லை**
**இருந்தபோதினும் எனக்குத் தேவையானதெல்லாம் கிடைத்தது.**



# கிறிஸ்துவை அறிவித்தல்

## *Proclaiming Christ*

Gary C.Hampton.

புறவினத்தாருக்கான அப்போஸ்தலன் பவுல் நற்செய்தியை அறிவிப்பதற்கான நோக்கத்தையும், பலனையும் II கொரிந்தியர் 4-ஆம் அதிகாரத்தில் விளக்கியிருக்கிறார். கள்ளப்போதகர்கள் தங்களைத் தாங்களே யாரென்று அறிவித்துக்கொண்டபோது, பவுல் தன்னை கிறிஸ்துவின் ஊழியக்காரராகக் கண்டார். அவர் இரட்சகரின் மகிமையைப் பிரதிபலித்தார். இயேசுவை அறிவிப்பதென்பது, அவர் எஜமான், ஆளுகிறவர், இரட்சகர் என்பதை மற்றவர்களுக்குச் சொல்வதாகும். வேதவாக்கியங்களை அறிந்தவர்கள் தேவன் புதிதாக உருவாக்கப்பட்ட உலகத்திற்கு வெளிச்சத்தைக் கொடுத்தார் என்பதை அறிவார்கள் ( ஆதி 1:3 ) அதே விதமாக, பிதா இயேசு கிறிஸ்துவை இவ்வுலகத்திற்கு வெளிச்சமாக அனுப்பிக் கொடுத்தார். ( ஏசாயா 60:1,2 யோவான் 1:1-5 ) இயேசு கிறிஸ்து தேவனுடைய ஒளியைப் பிரதிபலித்து, மனிதன் தேவனுடைய அறிவை மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கத்தக்கதாக மனிதனுக்கு தேவனுடைய அறிவைக் கொடுத்தார் (II கொரிந்தியர் 4:5,6 ).

கிறிஸ்துவை அறிவிக்கிறவர்கள் மண்பாண்டங்களாக விவரிக்கப்பட்டிருக்கிறபடியால் இயற்கையாகவே மண்பாண்டத் திற்கென்று மதிப்பு இல்லாவிட்டாலும் கூட அது சுமந்து செல்லுகிற செய்தி மகத்தானதாயிருக்கிறது. இந்த பெலவீனமான சரீரம் வல்லமையான செய்தியின் ஆதாரமாக இருக்க முடியாது என்பதை நம்மால் காண முடிகிறது (II கொரி 4:7 ).

மேலும், பவுல் சுவிசேஷத்தை அறிவிப்பவர்களை சுவிசேஷப் பொக்கிஷத்திற்காகப் போராடுகிற போர்சேவகர்களாக சித்தரிக்கிறார். நம் சத்துருவால் எல்லாப் பக்கங்களிலும் நமக்கு நெருக்கடியைக் கொடுக்க முடியும் என்பதை அவர் அறிந்திருந்தார். ஆனாலும், அப்போஸ்தலன் சொல்லும்போது தேவனுடைய போர், சேவகனுக்கு தன் ஆயுதத்தைப் பயன்படுத்தி பட்டயத்தால் தன்னைக்

காத்துக்கொள்ள இடமுண்டு என்று சொல்கிறார்; கடுமையான சண்டையால் போர்ச்சேவகன் கலங்கினாலும் கூட அவன் நம்பிக்கையை இழந்து போகக்கூடாது என்று சொல்கிறார். கடுஞ்சண்டையில் போர்ச்சேவகன் ஓடி பாதுகாப்பை நாடலாம். அப்போது, தேவன் உதவியற்ற நிலையில் அவனை விட மாட்டார். உண்மையில், தேவன் அப்படிப்பட்ட போர்சேவகனைத் தோற்கடிக்கப்பட விடமாட்டார் என்று அப்போஸ்தலனாகிய பவுல் சொல்கிறார் (II கொரிந்தியர் *4:8,9*)

பவுலும் நற்செய்தியை அறிவித்த மற்ற தேவதாசர்களும் இயேசுவைப் போல் பாடுபட்டு மரித்தார்கள் (II கொரி *15:31*, ரோமர் *8:36*, பிலிப்பியர் *3:10* கொலோ *1:24;6:17*). பவுலின் பாடுகள் மூலமாக சுயநலமான மனிதன் மரித்து அப்பாடுக்ள வழியாய் கிறிஸ்து வெளிப்படுத்தப்பட்டார் ( கலாத்தியர் *2:20* ) கிறிஸ்துவுக்காக பாடுபடு வதினால் மரணம் ஏற்பட்டாலும் கூட அந்த சுவிசேஷத்தை கேட்பவர் களுக்கு அது நித்திய ஜீவனைக் கொண்டு வருகிறது. பவுல் ஊழியத்தை விட்டு வெளியேறத்தக்கதாக பாடுகள் இருந்தாலும் பவுல் அப்படிச் செய்யாமல் சங்கீதக்காரனின் மனநிலையை பெற்றுக் கொண்டார். விசுவாசித்தேன் ஆகையால் பேசினேன் என்று எழுதியிருக்கிறபடி விசுவாசிக்கிறபடியால் பேசுகிறோம் என்று பவுல் சொன்னார் ( II கொரிந்தியர் *4:10-13* சங்கீதம் *116:10* ).

சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களின் இறுதியான நம்பிக்கையின் ஆதாரம் உயிர்த்தெழுதலில் தான் இருக்கிறது. எல்லா விசுவாசிகளுக்குள்ளும், சுவிசேஷத்தை அறிவிப்பவர்கள் உட்பட எல்லோருக்குள்ளும் இருக்கும் நம்பிக்கை ஒரு நாள் நாம் எல்லோரும் மரணத்தை வென்று கர்த்தரோடு என்றென்றும் வாழுவோம் என்பது தான். சுவிசேஷம் அறிவிக்கப்படுவதால் விசுவாசிகள் தேவனுடைய கிருபையை பெற்றுக் கொள்கிறார்கள். அந்த கிருபை அவர்களிடத்தில் நன்றியுணர்வு உண்டாகக் காரணமாகிறது. இதுவே அவர்கள் தேவனை மகிமைப்படுத்தக் காரணமாகி விடுகிறது (I கொரி. *4:14,5* ).

எனவே, நாமெல்லாரும் நமக்குள்ளே சுமந்து செல்லும் சுவிசேஷத்தின் மதிப்பை கவனித்து, அதன் மதிப்பை மற்றவர்களுக்கு எடுத்துச் செல்லத் தீர்மானிப்போம். நாம் சந்திக்கும் எல்லோரிடமும் கிறிஸ்துவைக் காட்ட நாம் தீர்மானிப்போம். அதுவே, நம் நோக்கமாக இருக்கட்டும். நம் முயற்சிகள் எல்லாம் பலர் தேவனுடைய எளிய திட்டத்திற்குக் கீழ்ப்படிந்து பாவங்களிலிருந்து விடுதலை ஆக வேண்டுமென்பதே, இது தான் நம் ஜெபம். இது தேவனுக்கு நன்றி செலுத்துவதிலும், அவருடைய நாமத்திற்கு மகிமையைக் கொண்டு செல்வதிலும் போய் முடியும். ✞

# ஆராதனையில் பயபக்தி

## *Solemnity in Worship*

Louis Rushmore

என்னுடைய பதினெட்டாவது வயது வரை பெயரளவில் நான் கத்தோலிக்க மார்க்கத்தில் இருந்தேன். பல நூற்றாண்டுகளாக கத்தோலிக்க மார்க்கத்தில் உள்ள உபதேசப் பிழைகளையோ அல்லது வேதாகம சத்தியத்திற்குப் புறம்பாக அவர்கள் பேசும் கருத்துக்களையோ நான் ஆதரிக்காவிட்டாலும்கூட மற்ற கத்தோலிக்கரும் நானும் தேவனுக்குப் பயப்படும் பயத்தையும் தேவனுக்கான பயபக்தியையும் கற்றுக்கொண்டோம். அது சர்வவல்லவரை ஆராதிக்கும்போது ஆராதனையில் பயபக்திக்கு வழிவகுத்தது. அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நாம் கூடிவரும்போது பக்தியுடன் ஆராதிக்க வேண்டும். இப்பூமியில் கிறிஸ்தவம் எந்த ஒரு ஸ்தலத்தையும் பரிசுத்த ஸ்தலம் என்று குறிப்பிடவில்லை. கத்தோலிக்க ஆராதனை தெய்வீகக் கொள்கைகளைவிட மனிதக்கொள்கைகளை ஆதாரமாகக் கொண்டபடியால் அது வீண் ஆராதனையாக இருக்கிறது (மாற்கு 7:7). இருந்தபோதிலும் நான் இங்கே வலியுறுத்துகிற காரியம் என்னவென்றால், தேவனுக்கு செலுத்தவேண்டிய பயபக்திதான். ஆனால், கத்தோலிக்க மார்க்கத்திற்கு இந்த பயபக்தியானது இடம் பெயர்ந்து போய்விட்டதுபோல் தெரிகிறது. கத்தோலிக்க மார்க்கத்தில் கத்தோலிக்கர்களுக்கு பிடித்தமான விஷயங்களுள் ஒன்று, சர்வவல்லவரை ஆராதிக்கும் போது நிலவும் பயபக்திதான். அவர்கள் முந்தைய கத்தோலிக்கர்களாக இருந்தாலும், எதிர்கால கத்தோலிக்கர்களாக இருந்தாலும் சரி.

எப்படியாயினும், கிறிஸ்தவர்கள் தேவனை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ளும்போது, தேவனுடைய பிரசன்னத்தை உணரவேண்டும் (யோவா 4 : 24). ஆராதனையில் நாம் காட்டும் பயபக்தியின் மூலமாக நம் பயபக்தியையும் மரியாதையையும்

தேவனுக்கு செலுத்தவேண்டும். கிறிஸ்தவர்களாக நாம் உணர்வுப்பூர்வமாகவும், அறிவுப்பூர்வமாகவும் உணர்ந்து சங்கீதம் 33:8 -ஐ சொல்ல வேண்டும். **பூமியெல்லாம் கர்த்தருக்குப் பயப்படுவதாக உலகத்திலுள்ள குடிகளெல்லாம் அவருக்கு அஞ்சியிருப்பதாக.** இவ்வசனப் பகுதியில் பயம் என்பது மரியாதை கலந்த பயத்தையும், அஞ்சியிருத்தல் என்பது ஒரு புதிய இடத்திற்கு நாம் செல்லும்போது நம்மை அறியாமலேயே நமக்கு ஏற்படும் பயத்தையும் குறிக்கிறது. பாவியான மனிதர்கள் மன்னிக்கப்பட்ட பரிசுத்தவான்கள் (கிறிஸ்தவர்கள்) எல்லோரும் தேவனுடைய சமூகத்தில் மிகவும் பயபக்தியோடே அவரைத் தொழுதுகொள்ள வேண்டும். **நீர் நீரே பயங்கரமானவர், உமது கோபம் மூளும்போது உமக்கு முன்பாக நிற்பவன் யார்? (சங்கீதம் 76:7) நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே** (எபிரெயர் 12:29).

நாம் யாரை நோக்கி ஆராதனையை ஏறெடுக்க வேண்டுமென்பதை மறந்து விட்டோமா? தேவத்துவம் எவ்வளவு மகத்துவமானது சர்வவல்லமையுள்ளது. பலவீனமான மனிதனைவிட எவ்வளவு மேலானது? நாம் சபை கூடிவரும்போது தேவனை மகிமைப்படுத்துவது துதிப்பது, போற்றுவது போன்றவைகளிலிருந்து நம் கவனத்தைச் சிதறடிக்க நாம் துணிந்து விட்டோமா? ஆராதனை, உங்கள் சமூக பழக்கவழக்கங்களிலும், தனிப்பட்ட மகிழ்ச்சியிலும் தலையிடுகிற முக்கியமற்ற காரியமாக இருக்கிறதா? நீங்கள் ஆராதனை வேளையில் சர்வவல்லவரை ஆராதிப்பது நமக்குக் கிடைத்த பாக்கியமென்றும் ஆராதனை மிகவும் முக்கியமான ஒன்று என்றும் உணர்ந்து அதை நீங்கள் நடத்தையில் காட்டுகிறீர்களா? எல்லா ஜனங்களிலும் கிறிஸ்தவர்கள் ஆராதனையில் தங்கள் பயபக்தியை வெளிப்படுத்த கடமைப் பட்டிருக்கிறார்கள்.

✞

எப்படியாயினும், கிறிஸ்தவர்கள் தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளும்போது தேவனுடைய பிரசன்னத்தை உணரவேண்டும்.

## ஆராதனை - தேவனுடைய சமூகத்தில் வருதல்

# Worship - Coming into the Presence of God

Ronald G. Bryant.

உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும். அது இப்பொழுதே வந்திருக்கிறது. தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும். (யோவான் 4: 23,24).

ஆராதனை நேரத்திற்காக தேவனுடைய மக்கள் ஒன்று கூடுவது சாதாரண கூடுகையல்ல. ஆராதனை கூடுகை ஒரு கலையரங்கில் கலைநிகழ்ச்சிகளைக் காண கூடி வரும் கூட்டத்தைப் போல் காட்சியளிக்கலாம். ஆனால், அது அப்படியல்ல. கலைநிகழ்ச்சிகள் - பார்வையாளர்கள் என்று வரும்போது அச்சூழல் சற்று வித்தியா சமானது, நாம் வாழ்க்கையில் பலமுறை மேடை நிகழ்ச்சிகளைப் பார்த்திருக்கிறோம். கலைஞர்களை வெகுவாகப் பாராட்டி யிருக்கிறோம். நாம் அந்த நிகழ்ச்சிகளுக்குப் பார்வையாளர்களாக நண்பர்களாக இன்னும் விமர்சகர்களாகப் போகிறோம். நாம் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு அதை ரசிக்கப் போகிறோம். நாம் நுழைவுகட்டணத்தைச் செலுத்தி நம் பணத்திற்கு இது தகுமா என்று எதிர்பார்க்கிறோம், அந்த நிகழ்ச்சியை மதிப்பீடு செய்வதும், அதை அங்கீகரிப்பதும், நிராகரிப்பதும் நம்முடைய உரிமை என்று கருதுகிறோம். நாம் மறுபடியும் அந்த நிகழ்ச்சிக்குப் போய் நம் ஆதரவைத் தெரிவிக்கிறோம், இல்லையெனில், நாம் போகாமல் விட்டு விடுகிறோம்.

சமீபகாலமாக சபைகளில் கேளிக்கை நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஒரு போக்கை நம்மால் காணமுடிகிறது. நிச்சயமாக, வேடிக்கைக்கும், கேளிக்கைக்கும், அங்கே பிரத்யேகமான இடமிருக்கிறது. ஆனால், இங்கே கேள்வியென்னவென்றால் ஆராதனை ஒரு பொழுது போக்கா? பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை நாம் பார்த்து, அதை ரசித்து அதை மதிப்பீடு செய்யலாம். சம்பந்தப்பட்டவர்கள் கைதட்டல்களையும், பாராட்டுகளையும் பெறுவார்கள். ஆனால், ஆராதனையில் வழி நடத்துகிறவர்களுக்கு இவைகளெல்லாம் பொருந்துமா?

ஆராதனை கூடுகையின் போது, தேவனை ஆராதிப்பவர்கள் எல்லோருமே பங்கெடுப்பவர்களாக இருக்கிறார்கள் ( நடிகர்களல்ல) என்பது வலியுறுத்தப்பட வேண்டும். மேலும், உண்மையான ஆராதனையில் பார்வையாளர் தேவன் ஒருவரே என்று வலியுறுத்தப்பட வேண்டும். இயேசு கிறிஸ்து இந்த உண்மையை எளிமையாகவும், தெளிவாகவும் விளக்கியிருக்கிறார். தம்மைத்தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிபட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார் என்று. (யோவான் 4:23) கிறிஸ்து சொன்னதன் உட்பொருள் எல்லா ஆராதனையும் உண்மையான ஆராதனை அல்ல என்பதே. தேவனை நாம் ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும். உண்மையான ஆராதனையில் தேவன் மாத்திரமே மையப்பொருளாக ஆராதிக்கப்படத்தக்கவராயிருக்கிறார். மரியாதையும் போற்றுதலும் ஏற்றுக்கொள்ளத்தக்க மனநிலையாயிருக்கிறது. தேவனுடைய சித்தமே நம்மை வழிநடத்தும் அளவுகோலாக இருக்கிறது.

நாம் எதைச் செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கிறோம்? என்று கேட்பது ஞானமானது. ஆராதனை கூடுகையில் நாம் என்ன செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கிறோம்? நாம் ஆராதனையில் பங்கு பெறுபவர்களாக இருக்கிறோமா அல்லது வேடிக்கை பார்க்கிறவர்களாக இருக்கிறோமா? ஆராதனையில் நம்மை நாமே மறந்து தேவனைப் போற்றுகிறோமா அல்லது மற்றவர்களை ஈர்க்கும் படியான காரியங்களில் ஈடுபடுகிறோமா?ஆராதனையில் பங்கு பெறுவதற்கும் வெறுமனே பார்வையாளர்களாக இருப்பதற்கும் பெரிய வித்தியாசம் உண்டு?

நாம் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால் தேவனை ஆராதிப்பதற்கான அழைப்பாகத் தான் இருக்கும். எல்லோராலும் பாடமுடியும். ஆனால், நம்மில் எத்தனை பேர் உண்மையாக அவரை துதிக்கவும் போற்றவும் முடியும்?

ஆராதனை என்பது உயரியதும் பரிசுத்தமான ஒன்றாவும் உள்ளது. அது தேவனுக்கு நாம் கொடுக்கும் ஆழமான மரியாதையால் ஆளப்படுகிறது. அந்த மரியாதையானது ஆயத்தத்திலும், பங்கெடுப்பிலும் காணப்பட வேண்டும். ஆராதனை தேவனைப் பற்றிய உறுதிப்பாட்டினால் வளர வேண்டும். ஆராதனை தேவனைத் தழுவி அவருடைய சமூகத்தில் களிகூறுவது. ஆராதனையில் மனிதன் தேவனோடு ஐக்கியம் கொள்ளும் சிலாக்கியத்தைப் பெறுகின்றான். ஆராதனையில் மனிதன் தேவனுக்கு செவிகொடுத்து தேவனோடு பேசும் சிலாக்கியத்தைப் பெறுகிறான். ஆராதனையில் மனிதன்

தேவனிடம் கிட்டிச்சேர்ந்து அவருடைய கிருபாசனத்தண்டையிலே சேருகிறான். தேவன் ஒருவரே ஆராதனைக்கும் பாத்திரர். அவரே நம்மை ஆராதனையில் கிட்டிச் சேரும்படி அழைப்பு விடுக்கிறார்.

இன்று மிகப்பெரிய தேவை, தேவனுடைய ஜனங்கள் முழுமையான ஆராதனையில் தங்களையே ஒட்டுமொத்தமாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்பதே தேவனை உண்மையாக நேர்மையாக ஆராதித்து அவருக்கு முன்பாகப் பணிந்து குனிய வேண்டும். ✝

# யார் சரி?

| நீ சொல்லுகிறாய் | தேவன் சொல்லுகிறார் | வசனப்பகுதி |
|---|---|---|
| 1. கூடவே கூடாது. | எல்லாம் கூடும் | லூக். 18:27 |
| 2. மிகுந்த களைப்பா யிருக்கிறேன். | இளைப்பாறுதல் தருவேன் | மத். 11:28-30 |
| 3. என்னால் இனி முடியாது. | என் கிருபை உனக்குப் போதும் | II கொரி. 12:9 |
| 4. என்னை யாரும் நேசிப்பதில்லை. | நான் உன்னை நேசிக்கிறேன் | யோவான் 3:34 |
| 5. என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை | உன் நடைகளை நான் நடத்துவேன் | நீதி. 3:5,6 |
| 6. என்னால் செய்ய முடியாது | எல்லாவற்றையும் செய்ய முடியும் | பிலிப். 4:13 |
| 7. நான் இயலாதவன். | எனக்கு வல்லமை உண்டு | II கொரி. 9:8 |
| 8. இது தகுதியில்லாதது. | நான் தகுதிப்படுத்துவேன் | ரோமர். 8:28 |
| 9. குறைவுகளால் பாதிக்கப்பட்டுள்ளேன். | குறைவை நிறைவாக்குவேன் | பிலி. 4:19 |
| 10. நான் பயப்படுகிறேன். | நான் உனக்கு பயமுள்ள ஆவியைக் கொடுக்கவில்லை | II தீமோ. 1:7 |
| 11. நான் எப்போதும் கவலையாக உள்ளேன் | உன் கவலைகளையெல்லாம் என் மீது வைத்து விடு | I பேதுரு. 5:7 |
| 12. நான் தனியாக இருப்பதாக உணருகிறேன். | நான் உன்னை விட்டு விலகுவதில்லை | எபி. 13:5 |

# தேவனை துதித்தல்
# Praising God

Rick Cunningham

தேவன் நீதியுள்ளவராகவும், ஞானள்ளவராகவும், ஜீவனுள்ளவராகவும், நீடிய பொறுமையுள்ளவராகவும், மனதுருகிறவராகவும், இரக்கமுள்ளவராகவும், மனிதர்களுடைய ஆத்துமாக்களை இரட்சிக்க சித்தமுள்ளவராகவும் இருக்கிறபடியால், நம் துதிகளுக்கு அவர் பாத்திரராயிருக்கிறார். ஆம், தேவன் நம் துதிகளுக்குப் பாத்திரராயிருக்கிறார். ஏனென்றால், அவர் விதவைகளை, திக்கற்றவர்களை, வியாதியுள்ளவர்களை, தேவையில் இருப்பவர்களை, பலவீனமானவர்களை, உதவியற்றவர்களை, பாவத்தில் மரித்தவர்களை விசாரிக்கிறவராயிருக்கிறார். தேவன் மகா பெரியவராக சர்வஞானியாக, சர்வவல்லவராக, சர்வவியாபியாக, முற்றிலும் பூரணராயிருக்கிறபடியால் அவர் துதிக்கப்படத்தக்கவர். தேவனுடைய பராமரிப்பிற்காகவும், துன்மார்க்கத்திற்கு எதிரான நியாயத்தீர்ப்பிள்காகவும், நீதியின் மீதான அவருடைய கரிசனைக்காகவும் தேவன் துதிக்கப்படத்தக்கவர். தேவன் இப்பூமியை உண்டாக்கினதற்காகவும், அதை நிலைத்திருக்கச் செய்து கொண்டிருக்கிதற்காகவும் துதிக்கப்படத்தக்கவர். இப்பூமியில் ராஜாக்களை ஏற்படுத்துகிறவரும் அவரே, அவர்களைத் தள்ளுகிறவரும் அவரே, அவர் மன்தருடைய ராஜ்யத்தில் ஆளுகை செய்து அக்கிரமங்களுக்கு முடிவுகட்டுகிறார். மேற்சொல்லப்பட்ட காரியங்களுக்காகவும், இன்னும் அதிகமான காரியங்களுக்காகவும் அவர் துதிக்கப்படத்தக்கவராயிருக்கிறார்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தேவனிடத்தல் உண்மையான மரியாதை இல்லாமல் உதட்டளவில் தேவனைத் துதித்த நியாயப்பிரமாணப் போதர்களைச் குறிப்பாக பரிசேயர்களைக் கடுமையாகச் சாடினார். இந்த ஜனங்கள் தங்கள் வாயினால்

என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது. மனுசருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் (மத்தேயு 15:89) இயேசு கிறிஸ்து துதித்தல் என்பது வார்த்தைகளை விட மேலானது. என்று குறிப்பிட்டிருக்கிறார். மனிதர்களுடைய பிரமாணங்களுக்குக் கீழ்ப்படியாமல் தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிகிறதோடு இசைந்து இருக்கவேண்டும். கீழ்ப்படியாமையின் துதி அல்லது தேவனுடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படியாமல் அவரைத் துதிப்பதென்பது அவரை ஒருபோதும் கனப்படுத்தாது. மாறாக, அவரைக் கோபப்படுத்தும்.

தேவனைத் துதிப்பது நம்முடைய பொறுப்பாயிருக்கிறது. அவர் நிச்சயமாகவே துதிக்கப்படத்தக்கவர். நாம் தேவனிடத்தில் உண்மையாக அன்புகூர்ந்து, அவருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து அவரைத் துதிக்க வேண்டும். நம் துதியின் வார்த்தை நம் வாழ்க்கைக்கு இசைவாயில்லையென்றால், கர்த்தர் எப்படி அந்தப் பரிசேயர்களையும், நியாயப்பிரமாணப் போதகர்களையும் கடிந்து கொண்டாரோ அதே போல் நம்மையும் கடிந்து கொள்வார்.

ஆகவே, தேவனைத் துதியுங்கள், போற்றித் துதியுங்கள்!

## மாம்சத்தின் கிரியைகள்

மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன: அவை யாவன; விபச்சாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம். விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்க பேதங்கள். பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே;

இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னது போல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

கலாத்தியர் 5:19-21

# இருதயத்திலிருந்து வரும் இசை தேவனுக்கு இனிய பாடலாயிருக்கிறது.

## *Music From the Heart is Melody To God*

*Jason Fox.*

**அப்போஸ்தலர் 16:25 : நடுராத்திரியிலே பவுலும், சீலாவும் ஜெபம் பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.**

**ரோமர் 15:9 : புறஜாதியாரும், இரக்கம் பெற்றதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்துகிறார்களென்றும் சொல்லுகிறேன். அந்தப்படி; இதினிமித்தம் நான் புறஜாதிகளுக்குள்ளே உம்மை அறிக்கை பண்ணி, தம்முடைய நாமத்தைச் சொல்லி, சங்கீதம் பாடுவேன் என்று எழுதியிருக்கிறது.**

**I கொரிந்தியர் 14:15 :** நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன் ; ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்


**யாக்கோபு 5:13 :** உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம் பண்ணக்கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன்.

**எபேசியர் 5:19 :** *சங்கீதங்களினாலும், கீர்த்தனங்களினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொண்டு, தங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி...*

**கொலோசியர் 3:16 :** கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும். ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லிக்கொண்டு உங்கள் இருதயத்திலே கர்த்தரைப்பக்தியுடன் பாடி..

**எபிரெயர் 2:11,12 :** எப்படியெனில், பரிசுத்தஞ்செய்கிறவரும், பரிசுத்தம் செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்

கிறார்கள்; இதனிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல்; உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து சபை நடுவில் உம்மைத் துதித்துப்பாடுவேன் என்றும்.



**எபிரெயர் 13:15 :** ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்.

நாம் எதைச் செய்தாலும். அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ( அவருடைய அதிகாரத்தினாலே ) செய்ய வேண்டும் ( கொலோ 3:17 ). அதிகாரம் இருந்தால் அங்கே ஆளுகை செய்யும்படியான சட்டதிட்டங்களும் இருக்கும். மௌனம் ஆவிக்குரிய காரியத்தில் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்பதற்கான அடையாளமல்ல, வேதாகமம் இந்தக் காரியத்தில் தெளிவாயிருக்கிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஏன் யூதாகோத்திரத்து ஆசாரியராயிருக்க அனுமதிக்கப்படவில்லை. யார் ஆசாரியராக இருக்க வேண்டும் என்று குறிப்பாக வழிமுறைகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. எபிரெயர் 7:14 நம்முடைய கர்த்தர் யூதாகோத்திரத்தில் தோன்றினாரென்பது பிரசித்தமாயிருக்கிறது; அந்தக் கோத்திரத்தாரைக் குறித்து மோசே ஆசாரியத்துவத்தைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே.

**எபேசியர் 5:19-21** வசனங்கள் ஆராதனையில் இசை பயன்படுத்துவது பற்றி குறிப்பாகப் பேசவில்லையென்றாலும் கூட, இவ்வசனப்பகுதியை நாம் கவனிப்பது நன்மையாயிருக்கும். பதினெட்டாம் வசனத்தில், ஆவியினால் நிரப்பப்பட வேண்டும் என்கிற கட்டளையைப் பார்க்கிறோம். இந்த வசனம் நாம் என்ன செய்ய வேண்டுமென்று சொல்கிறது. ஆனால், *19-21* வசனங்கள் நாம் அதை எப்படிச் செய்யவேண்டுமென்று சொல்கிறது. இந்த வசனப்பகுதியில் இசை வலியுறுத்தப்படுகிறது, ஆயினும், அந்த இனிமையான இசை இருதயத்திலிருந்து வரவேண்டும்.

பழைய ஏற்பாட்டின் கீழ் ஆராதனையில் பாடலும், இசைக்கருவிகளை வாசித்தலும் தனித்தனியாக அல்லது வேறுவேறாகத்தான் கையாளப்பட்டிருக்கின்றன. ஒன்றை பயன்படுத்துவது மற்றொன்றால் அங்கீகரிக்கப்படுவதில்லை ( II நாளாகமம் *29:27,28*) தாவீது ராஜாவின் காலத்திற்கு முன்பு தேவனை ஆராதிப்பதற்கு இசைக்கருவிகள் பயன்படுத்தப்படவில்லை. இப்புதுமையை தாவீது ராஜாதான் ஆராதனையில் அறிமுகப்படுத்தினார். ஆராதனையில் இசைக்கருவிகள் வாசிக்கப்படுவது அறிமுகப்படுத்தப்பட்டதை தேவன் அங்கீகரித்தார் என்று வேதவாக்கியங்களிலிருந்து தெளிவாகத் தெரிய வில்லை. ஆனால், பின்பு அது தேவனால் கட்டளையிடப்பட்டது (II நாளாகமம் *29:25*). தேவன் சிலவற்றை கட்டளையிட்டாலும் கூட, அது தேவனால் அங்கீகரிக்கப்பட வேண்டிய அவசியமில்லை. இஸ்ரவேல் ஜனங்கள் பூமிக்குரிய ராஜா வேண்டுமென்று ஆசைப்பட்ட போது, அங்கே அவர்களுக்கு ராஜாவைக் கட்டளையிட்டார். ஆனால், ராஜாவை அவர் அங்கீகரிக்கவில்லை ; இஸ்ரவேலுக்கு தண்டனையாக தேவன் அவர்களுக்கு ராஜாவைக் கொடுத்தார் : அப்பொழுது கர்த்தர் சாமுவேலை நோக்கி ; ஜனங்கள் உன்னிடத்தில் சொல்வதெல்லா வற்றிலும் அவர்கள் சொல்வதைக்கேள் ; அவர்கள் உன்னைத்தள்ள வில்லை, நான் அவர்களை ஆளாதபடிக்கு என்னைத் தான் தள்ளினார்கள், நான் அவர்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணின நாள்முதல் இந்நாள் மட்டும் அவர்கள் என்னைவிட்டு, வேறே தேவர்களைச் சேவித்துவந்த தங்கள் எல்லாச் செய்கைகளின்படியும் செய்ததுபோல அவர்கள் உனக்கும் செய்கிறார்கள் ( I சாமுவேல் *8:7-9* ).

பழைய ஏற்பாட்டு தேவாலய ஆராதனையில் இசைக்கருவிகள் முக்கிய பங்கு வகித்தது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால்,

புதிய ஏற்பாட்டு ஆராதனையில் இசைக் கருவின் இல்லாமலிருப்பது ஆச்சரியமாயிருக்கிறது. ஆதித் திருச்சபையில் ஆராதனையில் இசைக்கருவிகள் வாசிக்கப்பட்டதாக வேதவாக்கியங்களிலுமில்லை, உலக சரித்திரத் தகவல்களிலுமில்லை. இக்காலக்கட்டத்தில் சபையில் பயன்படுத்தப்பட்ட இசை பாடலாக மட்டுமே இருந்திருக்கிறது. இது ஒழுங்குபடுத்தப்பட்ட நடவடிக்கையாக இருந்திருக்கிறது. அதாவது, நாம் பாடவேண்டுமென்றாலும் கூட, நாம் விரும்பியதையெல்லாம் பாட முடியாது! நாம் சங்கீதங்களையும், கீர்த்தனைகளையும், ஞானப்பாட்டுகளையும் தான் பாடவேண்டும். இன்று கிறிஸ்தவ ஆராதனையில் இசைக்கருவிகளை வாசிக்க வேண்டுமென்று எங்கும் குறிப்பிடப்படவில்லை, அதன் பயன்பாட்டை நெறிப்படுத்த வழிமுறைகளும் கொடுக்கப்படவில்லை.

பழைய ஏற்பாட்டு முறைமையில் இரட்சிப்பு உண்டாகவில்லை என்பது தெளிவாகிறது. மனித இனத்திற்கு இரட்சிப்பை இயேசு கிறிஸ்துவின் இரத்தம் தான் கொண்டு வந்தது. அதேபோல், அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுவதுபோல, உயிரில்லாத வாத்திங்களிலிருந்து ( Iகொரி 14:7 ) ஜீவனைக் கொடுக்க இயலாத உடன்படிக்கையின் கீழிருந்து, ஜீவனுள்ள இருதயங்களுக்கு மாற்றப்பட்டு விட்டது (எபே.5:19)

பழைய ஏற்பாட்டின் தேவாலய ஆராதனை மிருகபலிகள், உயிரில்லாத வாத்தியங்களை வாசித்தல், தூபங்காட்டுதல் போன்ற சரீரப்பிரகாரமான காரியங்களைப் புதிய ஏற்பாடு ஆராதனை முறையோடு ஒப்பிடமுடியும். புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவர்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறார்கள் (II கொரி 6:16 ) இனிமையான இசை இருதயத்திலிருந்து அமைக்கப்படுகிறது ( எபேசியர் 5:19 ) உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலிகள் தேவனுக்கு ஏறெடுக்கப்படுகிறது ( எபிரெயர் 13:15 ) கிறிஸ்தவ இசை பழைய ஏற்பாட்டு உயிரில்லாத வாத்தியங்களில் இல்லை. மாறாக, தேவனுடைய ஆலயமாயிருக்கிற ஜீவனுள்ள இருதயங்களில் இருக்கிறது.

✞

# நீங்கள் இதை எப்படிப் பார்க்கிறீர்கள்?

# How Do You SeeThis?

## எசேக்கியேல் 3:17-21

17. மனுபுத்திரனே, உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்குக் காவலாளனாக வைத்தேன்; நீ என் வாயினாலே வார்த்தையைக்கேட்டு, என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக,

18. சாகவே சாவாய் என்று நான் துன்மார்க்கனுக்குச் சொல்லுகையில், நீ துன்மார்க்கனைத் தன் துன்மார்க்கமான வழியில் இராதபடிக்கு எச்சரிக்கும்படியாகவும், அவனை உயிரோடே காக்கும்படியாகவும், அதை அவனுக்குச் சொல்லாமலும், நீ அவனை எச்சரிக்காமலும் இருந்தால், அந்த துன்மார்க்கன் தன் துன்மார்க்கத்திலே சாவான்; அவன் இரத்தப்பழியையோ உன் கையிலே கேட்பேன்.

19. நீ துன்மார்க்கனை எச்சரித்தும் அவன் தன் துன்மார்க்கத்தையும் தன் ஆகாத வழியையும் விட்டுத் திரும்பாமற் போவானாகில், அவன் தன் துன்மார்க்கத்திலே சாவான்; நீயோவென்றால் உன் ஆத்துமாவைத் தப்புவிப்பாய்.

20. அப்படியே, நீதிமான் தன் நீதியை விட்டுத் திரும்பி, நீதிக்கேடு செய்யும்போதும் நான் அவன்முன் இடறலை வைக்கும் போதும், அவன் சாவான்; அவன் செய்த நீதிகள் நினைக்கப்படுவதில்லை; அவனுடைய இரத்தப்பழியையோ உன் கையிலே கேட்பேன்.

21. நீதிமான் பாவஞ்செய்யாதபடிக்கு நீ நீதிமானை எச்சரித்த பின்பு அவன் பாவஞ்செய்யாவிட்டால், அவன் பிழைக்கவே பிழைப்பான்; அவன் எச்சரிக்கப்பட்டான்; நீயும் உன் ஆத்துமாவைத் தப்புவித்தாய் என்றார்.

✞

அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை

# சத்தியத்தைச் சொல்லும்படி

## *To Tell The Truth*

Dalton Key

இந்த நாட்களில் யாராவது உண்மையைச் சொல்கிறார்களா? இன்று சமுதாயத்தில் தட்டுத்தடுமாறினாலும் கிடைக்கப்பெறாத, தட்டுப்பாடான பொருளாகிய சத்தியத்தின் மீது மதிப்புவைத்திருக்கிற ஒருவர் இருக்கிறது போல் தெரியவில்லை தானே? அரசியல்வாதிகள் சத்தியத்தை வளைக்கிறார்கள், விளம்பரதாரர்கள் அதை நீட்டுகிறார்கள், ; நடிகர்கள் கைதட்டலையும் , பாராட்டையும் உள்வாங்கிக்கொண்டு சத்தியத்தை வழக்கம்போல் தவிர்த்து, அதைக் கண்டுகொள்ளாமல், வெளிப்படையாகவே அதைக் காலில்போட்டு மிதிக்கிறார்கள் இவ்வளவு நடந்து கொண்டிருக்கும்போது நாம் மெளனமாயிருப்பதைப் பார்த்தால் நாமும் பொய்யை விரும்புவதுபோல் அல்லவா தெரிகிறது!

நாம் வாழும் இவ்வுலகில் நம்மீது வேண்டுமென்றே தவறான தகவல்களும் ஏமாற்றுக் கணைகளும் தொடுக்கப்படுகின்றன. நம்பிக்கை என்னும் வார்த்தை பின்னுக்குத் தள்ளப்படுகிறது. ஒரு காரியம் உண்மை யாயிருக்கிறதா இல்லையா என்பதை விசாரிப்பது கூட முக்கியமற்ற தாகிவிட்டது. அதற்கு பொழுதுபோக்கு அம்சங்களுக்கு கொடுக்கப் படும் முக்கியத்துவம் கூட கொடுக்கப்படுவதில்லை.

இன்று வாலிபர்கள் சுயநலவாதிகளாக இருப்பதில் ஆச்சரியம் எதுவுமில்லை. அவர்களுக்கு யார் உண்மையைச் சொல்வார்கள் என்பதில் ஒரு தெளிவு இல்லை. அவர்கள் பொய்யான செய்தியைக் கேட்கிறார்கள். அவர்கள் தங்கள் அபிமான, நட்சத்திரங்களின் வார்த்தைகளைக் கேட்கிறார்கள். அதாவது, திரும்பத் திரும்ப பொய்யையே கேட்கிறார்கள். இன்னும், அவர்கள் பெற்றோர்கள் ஆசிரியர்கள் மற்றும் தங்கள் மாதிரிகளின் வார்த்தைகளைக் கேட்கிறார்கள். மறுபடியும் அவர்கள் பொய்யைத் தான் கேட்கிறார்கள்.

நாம் பொய்யைக் களைய வேண்டுமென்று வேத வசனங்கள் எச்சரிக்கின்றன. **அன்றியும் நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறபடியால் பொய்யைக் களைந்து அவனவன் பிறருடனே மெய்யைப் பேசக்கடவன்** (*எபேசியர் 4:25*)

அந்தகார சக்திகள் எவ்வித சந்தேகமுமின்றி அநீதி மற்றும் வஞ்சகத் தோடு தங்கள் நீண்டகால உறவைத் தொடர்வார்கள். ஆனால், நாம் தேவனு டைய பிள்ளைகளாக ஒளியின் பிள்ளைகளாக இருக்கிற படியால் சத்தியத் தையே பேச வேண்டும். நாம் பேசவில்லையென்றால், யார் பேசுவார்? ✝

# பெண்ணிடமிருந்து பெண்ணுக்கு

# From Woman To Woman

Kerstin Allison.dd



என் அலுவலகத்தில் நடந்த ஓர் ஊக்குவிப்பு கூட்டத்தில் என் மனம் அலைபாய ஆரம்பித்தது. நான் எவ்வளவு சோர்வாக இருந்தேன், இரவிலே எப்படிப் படுக்கைக்குப் போவேன் என்பதைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருந்தேன். எங்கள் அலுவலகத்தின் மேலாண்மைக்குழு சில போட்டோக்களை ஒருவருக்கொருவர் அனுப்பும் வரை நான் என் வேலையைப் பற்றி யோசிக்கவேயில்லை. அவர்கள் வசந்த காலத்தில் எப்படிப்பட்ட ஆடைகளை அணியலாம் என்று விவாதம் நடத்திக் கொண்டிருந்தனர். மேலாண்மை குழு பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டிருந்தபோது, என் மனதில் ஒரு கேள்வி எழும்பியது : கார்ப்பரேட் உலகமே பொருத்தமான உடைகளை அணிவது குறித்து கவலைப்படும்போது, ஒரு கிறிஸ்தவப் பெண்ணாக தெய்வபக்திக்கேற்ற உடையை உடுத்துவதில் எவ்வளவு கவலைப்பட வேண்டுமென்பதை எண்ணிப் பாருங்கள்!

I தீமோத்தேயு 2:9 இவ்விதமாகச் சொல்கிறது, **ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது முத்துக்களினாலாவது, விலையேறப்பெற்ற வஸ்திரத்தினாலவது தங்களை அலங்கரியாமல் தகுதியான வஸ்திரத்தினாலும் நாணத்தினாலும் தெளிந்த புத்தியினாலும் தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக் கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும் தங்களை அலங்கரிக்க வேண்டும்.** இங்கே பவுல், பெண்கள் பொருத்தமான வஸ்திரங்களை தரித்துக்கொள்ள வேண்டும் என்று சொல்கிறார். மற்றவர்களை ஈர்க்கத்தக்கதாக உடைகளை உடுத்தாமல் தகுதியான உடைகளை உடுத்துவது பொருத்தமாயிருக்கும் என்று பவுல் சொல்கிறார். மேலும், கிறிஸ்தவப் பெண்கள் தங்கள் தோற்றத்தினாளல்ல தங்கள் நற்கிரியைகளினால் தங்களை தேவபக்தியுள்ளவர்களென்று காட்ட வேண்டுமென்று சொல்கிறார்.

பேதுரு ஆசிரியரும் பவுலின் போதனையை உறுதி செய்கிறார்

மயிரைப்பின்னி பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல் அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும், அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது: அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றது (Iபேதுரு *3:34*). ஆகவே, ஒரு கிறிஸ்தவப் பெண்ணாக நாணத்துடன் தெளிந்த புத்தியுடன், சுயக்கட்டுப்பாட்டுடன் உடை உடுத்தி, நற்கிரியைகளினால் தேவபக்தியை வெளிப்படுத்துவது அவசியம்.

சிலருக்கு சில வேளைகளில் எது பொருத்தமானது, எது தேவனுக்கு பிரியமானது என்பதைப் புரிந்து கொள்வதற்கு சற்று கடினமாயிருக்கும். ஏனென்றால், பெண்கள் விளம்பரப் பலகைகளில் பத்திரிகைகளில் ஒருவிதமாகச் சித்தரிக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்ட நேரங்களில் தேவனுடைய வார்த்தையின்படி பெண்கள் நடந்து கொள்ள வேண்டும். உலகத்தின் பெண் தவறான உள்நோக்கங்களுடன் மற்றவர்களின் கவனத்தை ஈர்க்க உடை உடுக்கலாம். இருந்தபோதிலும், ஒரு கிறிஸ்தவப் பெண்ணாக நான் தேவனைப் பிரியப்படுத்த உடை உடுக்க வேண்டும். உலகத்தில் பெண்களைவிட சற்று வித்தியாசமாக நான் உடை உடுக்க வேண்டும். நான் எதை அணிகிறேனோ அது என் இருதயத்தையும், உள்நோக்கத்தையும் பிரதிபலிக்கிறது. நான் எதை அணிகிறேனோ அதை ஏன் அணிகிறேனென்றும், நான் எதை அணிகிறேனோ அதினால் தேவபக்தியை வெளிப்படுத்துகிறேனா என்றும் எனக்குள்ளே கேட்டுக்கொள்ள வேண்டும். நான் நானோ, அல்லது மற்றவர்களோ எதை விரும்புகிறார்களோ அதை அல்ல, தேவன் நான் எப்படி உடை உடுக்க வேண்டுமென்று விரும்புகிறாரோ அப்படியே ஆடைகளை அணிவேனென்று அன்றாடம் நினைவுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

Christian Courier என்னும் இணையதளத்தின் நிறுவனர் Waxne Jackson சொல்லும்போது, "தற்கால அசிங்கமான ஆடைகள் பெண்களை விடுதலையாக்கவில்லை. மாறாக, அவர்களை இழிவுப்படுத்தி சிருஷ்டிகர் அவர்கள் அனுபவிக்கும்படியாக உத்தேசித்திருந்த மகிமையான ரூபத்தை அலங்கோலமாக்கி விட்டது". என்று கூறியுள்ளார். கிறிஸ்தவப் பெண்ணாக உலகத்தின் அளவுகோலின்படி வாழாமல் தேவன் தம்முடைய வார்த்தையில் என்ன சொல்லியிருக்கிறாரோ அதன்படி வாழும்போது உலகத்தின் தவறான பார்வையிலிருந்து விடுபட்டவர்களாயிருப்போம். ✝

# நான் உண்மையாகவே இதை எழுத விரும்பவில்லை

## I Really Do not want to write this

Dawn Weaver.

நான் உண்மையாகவே இதை எழுத விரும்பவில்லை. இப்பிரச்சனையை மறுபடியும் எதிர்கொள்ள நான் விரும்பவில்லை. நான் எல்லோரிடமும் ஒத்துப்போய் நடக்கின்ற காரியங்களைக் கண்டுகொள்ளாமல் நன்றாக உணரவும், எல்லோரையும் பார்த்து புன்னகைக்கவும் விரும்புகிறேன். இருந்தாலும் என் இருதயமும், மனமும் அப்படிச்செய்ய அனுமதிக்கவில்லை. நான் இப்படிச் செய்ய நிர்பந்திக்கப்படுகிறேன். காரணம், இவ்வுலகத்தின் மக்களையும் அவர்கள் யார் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறார்களோ அவர்களையும் பரலோகத்தில் காண விரும்புகிறேன். எனவே, நாம் உண்மையாகவே ஒருவருக்கொருவர் அன்பாயிருந்தால் தேவன் எதிர்பார்க்கிற ஜனங்களாகயிருக்க முயற்சிப்போம். அப்படியென்றால் கூடவே நாம் ஒருவருக்கொருவர் தவறுகளை திருத்திக் கொள்ள வேண்டும். அப்போது நாம் கொடுக்கும் விலை குறைவாயிருக்கும். கிறிஸ்துவின் நாமத்தைத் தூஷிக்கும் வார்த்தைகளை நான் சொன்னாலோ அல்லது செயலைச் செய்தாலோ உங்களில் யாராவது என்னிடத்தில் வந்து என்னை சீர்திருத்த விரும்பினால், நீங்கள் உண்மையாகவே என்னிடத்தில் அன்பாயிருந்து நான் பரலோகம் போவதை உறுதிசெய்து, அதற்கு உதவி செய்கிறவர்களாயிருப்பீர்கள்.

ஒவ்வொரு வருடமும் பனிகாலத்திலும், பனிகாலம் முடிந்து கோடைகாலத்திலும், ஆடை அணியும் காரியத்தில் சிலர் தப்பித்துக் கொள்ள விரும்புவதை நாம் காண்கிறோம். பெண்களே, நாம் எதை உடுத்துகிறோமோ அதற்கு தேவனுக்கு கணக்குக் கொடுக்க வேண்டும். நம் பிள்ளைகள் எதை அணிகிறார்களோ அதைக் குறித்தும் நாம் தேவனுக்கு கணக்குக் கொடுக்க வேண்டும். ஆண்களே, நீங்கள் எதை அணிகிறீர்களோ உங்கள் மனைவி மற்றும் பிள்ளைகள் எதை அணிகிறார்களோ அதற்கு நீங்கள் தேவனுக்குக் கணக்கு கொடுக்க

வேண்டும். உடை உடுத்தும் காரியத்தில் பலர் உலகத்தின் போக்கிற்கு மிக நெருக்கமாக வளைந்து கொடுப்பதை என்னால் கவனிக்க முடிகிறது.

இல்லை, நாம் சாக்குப்பையை உடுத்திக்கொள்ள வேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஆனால், சில உண்மைகளை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். தோலை ஏதோ ஒன்று மறைக்கிறது என்பதற்காக அது பொருத்தமான ஆடை என்று பொருள்படாது. நீங்கள் அணியும் ஜீன்ஸ் எவ்வளவு இறுக்கமாக இருக்கிறது? நீங்கள் நீச்சல் அடிப்பதினால் எந்த ஆடைகளையும் அணியலாமென்று தேவனுடைய பிரமாணத்திலிருந்து உங்களுக்கு விதிவிலக்கு கிடையாது. அசிங்கமான ஆடைகளோடு உங்கள் வாசலில் கிறிஸ்துவை சந்திப்பது பொருத்தமாயிருக்குமா? அப்படியென்றால் அதை நீச்சல் அடிக்கும்போது அணிகிற அளவிலும் பொருத்தமாயிருக்காது. நாம் ஆடைகளை அணியும்போது அது பொருத்தமாயிருக்குமா என்று தேவனுடைய வார்த்தைகளை வைத்துப் பார்க்க வேண்டும். நீங்கள் கண்ணாடிக்கு முன்பாக நின்றுகொண்டிருக்கும் போது கீழே உங்கள் சட்டையை பார்க்க முடியாத காரணத்தால் நீங்கள் குனியும் போது அது எவ்வளவாய் வெளியே தெரிகிறது என்பதை நீங்களாகவே சிந்தித்துப் பாருங்கள். அப்பொழுது, மற்றவர்களை ஈர்க்கும் காரியத்தில் அது எவ்வளவு இடறலாயிருக்கிறது என்பதை உணர்வீர்கள். நீங்கள் எடை குறைந்து விட்டீர்கள் என்பதற்காக குட்டையான, இறுக்கமான ஆடைகளை அணிய உங்களுக்கு சுதந்திரமோ, அதிகாரமோ இல்லை.

அதேபோல், நீங்கள் ஆண்களாயிருப்பதினால் நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பது ஒரு பொருட்டல்ல என்று எண்ண வேண்டாம். மேல் சட்டைகளை கழற்ற உங்களுக்கு அனுமதி இல்லை. நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதை தேவன் பார்த்துக்கொண்டிருக்கிறார். என்பதை நினைவில் கொள்ளவேண்டும். ( நீங்கள் ஒரு குறிப்பிட்ட விளையாட்டுக்காக ஜெர்சியை அணியும் போது உங்கள் ஆடை அல்லது சில அடையாளங்கள் நீங்கள் எந்த அணிக்கு விளையாடுகிறீர்கள் என்பதை விளம்பரப்படுத்துகிறது. அப்படியானால், உங்கள் பயிற்சியாளர் யார்? தேவனா அல்லது சாத்தானா? உள்ளேயும், வெளியேயும் தேவனே அவருடைய அணியின் சீருடை எது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் அடையாளங்கண்டு கொள்ளட்டும் ).

✞

# தைரியம்
# Courage
Bill Dillon

**404-**ஆவது வருடத்தில் Telemachus என்னும் பேர் கொண்ட ஒரு கிறிஸ்தவத் துறவி ரோம் பட்டணத்துக்கு பயணித்தபோது அங்கே நடந்த வாள்சண்டை போட்டியைப் பார்த்து அதிர்ச்சியடைந்தார். அக்கொடுஞ்செயலைப் பார்த்து சொல்லொணாத்துயரம் அடைந்தார். Telemachus கலையரங்கில் நடைபெற்ற அவ்வாள் சண்டைப் போட்டியை சகித்துக் கொள்ள முடியாமல் அக்கலையரங்கைச் சுற்றிலும் மிகுந்த பாதுகாப்பு வளையத்தைத் தாண்டி வாள் சண்டைப் போட்டியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள் ஒருவரையொருவர் துண்டு துண்டாக வெட்டிக் கொள்ளாதபடி கிறிஸ்துவின் நாமத்தில் இதை நிறுத்துங்கள் என்று உரத்த சத்தமிட்டார். அந்த துறவி அவ்விடத்தைவிட்டுப்போக மனதில்லாமல் அங்கேயே நின்றுகொண்டிருந்தார். விளைவு? தொடர்ந்து வாள் சண்டையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்கள் அத்துறவியின் செத்த உடலின் மீது ஏறி நின்றனர். ஆனால், அத்துறவியின் தியாகம் வீணாகபோகவில்லை, ரோமப் பொதுமக்களின் மனசாட்சியில் ஒரு கிளர்ச்சி உண்டாகியதால் ரோமச்சக்கரவர்த்தியான Honorius அக்கொடுமையான விளையாட்டு முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டுமென்று ஆணையிட்டு விட்டார்.

Telemachus அவர்களால் முன்னுதாரணமாக வைக்கப்பட்டிருக்கிற இச்சம்பவத்தால் நம் தைரிய உணர்வு எழுச்சி பெற வேண்டும். தற்கால கிறிஸ்தவர்கள் சமுதாயத்தில் ஆழமாக வேரூன்றியிருக்கிற தீமைகளான அநியாயம், மெத்தனப்போக்கு, ஒழுக்கக்கேடு போன்றவைகளோடு போராடிக்கொண்டிருக்கும் இந்நாட்களில் இந்த உதாரணம் நம்முடைய தைரிய உணர்வைத் தட்டி எழுப்ப வேண்டும்.

கர்த்தருடைய சபை என்பது துன்மார்க்கம் மற்றும் எல்லாவிதமான அநீதிகளுக்கெதிராக போராடும்படி ஒன்றிணைந்த தைரியமான ஆத்துமாக்களின் கூட்டமைப்பாயிருக்கிறது. கிறிஸ்துவின் சபையானது

கோழைகளால் ஸ்தாபிக்கப்படவில்லை. கோழைகளால் பாதுகாக்கப்பட்டு வரவில்லை. தேவனுடைய ஜனங்கள் அஞ்சா நெஞ்சம் உடையவர்களாயிருந்து, உலகத்தை வசப்படுத்த முயற்சிக்காமல் தைரியமாய் எதிர்த்து நிற்க வேண்டும்.

கடுமையான சோதனைகளும், உபத்திரவங்களும் நம் தைரியத்தை அதிகரிக்கத்தான் செய்யும். தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். (Iதீமோத்தேயு 1:7).

நாம் தைரியமாயிருந்தால் மட்டுமே இவ்வுலகத்தின் நீரோட்டத்திற்கு எதிராக நீந்தி, தேவன் காட்டும் திசையில் பயணிக்க முடியும்.

✝

---

## பெற்றுக்கொள்

விதையை விதைத்து - அதன்
அறுவடையைப் பெற்றுக்கொள்!

முயற்சி எடுத்து அதனால் வரும்
வெற்றியைப் பெற்றுக்கொள்!

தீமையை வெறுத்து அதனால் வரும்
நன்மையைப் பெற்றுக்கொள்!

சாத்தானை சத்தியத்தினால் வீழ்த்தி அதனால்
ஜெயத்தை பெற்றுக்கொள்!

பாவத்தை அறிக்கையிட்டு - இன்பம் தரும்
இரட்சிப்பைப் பெற்றுக்கொள்!

வசனத்தில் நிலைத்திருந்து - அதன் பலனாக
நித்திய ஜீவனை பெற்றுக்கொள்!

# வாலிபன் தன் வழியை எதனால் சுத்தம் பண்ணுவான்?

# *How Shall The young Secure Their Hearts?*

Bonnie Rushmore.

உபாகமம் *6:1-9* வசனங்கள் தேவனுடைய கட்டளைகளை நம் பிள்ளைகளுக்குப் போதிப்பதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. தேவதாசனாகிய மோசே இஸ்ரவேலர்களைப் பார்த்து நீங்கள் கானான் தேசத்தை தேர்ந்தெடுப்பதற்கு முன்பு தேவனுடைய கட்டளைகளை கற்றுக்கொண்டு அதை உங்கள் பிள்ளைகளுக்கும், பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் கற்றுக்கொடுங்கள் என்று போதித்திருந்தார். மேலும், மோசே இஸ்ரவேலர்களிடம் நீ தேவனுடைய கட்டளைகளை வீட்டில் உட்காந்திருக்கிறபோதும் வழியில் நடக்கிறபோதும் படுத்துக்கொள்ளுகிறபோதும் எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப்பேசி, அவைகளை உன் கையின்மேல் அடையாளமாகக் இட்டுக்கொள்வாயாக; அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக் குறியாய் இருக்கக்கடவது என்று போதித்திருந்தார்.

பிள்ளைகளுக்கு தேவனுடைய கற்பனைகளைப் போதிப்பது இன்றும் பொருந்தக் கூடியதாயிருக்கிறது. எப்படி மோசே தேவனுடைய பிரமாணங்களைப் பிள்ளைகளுடைய மனதில் பதிய வைக்கும்படி இஸ்ரவேலர்களுக்குப் போதித்திருந்தாரோ, அதுபோல் நாமும் தேவனுடைய பிரமாணங்களை நம் பிள்ளைகளுடைய மனதில் பதியச்செய்ய வேண்டும், எபேசியர் *6:4* பிதாக்களே, நீங்கள் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வார்ப்பீர்களாக என்று சொல்கிறது. தகப்பன்மார்களுக்கு தேவனுடைய பிரமாணங்களை பிள்ளைகளுக்கு போதிக்கும் பொறுப்பு மட்டுமல்லாமல் பெற்றுக்கொண்ட வேதஅறிவை எப்படிப் பிள்ளைகள் பயன்படுத்த வேண்டுமென்றும் கற்றுக் கொடுக்கும் பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது. பிள்ளைகளைப்

பயிற்றுவிப்பது என்பது வேதவசனங்களை மனப்பாடமாக ஒப்புவிக்க வைப்பது, வேதாகம சம்பவங்களை திரும்ப திரும்ப அவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதைவிட அதிகமாயிருக்க வேண்டும். வேதவசனங்களை அவர்களாகவே, படிக்கும் ஆற்றலை அவர்கள் மனதில் பதிய வைக்க வேண்டும். அவர்களிடத்தில் எது சொல்லிக் கொடுக்கப்பட்டதோ அதையே திரும்பத் திரும்ப சொல்ல வைக்கக் கூடாது. அதேபோல், தவறிலிருந்து சரியானதைப் பகுத்தறியும் திறனையும் அவர்களுக்கு கற்றுக்கொடுக்கவேண்டும். எல்லாவற்றையும் விட மிக முக்கியமாக தேவனுடைய வார்த்தையை அவர்களுடைய தனிப்பட்ட வாழ்வின் அங்கமாக்க வேண்டும். இதை நாம் செய்யும்போது நம் பிள்ளைகள் தங்கள் வழிகளை சுத்தம் பண்ணும் செயல்முறையில் இருப்பார்கள். நம்மில் பலருக்கு இது தெரியும் இருந்தாலும் கடினமான பகுதி என்னவென்றால், அதை நடைமுறைப்படுத்துவது தான்

ஒவ்வொரு பெற்றோரும் I சாமுவேல் 1-8 அதிகாரங்களில் இடம்பெற்றுள்ள அன்னாளின் உதராணத்தை நினைவில் கொள்ள வேண்டும். அவள் ஒரு குமாரனுக்காக கருத்தாய் தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணினாள். தன் விண்ணப்பத்திற்கு பதில் கிடைத்தால் அந்தக் குமாரனை கர்த்தருக்கே ஒப்புக்கொடுப்பதாகவும் பொருத்தனை பண்ணினாள். தேவன் அன்னாளின் ஜெபத்தைக் கேட்டார். அன்னாளும் தன் பொருந்தனையை நிறைவேற்றினாள். அவள் சாமுவேலை பால்மறக்கச் செய்த உடனே, பிரதான ஆசாரியனாகிய ஏலியிடம் அவனைக் கொண்டு போய் விட்டாள், தேவாலயத்திலே தேவனுக்கு ஊழியஞ்செய்யும்படி அங்கே கொண்டுபோய் விட்டாள். பல பெற்றோர்கள். தேவனுடைய கட்டளைகளின்படி பிள்ளைகள் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமென்று ஜெபிக்கிறார்கள். ஆனால், தேவனுடைய கட்டளைகளின் படி பிள்ளைகள் வாழவேண்டுமென்று ஜெபிப்பதில்லை. நாம் தேவனுக்கு ஊழியம் செய்யும்படி நம் பிள்ளைகளை அன்னாள் தேவாலயத்தில் கொண்டுவிட்டதுபோல் கொண்டுவிடவேண்டியதில்லை. ஆனால், பிள்ளைகளுடைய பிறப்பிலிருந்தே தேவனுடைய வார்த்தைகளை அவர்களுக்குப் போதித்து, அதன்படி வாழவும், வாழ்வில் தேவனுக்கு முதலிடம் கொடுக்கவும் கற்றுக்கொடுக்க வேண்டும். குழந்தைகளைப் பயிற்றுவிக்க தேவனுடைய உதவியை நாடி ஜெபிக்க வேண்டும். நாம் தினமும் பிள்ளைகளுக்காக ஜெபிக்கிறோம் என்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

நம் பிள்ளைகள் முதிர்ச்சியடையும்போது தேவனுக்கு எல்லாவற்றிலும் முதலிடம் கொடுக்கவும், வாழ்க்கையின் மற்ற காரியங்களுக்கு இரண்டாவது இடத்தைக் கொடுக்கவும் கற்றுக் கொடுக்க வேண்டும். மத்தேயு *10:36;22;37,38;* (லூக்கா *14:26,27;* பிலிப் *3:7-9* ). இதன் பொருள் வேத பாடங்கள் வீட்டுப்பாடங்களுக்கு முன்பாகவும், ஆராதனையானது வேத ஆராய்ச்சி வகுப்பு பள்ளி செயல்பாடுகளுக்கு முன்பாகவும், சபை செயல்பாடுகள் நண்பர்களோடு ஒன்றுகூடுவதற்கு முன்பாகவும் வரவேண்டும். அதே போல், நம் பிள்ளைகளுக்கு நண்பர்களைத் தேர்வுசெய்ய கற்றுக்கொடுக்க வேண்டும். அதாவது, பரலோகம் போக யார் உதவிசெய்கிறார்களோ அப்படிப்பட்டவர்களிடம் நட்பை ஏற்படுத்திக் கொள்ள அவர்களுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும். இது நடக்க வேண்டுமென்றால் பெற்றோர்களாக நாம் வேதபாடங்களை விளையாட்டோடு கலந்து அவர்கள் விரும்புகிறபடி சுவாரசியமாக கற்றுக்கொடுக்க வேண்டும். இவையெல்லாவற்றையும் சிறுவயதிலேயே ஆரம்பித்து அவர்களுடைய பதின்பருவம் முழுவதிற்கும் தொடரவேண்டும்.

நாம் பிள்ளைகளுக்கு ஆரம்பப்பள்ளியிலிருந்தே தேவனுக்கு சேவை செய்ய கற்றுக் கொடுக்க வேண்டும். எல்லாப் பிள்ளைகளுமே தங்கள் சாதனைகள் அங்கீகரிக்கபடவேண்டுமென்று விரும்புவார்கள். உங்கள் பிள்ளைகளை வீட்டில் அடைபட்டுக்கிடக்கிறவர்களுக்கு பிஸ்கட்களை அல்லது ஏதாவது தின்பண்டங்களை எடுத்துச் செல்லப்பழக்க வேண்டும்.

நாம் குழந்தைகளை கிறிஸ்துவின் சுவிசேஷத்தால் இழந்து போனவர்களை போய் சந்திக்கும்படி செய்ய வேண்டும், அதை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது. அதுபோல், நம் குழந்தைகளின் நண்பர்களை அவர்களுக்குத் தெரிந்தவர்களை வேத பாடவகுப்பு களுக்கும் சுவிசேஷக் கூட்டங்களுக்கும், VBS போன்றவைகளுக்கும் அழைத்து தேவனுடைய வார்த்தையைக் கேட்கச் செய்ய வேண்டும். குழந்தைகளால் வீட்டுக் கதவுகளைத்தட்டி ஆராதனையில் கலந்து கொள்ளும்படி குடும்ப அங்கத்தினர்களுக்கும், நண்பர்களுக்கும் அழைப்பு விடுக்க முடியும். சபையைப் பற்றியும் அடுத்து நடைபெறவிருக்கும் நிகழ்ச்சியைப் பற்றியும் தகவல்களை உள்ளடக்கிய கைப்பிரதிகளைக் கொடுக்க முடியும். பெரியவர்களிடமிருந்து அவர்களுக்கு உதவியும், உற்சாகமும் தான் தேவை.

குழந்தையின் வாழ்க்கை முழுவதும் பெற்றோர்கள் தேவனுடைய

வார்த்தையைப் போதிக்க ஒவ்வொரு வாய்ப்பையும் பறித்துக்கொள்ள வேண்டும். நம் அனுதின செயல்பாடுகளில் மாபெரும் சிருஷ்டிகளைப் பற்றியும், கிறிஸ்துவைப் போன்ற மன நிலையைப்பெற்றுக் கொள்ள கற்றுக் கொள்பவரைப்பற்றியும் நாம் ஒருவரோடொருவர் பேசும்போது போதுமான உதாரணங்களைக் கொண்டு போதிக்க வேண்டும். அதுபோல், ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பயணிக்கும் போது அந்த நேரத்தை மனப்பாட வசனங்களை கற்றுக்கொள்வதற்கும், வேதாகம உண்மைகளை கற்றுக்கொள்வதற்கும் பயன்படுத்த வேண்டும். நாம் ஒவ்வொரு நாளும் நம் குழந்தைகளோடு வேதத்தை வாசிப்பதிலும், ஜெபிப்பதிலும் நேரத்தை செலவிட வேண்டும். வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்றுமணி நேரம் வேதபாட வகுப்பிலும், ஆராதனையிலும் கொடுக்கப்படும் வேதாகம போதனைகள் நம் குழந்தைகளை தேவனுடைய பரிசுத்த வார்த்தையில் வேரூன்றச்செய்யும் என்று நம்மை ஏமாற்றிக் கொள்ள வேண்டாம்.

நாம் நம் உதாரணத்தால் அல்லது மாதிரியால் அவர்களுக்கு போதிக்கத் தவறினால் நம் போதனைகளெல்லாம் வீணாகிவிடும். நாம் நான் சொல்வதின்படி செய், நான் செய்வதின்படி செய்யாதே என்னும் பழைய வழக்கின்படி வாழ முடியாது. நாம் நம் வாழ்க்கையில் தேவனுக்கு முதலிடம் கொடுப்பதைப் பிள்ளைகள் காண வேண்டும்.

நம் வேலை, குடும்பம், கேளிக்கை நிகழ்ச்சிகளைவிட கிறிஸ்தவ வாழ்க்கையும், கிறிஸ்தவ சேவையும் முதன்மையாயிருக்க வேண்டும். நாம் மற்றவர்களோடு பேசும்போது கிறிஸ்துவைப் போன்ற மனநிலை இருப்பதை நம் குழந்தைகள் நம்மில் காண வேண்டும். இவ்வுலகில் இழந்துபோன ஆத்துமாக்களைப் போய் நாம் சந்திப்பதை அவர்கள் காணவேண்டும். நாம் அவர்களுக்காகவும், மற்றவர்களுக்காகவும் ஜெபிப்பதை குழந்தைகள் காண வேண்டும், நாம் வேதபாட வகுப்பில் கலந்து கொள்வதற்கு முன்பாக வேதத்தை வாசிப்பதையும், வேத அறிவைப் பெற்றுக்கொள்ள தனிப்பட்ட முறையில் வேதாகமத்தை வாசிப்பதையும் குழந்தைகள் காண வேண்டும்.

நாம் கர்த்தருக்காக நம் பிள்ளைகளின் இருதயங்களை எப்படி காத்துக் கொள்ள முடியும்? தேவனுடைய சித்தத்தின்படி தேவபக்தியுள்ள வாழ்க்கை வாழ்ந்து, நம் பிள்ளைகளுக்கு தேவனை நேசிக்கவும், தேவனுக்கு கீழ்ப்படியவும் போதிப்பதினால்தானே!

✞

# உங்கள் இல்லத்தில்

## AT YOUR HOUSE

WENDELL WINKLER

**உங்கள் குழந்தைகளின் இருதயத்தில் எதை நீங்கள் முதன்மைப்படுத்துகிறீர்கள்?**

☆ நீங்கள் அவர்களை விளையாட்டிற்கு நேரமாக அழைத்துச் செல்கிறீர்கள். ***ஆனால், ஆராதனைக்கு தாமதமாக அழைத்துச் செல்கிறீர்கள், அப்படித்தானே?***

☆ நீங்கள் தவறாமல் அவர்களுடைய வீட்டுப்பாடங்களை சோதித்துப் பார்க்கிறீர்கள். ***ஆனால், அவர்களுடைய வேதபாடங்களை ஒருபோதும் சோதித்துப் பார்ப்பதில்லை, அப்படித்தானே?***

☆ நீங்கள் அவர்களை பள்ளிக்குச் செல்லும் நாட்களில் இரவு வேளைகளில் நீண்டநேரம் கண்விழிக்க விடுவதில்லை. ***ஆனால், சனிக்கிழமை இரவுகளில் அதற்கு அனுமதி கொடுத்துவிடுகிறீர்கள், அப்படித்தானே?***

☆ நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு விருப்பமில்லாவிட்டாலும் கூட பள்ளிக்குப் போகாமலிருப்பதை நீங்கள் அனுமதிப்பதில்லை. ***ஆனால், ஆராதனையை அவர்கள் தவறவிட நீங்கள் அனுமதிக்கிறீர்கள், அப்படித்தானே?***

☆ நீங்கள் உங்கள் பிள்ளைகளின் பள்ளி ஆசிரியர்கள் எல்லோருடைய பெயரையும் தெரிந்து வைத்திருக்கிறீர்கள். ***ஆனால், யார் ஞாயிறு பள்ளி பாடங்களை நடத்துகிறார்கள் என்பதும், அவர்கள் அங்கே என்ன படிக்கிறார்களென்றும் உங்களுக்கு தெரியாது. அப்படித்தானே?***

☆ நீங்கள் உங்கள் பிள்ளைகளின் பள்ளியில் நீங்களாகவே விருப்பப்பட்டு சில வேலைகளில் ஆசிரியருக்கு உதவி செய்கிறீர்கள். ***ஆனால், ஆவிக்குரிய காரியங்களை உள்ளடக்கிய வேதவகுப்புகள் செயல்பாடுகள், மற்றும் திட்டங்களுக்கு நீங்கள் உதவுவதில்லை. அப்படித்தானே?***

★ நீங்கள் உங்கள் குழந்தைகளின் பள்ளியில் நடக்கும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். ***ஆனால், ஞாயிறு பள்ளி நடக்கும் வகுப்பறையைக் கூட நீங்கள் பார்த்ததில்லை அல்லது அது எங்கே நடக்கிறது என்பது கூட உங்களுக்கு தெரியாது, அப்படித்தானே?***

★ நீங்கள் உங்கள் குழந்தைகளின் பள்ளியில் நடக்கும் விளையாட்டுப் போட்டிகள் எதுவாயிருந்தாலும் அதில் கலந்து கொண்டு அதற்கு ஆதரவாகப் பேசுகிறீர்கள். ***ஆனால், சபைக்கருத்த நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும் தொடர்ச்சியாக கலந்து கொள்வதில்லை, அப்படித்தானே?***

★ நீங்கள் குழந்தைகளின் பள்ளி நாட்களில் சுற்றுலா செல்வதில்லை. ***ஆனால், சபை மூலமாக நடத்தப்படும் கருத்தரங்கம் அல்லது சுவிசேஷக்கூட்டங்களின் போது சுற்றுலா செல்கிறீர்கள் அப்படித்தானே?***

★ நீங்கள் நன்றாக உணராதபோது அல்லது சுகமில்லாதபோது கூட வேலைக்கு செல்கிறீர்கள். ***ஆனால், காரணமே இல்லாமல் ஞாயிற்றுக்கிழமை வீட்டில் இருந்து விடுவீர்கள், அப்படித்தானே?***

★ ஆம், இப்படிப்பட்ட சூழ்நிலைகள் நிலவும்போது, உங்கள் பிள்ளைகளின் இருதயத்தில் எதை நீங்கள் முதன்மைப்படுத்துகிறீர்கள்? ✞

*சிந்திப்போம்! செயல்படுவோம்!!*

# கிறிஸ்தவ மார்க்கம்

1. ஜீவ மார்க்கம் (அப் 2:28)
2. விசுவாச மார்க்கம் (கலா 3:9)
3. உத்தம மார்க்கம் (நீதி 11:20)
4. ஞான மார்க்கம் (நீதி 4:11)
5. நீதியின் மார்க்கம் (II பேதுரு 2:21)
6. கர்த்தருடைய மார்க்கம் (அப் 18:25)
7. தேவனுடைய மார்க்கம் (அப் 18:26)

கிறிஸ்தவ இல்லம்

# என் தாய் காலத்தை முன்னறிந்தார்

## My Mother Was Ahead of The Times

Bob Plunket

ஒரு வாலிபன் அருமையான வாகனத்தில் வந்து இறங்கியதை நான் கண்டேன். அது விலை உயர்ந்த ஒரு வாகனமாயிருந்தது. அவன் ஒரு பழைய நிறம் மங்கிப்போன ஜீன்ஸ் பேண்ட்டை அணிந்திருந்தான். அந்த ஜீன்ஸில் முழங்கால் பகுதியில் ஒட்டைகள் போடப்பட்டிருந்தது. அந்தக் கோலத்தில் அவ்வாலிபனை நான் பார்த்தபடியால் அவன் அந்த காரை திருடிவிட்டுத்தான் வந்திருக்க வேண்டுமென்று நினைத்தேன் ஆனால், யாரோ ஒருவர் **அப்படி ஜீன்ஸ் அணிவது தான் இப்போதைய ஸ்டைல்** என்று சொன்னார். முன்பெல்லாம் நாங்கள் ஏழைகளாயிருந்த படியால் ஒட்டுபோடப்பட்ட, துவாரங்களையுடைய பழைய ஜீன்ஸ் பேண்ட்டை அணிந்திருந்தோம் என்று நினைத்தேன். என் தாய் காலத்தை முன்னறிந்தார். அக்காலத்தில் ஒட்டைதுணிகளை வறுமையின் காரணமாக நாங்கள் அணிந்திருந்தபோது நாங்கள் அழகாக இருந்ததாக அம்மா சொன்னார். ஆனால், அதை நான் ஒருபோதும் நம்பவில்லை. இன்று நான் பள்ளியில் படித்தால், சிறப்பான ஆடைகளை அணிந்திருப்பவன் நானாகத்தான் இருப்பேன்.

நான் சொல்கிறதை உங்களால் நம்ப முடியுமா? வாழ்க்கையில் பெரும்பாலும் நாங்கள் காய்கறிகளையும், மக்காச்சோள ரொட்டிகளையும் தான் சாப்பிட்டோம். கொழுப்பு நிறைந்த உணவையும், சிவப்பு மாமிசத்தையும் புசிக்கக்கூடாதென்று என் அம்மாவுக்கு எப்படித் தெரியும்? சைவ உணவு பிரபலமாவதற்கு முன்பே நாங்கள் சைவ உணவை உண்டு கொண்டிருந்தோம். ஆனால், அப்போதெல்லாம் நான் நாங்கள் ஏழைகளாகயிருந்தனால் சைவ உணவு உட்கொள்ள வேண்டியதாயிருந்ததென்று நினைத்தேன், ஆனால் என் தாய் காலத்தை முன்னறிந்தார்.

என் அம்மா சிறுசிறு அடிகள் கொடுத்தபோது, அவர்களுக்கு எங்களோடு உட்கார்ந்து பேசி காரணகாரியங்களை ஆராய நேரமில்லை என்று நினைத்தேன். இன்று அதிகமாக விற்பனையாகும்

குழந்தை வளர்ப்பு சம்மந்தமான புத்தகம் **அன்பு கடினமாக இருக்கவேண்டும்** என்னும் புத்தகம் தான். ஆனால், இவைகளெல்லாம் என் தாய்க்கு தெரிந்திருந்தது. என் தாய்க்கு குழந்தைகளோடு காரணகாரியங்களை ஆராய்வது சம்மந்தமான புத்தகங்களையெல்லாம் படிப்பதற்கு நேரமில்லை. ஆனால், என் தாய் காலத்தை முன்னறிந்தார்.

இன்றைய நாட்களில் உடற்பயிற்சியைப் பற்றியும் இதய அமைப்புக்கு அது கொண்டுவரும் நன்மைகளைப் பற்றியும் நாம் அதிகமாகக் கேள்விப்படுகிறோம். நாங்கள் வளர்ந்து கொண்டிருந்த நாட்களில் உடற்பயிற்சிக்காக நடைபயிற்சி செய்தவர்களை பார்க்கவில்லை. நாள் முழுவதும் கடினமாக உழைத்ததினால் அவர்கள் சோர்வுடன் வீட்டிற்கு வந்துசேர்ந்தார்கள். அவர்கள் இரவு வேளையில் தூக்கத்திற்காக தூக்க மாத்திரைகளை எடுக்க வேண்டிய அவசிய மில்லாதிருந்தது. செய்ய வேண்டிய வேலை அதிகமாயிருந்த படியால், பெரும்பாலான நேரங்களில் என் தாய் எங்களுக்கு உடற்பயிற்சி கொடுத்து கொண்டே இருந்தார். என் தாய் ஒரு செயலற்ற மனதில் சாத்தானின் பட்டறை உள்ளது என்பதை நன்றாக அறிந்திருந்தார்.

இன்று இளைய தலைமுறையினருக்கு அவர்கள் உயர்வாக பார்க்க தங்கள் இலக்குகளில் நம்பிக்கை வைக்க, தங்கள் வாழ்க்கையின் தூண்டுகோலாக நம்பிக்கை நட்சத்திரமாக யாரோ ஒருவர் இன்று தேவைப்படுகிறார்கள். என் அம்மாவுக்கு இவைகளெல்லாம் முன்பே தெரிந்திருந்தது. என் அம்மா எங்களுக்கு மாதிரியாக இயேசு கிறிஸ்துவையே காட்டி அவரைப்பற்றி போதித்தார். நாங்கள் குடும்பமாக சேர்ந்து தேவனை ஆராதித்தோம், சேர்ந்து வேதாகமத்தை வாசித்தோம், சேர்ந்து ஜெபித்தோம்.

நிச்சயமாகவே, என் தாய்க்கு கொழுப்பு (கொலஸ்ட்ரால்) நிறைந்த உணவைப் பற்றியெல்லாம் தெரியும் என்று சொன்னபோது அதை விளையாட்டாகச் சொன்னேன், ஆனால் கிறிஸ்தவ தாய்மார்கள் காலத்தை முன்னறிந்தார்கள் என்று சொன்னபோது நான் விளையாட்டாகச் சொல்லவில்லை. ஏனென்றால், அவர்கள் தேவனுக்கு இசைவான வாழ்க்கையைத் தான் வாழ்ந்திருக்கிறார்கள், தேவனிடமிருந்து அருமையான ஆலோசனைகளை உள்ளடக்கிய வேத புத்தகம் அவர்களிடத்திலிருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் **பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள் இது நியாயம். உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும் உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது** என்று சொன்னபோது இதை மனதில் கொண்டவராகத் தான் சொல்லியிருப்பார் (எபேசியர் *6:1-3*)

✞

கிறிஸ்தவ இல்லம்

# வீடு நெருக்கடியிலிருக்கிறது

# *The Home in Crisis*

Dennis Gultedge

**வீடு எப்படியோ, நாடும் அப்படியே** என்னும் பழமொழியைக் கேட்டிருப்பீர்கள். இது கிறிஸ்தவர்களாலும், கிறிஸ்தவர்களல் லாதவர்களாலும் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிற உண்மையா யிருக்கிறது. சாலொமோன் ஞானி, **நீதி ஜனத்தை உயர்த்தும் பாவமோ எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி** என்று சொல்கிறார் (நீதிமொழிகள் *14:34*).

நாம் வீடும், குடும்பமும் கெட்டுக் குட்டிச்சுவராகிவிட்ட நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சமுதாயம் வீட்டைச் சீர்குலைத்து சின்னா பின்னமாக்கி வீடு என்பதற்கு புதிய விளக்கத்தை கொடுக்கிறது. நாம் இதைக்குறித்து அக்கறைப்பட வேண்டுமா? நாம் ஏதோ நேற்று விழித்து நம் இல்ல சீரழிவைக் காணவில்லை. அமெரிக்காவில் *1960* - ல் ஏற் பட்ட புதுமையான பாலினப் புரட்சி, அதாவது மக்கள் எதை வேண்டு மானாலும் செய்து கொள்ளலாம் அதற்கு தடை எதுவுமில்லை என்னும் புதிய உலகளாவிய கொள்கை பரவ வழிவகுத்தது. இந்த உலகளாவிய கருத்து உச்ச நீதிமன்ற முடிவுகளை ஆதாரமாக கொண்டிருந்தது.

வீடு என்பது ஆணையும், பெண்ணையும் விவாகத்தில் இணைப்பதோடு ஆரம்பமாகிறது (ஆதியாகமம் *2:18-25*). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வீட்டிற்கான இந்த தெய்வீகத் திட்டத்தை மத்தேயு *19:4-6* வசனங்களில் மறுபடியும் சொல்லி யிருக்கிறார். நாம் இப்போதெல்லாம் ஒரின திருமணங்கள் என்று அதிகமாக கேள்விப்படுகிறோம். விவாகம் என்பது ஒரு நெருக்கமான இணைப்பல்லாமல் வேறொன்றல்ல. இந்த விளக்கத்தின் அடிப்படை யில் ஒரின திருமணம் அனுமதிக்கப்படலாம் என்று சிலர் கூறுகிறார்கள். ஆனால், ஒழுக்க ரீதியாக ஆவிக்குரிய ரீதியாக நம்மை ஆளுகை செய்கிற தேவன் இந்த ஒரின திருமணத்துக்கு அனுமதி கொடுப்பதில்லை.

விவாகபந்தமென்பது அடிப்படையாகவே பிள்ளைகள் பெறுவதற்கான நோக்கத்திற்காக தேவனால் ஏற்படுத்தப்பட்டது (ஆதியாகமம் 1:28). ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுகிறவர்கள் இந்த அடிப்படைத் தேவையை குழந்தைகளை தத்தெடுப்பதன் மூலமாக நிறைவேற்றிக் கொள்கின்றனர்.

ஓரின திருமணம் என்பது முரண்பட்ட பொருள்களை கொண்ட ஒரு சொற்றொடருகான தேவனுடைய பார்வையில் இப்படிப்பட்ட ஒன்று இல்லவேயில்லை. கடந்த காலங்களில் கலாச்சார சீரழிவு ஏற்பட்டிருக்கிறது. ஆனால், இப்போது அமெரிக்காவில் ஏற்பட்டிருக்கிற கலாச்சார சீரழிவு போல் எங்கும் ஏற்படவில்லை. பழங்கால கிரேக்க மற்றும் ரோம கலாச்சாரங்கள் ஒழுக்கரீதியாக மிக மோசமானவைகளாயிருந்தாலும் அவர்கள் ஓரினச்சேர்க்கையை ஒருபோதும் சட்டம் பூர்வமாக்கவில்லை. அதேபோல் முன்பு எந்த ஒரு மேற்கத்திய கலாச்சாரமும் இதை அங்கீகரிக்கவில்லை. ஆனால், இப்போது அமெரிக்காவில் ஓரினச் சேர்க்கையாளர்கள் திருமணம் செய்து கொள்வதற்கு உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது.

இன்று ஓரினச் சேர்க்கையை சட்டப்பூர்வமாக்குவதற்கு ஏன் இத்தனை அழுத்தம் கொடுக்கப்படுகிறது? அடிப்படையாகவே இந்த ஒழுக்கக்கேடான ஜனங்கள் தங்கள் ஒழுக்கக் கேடான செயல்களில் நன்றாக உணர்வதற்காக இப்படி அழுத்தம் கொடுக்கப்படுகிறது (ரோமர் 1:26-32) இந்த ஜனங்களுடைய ஆசையெல்லாம் சட்டம் இவர்கள் பக்கமாயிருந்து ஒழுக்க நெறிகளை நீங்கள் சட்டமாக்க முடியாது. பட்சபாதமும், பகையுணர்வும் மட்டுமே அதற்கெதிராகக் குரல் எழுப்ப முடியும் என்று சொல்வதாயிருக்கிறது.

தேவனுடைய படைப்புகளில் மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்று நாம் பார்க்கிறோம் (ஆதியாகமம் 2:18) ஆதாமுக்கு மனித துணை இல்லாததினால் மட்டும் அவன் முழுமை நிலையை அடையாமலில்லை. அவனுக்கு ஏற்ற பெண் துணையில்லாததினால் தான் அவன் முழுமை நிலையை அடையாதிருந்தான் (ஆதி. 2:19-23). தேவனுடைய வார்த்தை ஓரினச்சேர்க்கையை திட்டவட்டமாகக் கண்டிக்கிறது. ( லேவி. 18:22 ரோமர் 1:26; Iகொரிந்தியர் 6:9). இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எது இயற்கைக்கு எதிராக பாவமாக இருந்ததோ அது இன்றும் பாவமாக இருக்கிறது. ஓரினச்சேர்க்கைக்கு ஆதரவான சட்டங்கள் பகிரங்க அறிவிப்புகள் நகைச்சுவை நிகழ்ச்சிகள் பிரபலங்களின் வார்த்தைகள் எதுவும் இப்பாவத்தின் தன்மையை குறைத்துவிடாது. ✞

# "நாம் எப்படி வாழ்வோம்?"
# "How Shall We Live?"
*Clinton Storm*

**தே**வகிருபை நமக்கு இரட்சிப்பை கொண்டுவந்தது, மேலும், நாம் எப்படி வாழவேண்டுமென்று போதித்திருக்கிறது. இந்த அழகான வசனப்பகுதியை வாசியுங்கள்: **ஏனெனில் எல்லா மனுவுருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி.......** *(தீத்து 2:11,12).*

முதலாவது, இரண்டு எதிர்மறையான காரியங்கள் இங்கே உள்ளன. இரண்டு காரியங்களையும் நாம் அறவே ஒழிக்க வேண்டும்.

1. **அவபக்தி,** அதாவது தேவபக்திக்கு எதிரான எல்லா காரியங்களுமே அவபக்தியானவைகள்தான். நாம் தீமையை எதிர்த்து நிற்க வேண்டும்.
2. லௌகிக இச்சைகள் சில வேளைகளில் இச்சை என்னும் வார்த்தை நல்லவிதமாகவும் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், இந்த வசனப் பகுதியில் மோசமான ஆசையாகத்தான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

அடுத்ததாக, நம் வாழ்க்கை முறை சம்மந்தமாக மூன்று நேர்மறையான தேவைகள் உள்ளன:

1. **தெளிந்த புத்தியுடன் வாழவேண்டும்.** கிறிஸ்தவர்கள் தெளிந்த புத்தியுள்ளவர்களாகவும், சுயக்கட்டுப்பாடு உடையவர்களாகவும் நடந்து கொள்ள வேண்டும்
2. **நீதியாக வாழ வேண்டும்.** நாம் தேவனுடைய வார்த்தைக்கு இசைவான, செம்மையான வாழ்க்கை வாழ வேண்டும். தீமோத்தேயு பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு விலகியோடி, நீதியை அடையும்படி நாட அறிவுறுத்தப்பட்டார் *(II தீமோத்தேயு 2:22).*
3. **தேவபக்தியாக வாழவேண்டும்.** கிறிஸ்தவர்கள் பக்தியுள்ள தேவனுக்கு மரியாதை செலுத்துகிற வாழ்க்கை வாழ வேண்டும்.

நாம் கிறிஸ்தவ வாழ்க்கை வாழும்போது, **ஆனந்த பாக்கியத்துக்கும், மகாதேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்** *(தீத்து 2:13).*

தேவனுடைய ஆச்சரியமான கிருபைக்காக அவருக்கு கோடானகோடி ஸ்தோத்திரம்.



# கவனச் சிதறல்கள்

## *Distractions*

*Spc Alex Gibson*

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, **கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக் கடவன்** என்று என்ன பொருள்படும்படியாகச் சொன்னார் என்று எப்போதாவது நினைத்துப் பார்த்ததுண்டா? ( மத்தேயு 11:15 ). நல்லது இந்த வார்த்தைகளை ஒருவிதமாகப் பார்த்தால், நாம் எளிதாக சொல்லக்கூடியது இந்த செய்தி எல்லோருக்குமானது என்பது. ஆனால், இது வேறுவிதமாகவும் பொருள்படும். அதென்னவென்றால், நான் சொல்லும் வார்த்தைகளை ஒரு காதில் வாங்கி மறு காதில் விட்டுவிடாமல் உண்மையாகவே வார்த்தைகளை கவனமாகக் கவனிப்பவர்கள் தான் காதுள்ளவர்கள். நான் இன்று உங்களோடு பேசப்போகும் பாடத்திற்கு அது சம்மந்தம் உடையதாக இருக்கிற படியால் நான் இதைக் கொண்டு வருகிறேன்.

**கவனச் சிதறதல்கள்.**

இது வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் காணப்படுகிறது. அப்படித்தானே? நாம் ஒரு திட்டத்தை செயல்படுத்தும்போது, வீட்டை சுத்தப்படுத்தும்போது, ஒரு வேலையைச் செய்ய பொருள்களை குவித்துவைக்கும் போது கவனம் சிதறப்படுகிறது. நான் இப்பொழுது உங்களிடம் சில கேள்விகளைக் கேட்கிறேன். நீங்கள் மூச்சு விடுவதை அல்லது சுவாசிப்பதை கடைசியாக எப்போது கவனித்தீர்கள்? காலையில் எழுந்தவுடன் உங்களைச் சுற்றிலும் பார்த்து, வானத்தில் தேவனுடைய கைவேலையை உற்றுப்பார்க்கும் பழக்கம் உங்களிடத்தில் உண்டா? கடைசியாக எப்போது நீங்கள் உங்கள் வீட்டையும், வீட்டில் இருக்கிறவைகளையும் உற்றுப் பார்த்தீர்கள்? சும்மா பார்ப்பதைக் குறித்து நான் பேசவில்லை.

நான் இங்கே சொல்ல வருகிற கருத்து என்னவென்றால், நாம் எப்படி வேலைகளைச் செய்து முடிப்பதில் கவனம் வைக்கிறோமோ அதே கவனத்தை சிருஷ்டிப்பிலும், நம்மைச் சுற்றிலுமிருக்கிற தேவனால்

கொடுக்கப்பட்டிருக்கிற ஆசீர்வாதங்களின் மீது வைப்பதில்லை. அதன்பொருள், சிருஷ்டிப்பின் மகிமையிலிருந்து நம் கவனம் சிதறப்பட்டு சிருஷ்டிப்பையே மறந்து, தேவன் நமக்குள் கொடுத்திருக்கிற ஈவுகளின் பெரும்பகுதியை இழந்து விடுகிறோம்.

இதைக் குறித்து சற்று ஆழ்ந்து யோசியுங்கள். நம்மைச் சுற்றிலும் நம்மால் தொடக்கூடிய படைப்புகளில் கவனம் செலுத்த முடியவில்லையென்றால், அவைகளையெல்லாம் படைத்த தேவனைக்குறித்து நாம் எவ்வளவு குறைவாக சிந்திப்போம்?


ஆனால், நாம் சிருஷ்டிப்பின் மீது கவனம் செலுத்துவது எந்த வகையில் சிருஷ்டிகரை நன்றாக அறிந்து கொள்வதற்கும், சின்னசின்ன கவனச் சிதறல்களை நாம் தவிர்ப்பதற்கும் எப்படி உதவியாயிருக்கும்? நல்லது, நீங்கள் தேவனைப்பற்றி அறிய விரும்பினால் அவருடைய சிருஷ்டிப்பை ஏன் நீங்கள் உற்று நோக்கக் கூடாது? சிருஷ்டிப்பெல்லாம் அவருடைய கைவேலை என்பதை ஏன் உணரக்கூடாது? அண்ட சராசரம் மிகப்பெரியது. அப்படியே தேவனும் மிகப்பெரியவ ராயிருக்கிறார். அவர் பிரயோஜனமான நன்மையான காரியங்களை உண்டாக்கியிருக்கிறார். நாம் அவைகளை நன்மைக்காகவும் பயன்படுத்த முடியும் அல்லது அவைகளை அழிக்கும் சக்திகளாகவும் மாற்றமுடியும். தீயை நல்லவிதமாக சூடேற்றினால், வெளிச்சத்திற்கும் அல்லது சுத்திகரிப்பதற்கும் பயன்படுத்தமுடியும் ( உதாரணமாக, உலோகங்களை சுத்தப்படுத்துவதற்கு ) ஆனால் அதே தீயை தவறாகப் பயன்படுத்தும்போது, அது அழிக்கவும், கொல்லவும் செய்கிறது. தேவன் நமக்குள் கொடுத்த ஆசைகளை உணர்வுகளை சற்று யோசித்துப் பாருங்கள் ( ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் இதேவிதமான உணர்வுகள் தான் இருந்தன ). எப்படி சரீரப்பிரகாரமான ஆகாரம் நம் சரீரத்திற்கு போஷாக்கையும் ஆறுதலையும் கொடுக்கிறதோ அதேபோல் ஆவிக்குரிய ஆகாரம் நம் ஆத்துமாக்களுக்கு ஆரோக்கியத்தைக் கொண்டுவருகிறது. இங்கே கருத்து என்னவென்றால், தேவன் சிருஷ்டித்தவைகளை நாம் சுற்றி உற்றுப் பார்த்து, அவைகளை அனுபவித்து, அவருடைய பராமரிப்பையும், பிரசன்னத்தையும் ஒவ்வொன்றிலும் நாம் காணவேண்டும்.

அப்படியென்றால் எல்லாவற்றையும் நல்லதென்று சொல்ல முடியுமா? நான் அப்படியாக நினைக்கவில்லை. நன்மையான ஒன்று சீர்கெட்டுப்போனதற்கு மிகச்சிறந்த உதாரணம் புற்றுநோய். நம் சரீரத்தில் உள்ள ஒரு சாதாரண செல் தேவனுடைய கிரியையா யிருக்கிறது. அதேநேரத்தில் ஒரு செல் சீர்கெட்டு புற்றுநோய் செல்லாக மாறும்போது தேவன் எந்த நோக்கத்திற்காக செல்லை உடலில் வைத்தாரோ அந்த நோக்கம் சீர்கெட்டுப்போய்விடுகிறது. அது விழுந்து போன உலகத்தில் வாழ்வதன் ஒரு பகுதியாக இருக்கிறது. எனவே, நீங்கள்

நோய்களையும் துன்பங்களையும் காணும்போது, இவைகளை தேவன் ஆரம்பத்திலிருந்து திட்டமிடவில்லை என்பதை நாம் அறிந்துகொள்ள முடியும். நீங்கள் ஆரோக்கியத்தையும், மகிழ்ச்சியையும் காணும்போது பாவம் இவ்வுலகத்தைப் பாழாக்குவதற்கு முன்பாக அவைகள் தேவனுடைய உண்மையான திட்டத்தின் ஒரு பகுதி என்பதை அறிந்து கொள்ள முடியும்.

இக்கட்டுரைக்கான என் முழுக்கருத்தையும் முடிக்க என்னைச் சுற்றிலும் பார்த்து தேவனுடைய ஆச்சரியமான சிருஷ்டிப்பைக்கண்டு. அவைகள் தேவனைப்பற்றி என்ன சொல்கின்றன என்பதை ஆழ்ந்து யோசிப்பது அவசியமாயிருக்கிறது. நாம் இவ்வுலகத்தின் கவலைகளாலும் முக்கியமற்ற காரியங்களாலும் நம் கவனம் சிதறாதபடிக்கு நம்மை நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். அதேநேரத்தில், தேவனோடு நமக்கிருக்கிற உறவின்மீது நம் கவனத்தைச் செலுத்தவேண்டும். ஒரு கிறிஸ்தவனாக அப்படிச் செய்வது நல்லது ஏனென்றால், அது நம் காரியங்களைச் சரியான கண்ணோட்டத்தில் வைக்க உதவும். மனிதன் யார் என்பதையும் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்த தேவன் மனிதனை நினைப்பதற்கு அவன் எம்மாத்திரம் என்பதையும் நாம் சற்று நின்று யோசித்துப் பார்த்தால் அது நம்விசுவாசத்தை பலப்படுத்துமல்லவா?

✝



# புறங்கூறும் பேச்சு
# Slanderous Speech

Tom Ketton

**பு**றங்கூறுகிறவனைப் பற்றி தேவன் என்ன எண்ணுகிறார்? நீதிமொழிகள் *10:18* ஐ வாசியுங்கள்: **புறங்கூறுகிறவன் மதிகேடன்** புறங்கூறுதல் உறவுகளின் மீது ஏற்படுத்தும் மோசமான பாதிப்பை மனதில் கொண்டு, கேட்பவர்களுக்கு கசப்பாக இருந்தாலும் புறங்கூறுதலுக்கு எதிராக இந்த வார்த்தைகளை நேரடியாகவும், வெளிப்படையாகவும் வெளிப்படுத்தியிருக்கிறார். கோள் சொல்லுகிறான் பிராண சிநேகிதரையும் பிரித்து விடுகிறான் (நீதி. *16:28*).

புறங்கூறுதல் என்னும் வார்த்தையை நாம் சொல் அகராதியில் புரட்டிப் பார்க்கும் போது, இவ் வார்த்தை ஒருவருடைய நற்கீர்த்தியைக் கெடுக்கும் வாய் ரீதியிலான தவறானப் பேச்சை குறிக்கிறது. ஒருவருடைய நற்பெயரை களங்கப்படுத்தும் தவறானப் பேச்சாகவும் இருக்கிறது. ஆனால், சொல் அகராதி புறங்கூறுதல் என்னும் வார்த்தைக்கு ஆதாரமல்ல. தேவ ஆவியினால் ஏவப்பட்ட நீதிமொழிகள் தான் ஆதாரம். நமக்கு வேதாகமத்தில் புறங்கூறுதல் என்று மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிற வார்த்தை சொல் அகராதியை விட வித்தியாசமான அர்த்தத்தைக் கொண்டுள்ளது. இவ்வார்த்தைக்கான எபிரெய பதம் உண்மை மற்றும் பொய்யான அவதூறுப் பேச்சை உள்ளடக்கியது.

பழைய ஏற்பாட்டில் புறங்கூறுதல் என்னும் வார்த்தை பொதுவாக தவறான அறிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. உதாரணமாக ( ஆதியாகமம்

37:2 ) ல் யோசேப்பு தன் சகோதரர்களுடைய துன்மார்க் கத்தை தகப்பனிடம் சொன் னதற்கு கூட பயன்படுத்தப் பட்டிருக்கிறது அங்கே பொய் எதையும் யோசேப்பு சொல்ல வில்லை உண்மையைத்தான் சொன்னார்.

இதே வார்த்தை எண்ணாகமம் 13:32 ல் வாக்குதத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்தைப் பற்றி வேவு பார்க்கச் சென்ற வேவு காரருடைய தவறான அறிக்கை யைக் குறிக்கும் விதமாக பயன்படுத்தப் பட்டது.

புதிய ஏற்பாட்டில் **புறங்கூறுதல்** என்னும் வார்த்தை ஒருவருக்கு எதிரான பேச்சு என்னும் பொருள் படும்படி பயன்படுத்தப்பட்டி ருக்கிறது. புறங்கூறுதல் என்பது வெளிப் படையாகவே உள்நோக்கத் துடன் ஒருவருடைய நற்பெயரை களங்கப்படுத்தும் பேச்சாக இருக்கிறது. அந்த அவதூறுப் பேச்சு உண்மையை அடிப்படையாக கொண்டதாகவும் இருக்கலாம், பொய்யாகவும் இருக்கலாம்.

ஒரு தகவல் உண்மையாக இருக்கிறதென்பதற்காக நாம் அதை ஒருவருடைய பெயரை களங் ாக



தம்பட்டம் அடிக்கக் கூடாது. ஓர் உரையாடலில் ஒருவரைப் பற்றிய கிசுகிசுக்களைச் சேர்ப்பதற்கு முன்பாக நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற வழி முறைகளை பயன்படுத்து வோம் **கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம். பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிற வர் களுக்குப் பிரயோஜன முண்டாகும்படி பேசுங்கள்** ( எபேசியர்4:29 ). நமக்கு உரையாடல் அளவுகோல் இல்லையென்றால் நம் வம்பளம்பெல்லாம் புறங் கூறுதலாகிவிடும்.

✞

## நாவு

அடங்காத பொல்லாங்குள்ளதும், சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது.

# விலையேறப் பெற்ற தைலம்

# *The Precious Ointment*

Owen Cosgrove

**அ**து நெஞ்சைத்தொடும் நிகழ்வாயிருந்தது. பிரதான ஆசாரியரும் வேதபாரகரும், அவரைத் தந்திரமாய்ப் பிடித்துக் கொலை செய்யும் படி தேடினார்கள். அது வஞ்சகத்தையும், கொடுமையையும் உள்ளடக்கிய இழிவான அரசியல் நிகழ்வா யிருந்தது. இந்த சதிகாரர்களின் தந்திரத்தைப்பற்றி பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தீர்க்க தரிசனம் உரைக்கப்பட்டது என்பதை இவர்கள் கொஞ்சம் கூட உணரவில்லை. மேலும், தங்களை நற்பண்புள்ள மதத் தலைவர்களென்று நினைத்துக் கொண்ட இவர்களுடைய ஈவு இரக்கமற்ற சொல்லையும், செயலையும் குறித்து தேவனும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் முழுமையாக அறிந்திருந்தார்கள்.

இரண்டு நாட்களுக்குள் மனித இன வரலாற்றின் மிகக் கேவலமான அருவருக்கத்தக்க செயலுக்கு நாம் பலியாகப் போவதை நன்றாக அறிந்திருந்தார். இயேசு கிறிஸ்து பெத்தானியாவில் குஷ்டரோகியாயிருந்த சீமோனுடைய வீட்டில் வைத்து தம்முடைய சீடர்களை சந்தித்தார். அப்பொழுது மரியாள் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டுவந்து அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத் தாள். அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமணத்தினால் நிறைந்தது. அது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை கனப்படுத்தும்

ஒரு அழகான செயலாக இருந்தது. அந்த நறுமணத்திற்கு பிறகு ஒரு கோரமான மரணத்தை இயேசு கிறிஸ்து சந்திக்கவேண்டியதாயிருந்தது.

இந்த நளதம் என்னும் தைலத்தைப்பற்றி அதாவது அதன் பொருளாதார மதிப்பைப் பற்றி பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. தேவ ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலனாகிய மாற்கு அத்தைலம் முந்நூறு பணம் மதிப்புள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறார். ஒரு பணம் என்பது ஒரு நாள் கூலியாயிருந்திருக்கிறது. எனவே இன்றைய நாட்களின் மதிப்பில் அத்தைலத்தை கணக்கிட்டால் பல ஆயிரம் ரூபாய் மதிப்புள்ளதாயிருக்கும். இயேசுவின் சீடர்களில் சிலர் தங்களுக்குள்ளே விசனமடைந்து: இந்தத் தைலத்தை இப்படி வீணாய்ச் செலவழிப்பானேன்? இதை முந்நூறு பணத்துக்கு அதிகமான கிரயத்துக்கு விற்று தரித்திரருக்குக் கொடுக்கலாமே என்று சொல்லிச் சொல்லி அவனைக் குறித்து முறுமுறுத்தார்கள். ஆனால், இயேசு அவளை மெச்சி அவள் தன்னால் இயன்றதைச் செய்தாள். நான் அடக்கம் பண்ணப்படுவதற்கு எத்தனமாக என் சரீரத்தில் தைலம் பூச முந்திக் கொண்டாள். எங்கெல்லாம் இந்தச் சுவிசேஷம் உலகத்தில் பிரங்கிக்கப்படுமோ அங்கெல்லாம் இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும், சொல்லப் படும் என்று மெய் யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அவள் **மனிதர்கள் மரித்தபிறகு அல்ல, மனிதர்கள் வாழும்போது அவர்களுக்கு பூக்களைக் கொடுங்கள்** என்னும் கவிதையின் உண்மையான அர்த்தத்தை நிறைவேற்றியிருக்கிறாள்.



அந்தத் தைலத்தை அதிகமான கிரயத்துக்கு விற்று, அப்பணத்தை ஏழைகளை போஷிக்கப் பயன்படுத்தியிருக்கலாமே என்று சீடர்களில் சிலர் சொன்னதைக் கணக்கில் எடுத் துக்கொண்டால் மனித வரலாற்றில் இயேசு கிறிஸ்துவும் அவருடைய உண்மையுள்ள சீடர்களும் வறுமையை ஒழிக்கக் காரியங்களைச் செய்ததுபோல் செய்ததில்லை. இங்கே லாசரு மற்றும் மார்த்தாளின் சகோதரியாகிய மரியாள் பற்றி யோவான் குறிப்பிடுகிறார். மேலும், யோவான் அந்தத்

தைலத்தை விற்று, தரித் திரருக்குக் கொடாமல் போன தென்ன என்று யூதாஸ்காரியோ சொன்னதையும் குறிப்பிட்டு அவன் தரித்திரரைக்குறித்துக் கவலைப்பட்டு இப்படிச் சொல் லாமல் அவன் திருடனான படியினாலும், பணப்பையை வைத்துக் கொண்டு அதிலே, போடப்பட்டதைச் சுமக்கிறவ னானபடியினாலும் இப்படிச் சொன்னான் என்றும் யோவான் குறிப்பிட்டிருக்கிறார்.

இங்கே யூதாஸ் காரியோத்து தரித்திரத்தைப் பற்றி கவலைப் பட வில்லை என்று நாம் பார்க்கி றோம். யூதாஸ் பண ஆசை உடையவனாயிருந்தான் என்று நாம் பார்க்கிறோம். இங்கே யூதாஸ் முப்பது வெள்ளிக் காசுக்காக இயேசுவை விற்க வில்லை. முப்பது வெள்ளிக்காசுக் காகத் தன்னையே விற்றுப் போட்டிருக்கிறான். மேலும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தரித்திரர் எப்போதும் நம்மோடு இருப்பார்கள் என்று சொன்னார். ஒரு தேசத்தில் பொருளாதார மந்த நிலை ஏற்படும்போது அங்குள்ள ஏழைகளுக்கு இலவச மாக உணவளிக்கப் படுவதைப் பார்த்து நம் நெஞ்சம் பதறுகிறது உலகெங்கிலும் பல இடங்களில் வறுமை மக்களை வாட்டி வதைக்கிறது. வீடுகளை இழந் தோருக்கான மறுவாழ்வு இல்லங்கள் நிரம்பி வழிவதை நாம் பார்க்கும்போது நம் சமுதாயத்தில் ஏழைகளை மேம் படுத்த நாம் இன்னும் பல காரியங்களைச் செய்ய வேண்டு மென்று பார்க்கிறோம். **தரித்திரர் எப்பொழுதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள்** என்று இயேசு கிறிஸ்து சொன்னார். தேவையில் இருப்பவர்களையும் கஷ்டப்படு கிறவர்களையும் காண நாம் வெகுதூரம் போகவேண்டிய தில்லை. மனித இனம் பாடுகளோடு வேதனையிலும் போராடிக் கொண்டிருக்கும் போது மரியாள் செய்த கிரியையை நாம் இன்றும் நினைத்துப் பார்க்கிறோம். அவள் தன்னால் இயன்றதைச் செய்தாள் அவளுடைய விசுவா சத்திற்கும் அர்ப்பணிப்புக்கும் நினைவாக அவள் மற்றவர்களி டத்தில் காட்டிய அக்கறையும் அன்பும் இன்னும் நிலைத் திருக்கிறது.

✞

### நளதம் என்னும் தைலம்

இந்த நளதம் என்னும் தைலம் இமயமலையில் வளரும் " ஜதமன்சி " என்னும் செடியிலிருந்து எடுக்கப் படும் ஒரு விலையேறப் பெற்ற தைல மாயிருக்கிறது. அதன் வேரிலிருந்து கொத்தாக முளைத்து எழும்பும் முட்களால் அது மற்றச் செடி களிலிருந்து தன்னை வேறுபடுத்திக் காட்டுகிறது.

# "மூன்றாம், நான்காம் தலைமுறை மட்டும்"

# "To the Third and Fourth Generations"

David Tarbet

**யா**த்திராகமம் 20:5 -ல் தேவன் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம், நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறதை யோசித்து குழம்பிப் போய்விட்டேன். தேவன் தம்முடைய கோபத்தை ஐந்தாம், ஆறாம், பத்தாம் தலைமுறை மட்டும் நீட்டிக்காமல் மூன்றாம், நான்காம் தலைமுறையோடு அதை நிறுத்திக்கொள்வதில், அந்த உண்மையில் முக்கியத்துவம் ஏதாவது நிச்சயம் இருக்கவேண்டும். அந்த முக்கியத்துவம் இவைகளினால் என்று நான் முடிவெடுத்திருக்கிறேன்: மூன்றாம், நான்காம் தலைமுறை ஒரே காலாக்கட்டத்தில் வாழ்ந்து ஒன்றுக்கொன்று தாக்கத்தை ஏற்படுத்தமுடியும். ஒரு தலைமுறையின் பாவமான நடக்கை சமகாலத்தில் வாழும் தலைமுறையால் பின்பற்றப்படுகிறது. பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களையும், பேரப்பிள்ளைகள் தங்கள் தாத்தா பாட்டிகளையும், கொள்ளுப்பேரப்பிள்ளைகள் தங்கள் கொள்ளுதாத்தா கொள்ளுபாட்டிகளையும் மாதிரிகளாகப் பார்க்கிறார்கள். ஒவ்வொரு தலைமுறையும் அதற்கு முந்தைய தலைமுறையின் பாவங்களைப் பின்பற்றுகிறவர்காகவே இருக்கிறார்கள். எனவே, தேவன் தம்முடைய கோபத்தை மூன்றாம், நான்காம் தலைமுறை மட்டும் விசாரிப்பதை நியாயப்படுத்துகிறார். மேலும், இந்தத் தலைமுறையினர் அதாவது மூன்றாம், நான்காம் தலைமுறையினர் ஒரேகாலக்கட்டத்தில் வாழ்ந்து ஒன்றுக்கொன்று தாக்கத்தை ஏற்படுத்துவதால் தேவன் இந்த முறையைப் பின்பற்றுகிறார்.

இப்படி முந்தைய தலைமுறையின் பாவமான நடத்தைகள்

பின்வரும் தலைமுறையின்மீது ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும்போது, அது பிள்ளைகள் மீது பேரப்பிள்ளைகள்மீதும், கொள்ளுபேரப் பிள்ளைகள்மீதும் தாக்கத்தை ஏற்படுத்தும் போது ஒரு தலைமுறையின் நீதியுள்ள கிரியைகளும், மற்ற தலைமுறையினரால் பின்பற்றப்பட்டு அவர்கள்மீது தாக்கத்தை ஏற்படுத்தும். பொதுவாகப் பெற்றோர்கள் தங்களுடைய ஆவிக்குரிய செல்வாக்கை பிள்ளைகள் சிறுவயதாயிருக்கும்போது மட்டுமே செலுத்த முடியும் என்று தவறாக நினைக்கிறார்கள் ஆனால், உண்மையென்னவென்றால் பெற்றோர்கள் பிள்ளைகள் தங்கள் முதிர்வயதிலும் ஆவிக்குரிய காரியங்களை விடாதிருப்பார்கள் என்பதை மறந்து விடுகிறார்கள். அதேபோல் தாத்தாபாட்டிகள் பேரக்குழந்தைகள் மீது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை பலர் மறந்துவிடுகிறார்கள்.

அதனால்தான் நாம் கர்த்தருக்கும், அவருடைய சபைக்கும் தொடர்ந்து நாம் உண்மையாயிருக்க வேண்டும். நம்முடைய முன்மாதிரி நம் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் கொள்ளுபேரப் பிள்ளைகள் சபைக் காரியங்களில் தங்களை ஈடுபடுத்துகிறார்களா என்பதை தீர்மானிக்கும். வேறுவிதமாகச் சொன்னால், பெற்றோருடைய வேலை ஒருபோதும் முடிவடைவதில்லை. பிள்ளைகள் பெரியவர்களாகி வீட்டை விட்டுப்போனபின்பும் அது நன்மையாக இருந்தாலும் சரி, தீமையாக இருந்தாலும் சரி அவர்களின் தாக்கம் பிள்ளைகளிடத்தில் காணப்படும். முதிர்ச்சியடைந்த பிள்ளைகள் தங்களுக்குள்ளே இவ்விதமாகப் பேசிக்கொள்வார்கள். நம் அப்பா உண்மையாகவே விசுவாசத்தில் உறுதியாயிருந்தாரா? அல்லது **நாம் சிறுபிள்ளைகளாயிருந்தபோது சபையில் விளையாட்டுத்தனமாக இருந்தாரா? ஒருவருடைய உண்மையுள்ள உதாரணத்திற்கு அவருடைய பிள்ளைகள் பேரப்பிள்ளைகள், கொள்ளு பேரப்பிள்ளைகள் சாட்சிகளாக இருக்கின்றனர். அதுதான் பின்பற்றப்படும் மாதிரியாக அல்லது உதாரணமாக இருக்கும்.**

ஆகவேதான், முடிவுபரியந்தம் உண்மையாயிருங்கள் - உங்கள் உண்மைத்தன்மையினால், உதாரணத்தினால் நீங்கள் கற்றுக் கொடுக்கும் பாடங்கள் நீங்கள் இவ்வுலகத்தைவிட்டு கடந்துபோன பிறகு கூட நீண்ட காலத்திற்கு நிலை நிற்கும்!

✞

# தெபொராள் ஒரு தீர்க்கதரிசியாகவும் நியாயாதிபதியாகவும் இருந்தாள்

# Deborah, A Prophetess and a Judge

## Charles Box

**தெ**பொராளின் வரலாறு இஸ்ரவேல் புத்திரர் திரும்பக் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து வந்ததிலிருந்து ஆரம்ப மாகிறது ( நியா 4:1 ) தேவன் கானானியருடைய ராஜாவாகிய யாபீனையும், அவனுடைய சேனாபதியாகிய சிசெராவையும் கொண்டு தம்முடைய ஜனங்கள் கீழ்ப்படியாதபோது அவர்களைத் தண்டித்தார். தெபொராள் ஆண்களும், பெண்களும் தேவனுக்குப் பயனுள்ளவர்களாயிருக்க முடியும் என்று காட்டுகிறாள்.

**பயனுள்ளவர்கள் உண்மையுள்ளவர்களாயிருக்கிறார்கள்**

உண்மையாகவே தேவனுக்கு பிரயோஜனமானவர்கள் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். தெபொராள் இஸ்ரவேலின் தீர்க்கதரிசியாகவும் நியாயாதிபதியாகவும் உண்மையாகவே சேவை செய்தாள் ( நியா 4:45 ) அவள் தேவனுடைய வார்த்தைக்கு செவி கொடுத்து அதற்கு உண்மையாக இருந்தாள் **இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிடவில்லையா?** ( நியா 4:6,7 )

**பயனுள்ளவர்கள் மற்றவர்கள் பிரயோஜனமாயிருக்க உதவுவார்கள்**

தெபொராள் தேவனுடைய சேவையில் பாராக் பிரயோ ஜனமாயிருக்க உதவி செய்தாள். தெபொராள் பாராக்கினால் வழிநடத்தப்பட்ட பத்தாயிரம் பேர் கொண்ட சேனையின் வெற்றியை வாக்குத்தத்தம் பண்ணினாள் ( நியா 4:7 )

**பயனுள்ளமானவர்கள் தேவனுக்காக எங்கும் போக விருப்பமுள்ளவர் களாயிருப்பார்கள்**

பாராக் யுத்தத்திற்குப் போக விருப்பமாயிருந்தான். ஆனால்,

தெபொராள் கூடப்போனால் மாத்திரமே போக அவன் ஆயத்தமாயிருந்தான். அவள் இது தேவனுடைய கிரியை என்பதை அறிந்திருந்தாள். எனவே தான், அவள் பாராக்கைப் பார்த்து **நான் உன்னோடே கூட நிச்சயமாய் வருவேன்** என்றாள் ( நியா *4:9* ) தேவன் தங்களுக்கு முன்பாகச் செல்வார் என்பதில் தெபொராளுக்கு முழுமையான நம்பிக்கை இருந்தது. (நியா *4:9-14* )

**பயனுள்ளவர்கள் ஜெயத்தை தேவன் தருகிறார் என்று உணர்ந்து கொள்கிறார்கள்**

யுத்தத்திற்கு முன்பாகவே தேவனால் தங்களுக்கு வெற்றி நிச்சயமாய் உண்டு என்பதை அறிந்திருந்தாள், **அப்பொழுது தெபொராள் பாராக்கை நோக்கி; எழுந்து போ; கர்த்தர் சிசெராவை உன் கையில் ஒப்புக் கொடுக்கும் நாள் இதுவே; கர்த்தர் உனக்கு முன்பாகப் புறப்படவில்லையா என்றாள்;** அப்பொழுது பாராக்கும், அவன் பின்னாலே பதினாயிரம் பேரும், தாபோர் மலையிலிருந்து இறங்கினார்கள் ( நியா *4:14* ) கிறிஸ்தவர்களும் விசுவாசத்தின் வெற்றியை அனுபவிக்க வேண்டும் **தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்** ( Iயோவான் *5:4* )

**பயனுள்ளவர்கள் தங்களால் முடிந்ததை செய்கிறார்கள், ஆனால் ஜெயத்திற்காக தேவனைத் துதிக்கிறார்கள்**

தெபொராள் பாடல் மூலமாக தேவனைத் துதித்தாள் ( நியா *5* ). அழகான வசனவடிவில் தெபொராள் கர்த்தர் கொடுத்த வெற்றியை விவரித்து அவருக்குத் துதிப்பாட்டைப் பாடினாள். அவள் அந்த துதிப் பாட்டை இவ்விதமாக முடித்தாள், **கர்த்தாவே உம்மைப் பகைக்கிற யாவரும் இப்படியே அழியக்கடவர்கள்; அவரில் அன்புகூருகிறவர்களோ வல்லமையோடே உதிக்கிற சூரியனைப் போல இருக்கக்கடவர்கள் என்று பாடினார்கள்** ( நியா*5:31* ).

தெபொராள் நாம் எப்படி கர்த்தருக்குப் பயனுள்ளவர்களாயிருக்க முடியுமென்று காட்டுகிறாள். நியாயாதிபதிகள் புத்தகம் நமக்குப் பல அரிய பாடங்களைக் கற்றுத்தருகிறது. கிறிஸ்தவர்கள் கீழ்க்காணும் நியாயாதிபதிகளிடமிருந்து பல பாடங்களைக் கற்றுக் கொள்ளமுடியும். 1) ஒத்னியேல் 2) ஏகூத் 3) சம்கார் 4) தெபொராள் 5) பாராக் 6) கிதியோன் 7) அபிமலெக்கு 8) தோலா 9) யாயீர் 10) யெப்தா 11) இப்சான் 12) ஏபோன் 13) அப்தோன் 14) சிம்சோன் 15) ஏலி மற்றும் 16) சாமுவேல் இந்தப் பதினாறு பேரும் இஸ்ரவேலின் நியாயாதிபதிகளாயிருந்தார்கள். ✞

# எந்த மோசே?

# *Which Moses* ?

Charles R. Rose.

நீங்கள் மோசேயைப்போல் என்று சொல்லப்பட்டால் **எந்த மோசே?** என்று கேட்க நீங்கள் தூண்டப்படுவீர்கள். மோசே தேவனுடைய ஜனங்களின் ஒரு மாபெரும் தலைவர், தேவனிடத்திலிருந்து பத்து கட்டளைகளைப் பெற்றுக் கொண்டவர் நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தவர். அப்படிப்பட்ட மோசேயோடு நாம் ஒப்பிடப்படுவது கனத்திற்குரிய ஒரு காரியமாயிருக்கிறது. ஆனால், அவர் பார்வோனுககு முன்பாகப் போய் ஜனங்களை விடுவிக்கும்படி கேட்டுக்கொண்டதற்கு முந்தைய வாழ்க்கை நம்மெல்லாருக்கும் நினைவு இருக்கிறதா? நிச்சயமாகவே, மோசேயின் தாய் ஒரு நாணற்பெட்டியை எடுத்து, அதற்குப் பிசினும் வைத்து, கீலும் பூசி, அதிலே பிள்ளையை நதியோரமாய் நாணலுக் குள்ளே வைத்தாள் என்பதை நாம் நினைவில் வைத்திருக்கிறோம். மேலும், மோசேயின் சகோதரி மோசேயின் தாயையே பால் கொடுக்க சம்மதிக்கச் செய்ததைக் கூட நாம் நினைவில் வைத்திருக்கிறோம்.

இதேவிதமான சூழ்நிலையில் நாம் வளர்க்கப்படவேண்டுமென்று விரும்புகிறோம். மோசே தன் சக இஸ்ரவேலனை காப்பாற்றுவதற்காக ஓர் எகிப்தியனைக் கொன்றுபோட்டதையும் நாம் அறிந்திருக்கிறோம். ஆனால், எனக்கு பரிச்சயமானவர்களில் சிலருக்குத்தான் இப்படிப்பட்ட அனுபவங்கள் ஏற்பட்டிருக்கிறது.

இல்லை, நான் இங்கே பழைய ஏற்பாட்டு மோசேயை மனதில் வைத்து இங்கே பேசவில்லை. நான் பேசுகிற மோசேயை இன்று பல கிறிஸ்தவர்களோடு ஒப்பிட்டுப் பேசமுடியும். இந்த மோசே தான் தேவனுடைய ஜனங்களுக்காக எதையும் செய்ய முடியாது என்று நினைத்த மோசே ஓர் எகிப்தியனை, கொலை செய்த அனுபவம் மற்றவர்களுடைய காரியங்களில் தலையிட இவருக்குத் தடையாக இருந்தது. காரணம் எதுவாக இருந்தாலும், இந்த மோசே மற்றவர்களுக்குப் பின்னாலிருந்து காரியங்களைச் செய்யவும் மற்றவர்கள் முக்கியமான வேலைகளைச் செய்யவும் தன் மனதை பக்குவபடுத்திக் கொண்டான்.

மோசே எண்பது வயதாயிருந்தபோது கூட , தன் மாமனாருக்காக வேலைசெய்து கொண்டுதான் இருந்தார். குடும்பத்தொழிலில் முதன்மையான இடத்தில் இருக்கவில்லை. மிகவும் கீழான வேலைகளைத்தான் அவர் செய்து கொண்டிருந்தார். அதாவது, அவர் ஆடுகளை வனாந்தரத்தின் பின்புறத்திலே ஓட்டிக் கொண்டிருந்தார் (யாத்திராகமம் *3:1* ) இங்கே மோசேயின் ஆள்த்துவம் தெரியவருகிறது. தேவன் மோசேயை ஒரு மிகப்பெரிய வேலையைச் செய்துமுடிக்க தெரிந்துகொண்டார். ஆனால், இந்த மோசே உதவி செய்ய மனதில்லாமலேயே இருந்தார். **அப்பொழுது கர்த்தர்: எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் படுகிற கூக்குரலைக் கேட்டேன்** அவர்கள் படுகிற வேதனைகளையும் அறிந்திருக்கிறேன். அவர்களை எகிப்தியரின் கைக்கு விடுதலையாக்கவும், அவர்களை அந்தத் தேசத்திலிருந்து நீக்கி கானானியரும், ஏத்தியரும், எமோரியரும், பெரிசியரும், ஏவியரும், எபூசியரும் இருக்கிற இடமாகிய பாலும், தேனும் ஓடுகிற நலமும் விசாலமுமான தேசத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கவும் இறங்கினேன்; நீ இஸ்ரவேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி உன்னைப் பார்வோனிடத்துக்கு அனுப்புவேன் வா என்றார், ( யாத். *3:7,8,10* ).

**நான் அல்ல** என்பது தான் மோசே கொடுத்த அடிப்படை பதிலாயிருந்தது. மோசே செய்த வாக்குவாதங்கள் இன்றைய நாட்களில் சபையில் அவசியமான வேலை எதையாவது செய்யச் சொன்னால் அதற்கு அங்கத்தினர்கள் சிலர் செய்யும் வாக்குவாதங்களை நமக்கு நினைவுப்படுத்துகிறது. நான் எம்மாத்திரம்? ( யாத். *3:11* ) உன்னை அனுப்பினவருடைய நாமம் என்னவென்று கேட்டால் என்ன சொல்லுவேன்? ( *3:13* ) என் வாக்குக்குச் செவிகொடார்கள் ( *4:1* ). நான் திக்குவாயும் மந்தநாவும் உள்ளவன் ( *4:10* ) **ஆண்டவரே, நீர் யாரையாகிலும் அனுப்பும்** ( *4:13* ) என்னும் சாக்குப் போக்குகள் தான் நினைவுக்கு வருகிறது.

மோசே இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து வெளியே கொண்டுபோகத் தீர்மானித்ததைக் குறித்து நாம் மகிழ்ச்சி அடைகிறோமல்லவா? இருந்தபோதிலும் மோசேயால் மாத்திரமே செய்யக்கூடிய வேலையை செய்ய வைப்பதற்குத் தேவன் மோசே மீது கோபப்பட வேண்டியதாகி விட்டது (யாத்திராகமம் *4:* ) அவருடைய சேவையில் உங்கள் மீது கோபப்பட்டால் எப்படியிருக்கும்? கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, உறுதிப்பட்டவர்களையும், அசையாதவர்களையும். கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக (Iகொரிந்தியர் *15:58* ).

✞

# ஒன்றின் வல்லமையைப் பாருங்கள்
# The Power of One

Mike Benson.

ஒரு நல்ல சமாரியன் எரிகோவுக்குப் போகும்பாதையில் காய மடைந்த ஒருவனை காப்பாற்றினான் (லூக்கா 10)

ஒரு வயதான மனிதன் ( நோவா ) மனித இனம் அழிந்து போகாத படிக்கு வாழ்ந்தான். (ஆத். 6).

ஒரு மனிதன் ( மோசே ) தன்னை தகுதியில்லாதவன் என்று எண்ணியபோதும் பார்வோனை எதிர்கொண்டு இஸ்ரவேலர்களை எகிப்திலிருந்து விடுவித்தார் (யாத்திராகமம் 3)

ஒரு பெண் ( எஸ்தர் ) நீண்டகாலமாக நடைமுறையிலிருந்த பாரம்பரியத்தை தகர்த்தெறிந்து ராஜ அரண்மனைக்குள் பிரவேசித்து ஒட்டுமொத்த தேசத்தையும் பெரிய இனப்படுகொலையிலிருந்து காப்பாற்றினாள் (எஸ்தர் 4)

ஒரு சிறுபையன் ( தாவீது ) ஒன்பது அடி உயரமுள்ள கோலியாத்தை எதிர்கொண்டு இஸ்ரவேலர்களை காப்பாற்றினான் ( I சாமுவேல் 17 )

ஒரு சிறுபையனின் ஐந்து அப்பமும், இரண்டு மீன்களும் ஐயாயிரம் பேரை போஷிக்க உதவியது (யோவான் 6)

ஒரு அடிமைப்பெண் இராணுவப்படை தளபதியின் வியாதி சுகமாகக் காரணமாக இருந்தாள் ( II ராஜாக்கள் 5 )

அப்படியானால், நானும், நீங்களும் எப்படி?

# நான் யார் ?

## Who Am I ?
## Rebecca Rushmore

என்னை உங்களால் அடையாளம் கண்டுகொள்ள முடிகிறதா? கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு குறிப்புகளையும் கவனமாக வாசித்து யோசியுங்கள். என் பெயரை நீங்கள் முதல் குறிப்பிலேயே யூகித்து விட்டால் 100 மதிப்பெண்களை உங்களுக்கு நீங்களே கொடுத்து விடுங்கள். ஐந்தாவது குறிப்பிற்குப் பிறகு நான் யாரென்பதைக் கண்டு பிடித்தால் உங்கள் மதிப்பெண் 60. என் அடையாளத்தை நீங்கள் உறுதி செய்துவிட்டால் தேவனுடைய வார்த்தையிலிருந்து உண்மையைச் சரிபார்க்க வேத வசனங்களை ஆராய்ந்து பாருங்கள்.

1. நான் யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவன் ( எண்ணாகமம் 13:6 ).

2. என் வாழ்க்கையின் முதல் நாற்பது வருடங்கள் எகிப்தில் அடிமையாயிருந்தேன் ( யோசுவா 14:7 ).

3. எண்பத்தைந்தாவது வயதிலும் நான் யுத்த வீரனாகத்தான் இருந்தேன் ( யோசுவா 14:11 ).

4. எண்பத்தைந்தாவது வயதில் எனக்கு சுதந்தரமாகக் கேட்டேன் ( யோசுவா 14:10,12 ).

5. எபிரோன் எனக்கு சுதந்தரமாகக் கொடுக்கப்பட்டது (யோசுவா 14:13 ).

6. என் குமாரத்தியாகிய அக்சாளை ஒத்னியேல் எனக்காக ஒரு பட்டணத்தை பிடித்தபோது அவனுக்கு மனைவியாகக் கொடுத்தேன் ( யோசுவா 15:16,17 ).

7. எனக்கு சுதந்தரமாகக் கிடைத்த பூமியிலிருந்து ஏனாக்கின் மூன்று குமாரர்களை துரத்தி விட்டேன் ( யோசுவா 15:14 ).

8. எகிப்தை விட்டு வெளியேறி வனாந்தரத்தில் அலைந்துதிரிந்து பின்பு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவேசித்த வயதான நபர்களில் நானும் ஒருவனாயிருந்தேன். ( எண்ணாகமம் 16 ).

9. நான் நற்செய்தியைக் கொண்டுவந்த வேவுகாரரில் நானும் ஒருவனாயிருந்தேன் ( எண்ணாகமம் 13:30 ).

10. நான் இஸ்ரவேலர்களின் தலைவராக மோசேக்குப் பதிலாக நியமிக்கப்படவில்லை.

# ஆவியினால் பிறப்பது என்றால் எப்படி?
# What is born of spirit

Garx Clayton

இந்தக் கேள்வி நமக்கு மட்டுமல்ல, நியாயசாஸ்திரியாக இருந்த நிக்கொதேமுக்கும் கூடப் புரிந்து கொள்ளமுடியாததாக இருந்திருக்கிறது. இருப்பினும், பரிசுத்த ஆவியானவரின் துணை கொண்டு இதை விளக்குவதற்கு சற்று முயல்வோம்.

இதை நாம் சரியாகப் புரிந்து கொள்வதற்கு உதவியாக சரீரப் பிரகாரமான பிறப்பு எப்படி நிகழ்கிறது என்று கவனிப்போம். ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பதற்கு ஓர் ஆணும், ஒரு பெண்ணும் தேவை. ஆணின் விந்து (வித்து) பெண்ணின் கருப்பைக்குள் செலுத்தப்படும் போது பெண் கருவுற்று ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு ஒரு குழந்தை பிறக்கிறது.

ஆவிக்குரிய பிறப்பு விஷயத்திலும் கூட இதே விதிதான். ஒருவன் ஆவிக்குரிய பிறப்பு அடைய வேண்டும் என்றால் அவனுடைய (or) அவளுடைய உள்ளத்தில் ஆவிக்குரிய வித்து செலுத்தப்பட வேண்டும். அந்த ஆவிக்குரிய வித்து எது?

லூக் *8*-ஆம் அதிகாரம் *11*-ஆம் வசனத்தில் தேவனுடைய வசனம் விதைக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. ஆவிக்குரிய பிறப்பைப் பற்றி பேதுரு கூறும்போது, **அழிவுள்ள வித்தினாலே அல்ல; என்றென்றைக் கும் நிற்கிறதும், ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப் பட்டிருக்கிறீர்களே** I பேதுரு *1:23*.

யாக்கோபு நிருபத்திலும் **அவர் சித்தம் கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மை சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார்** என்று வாசிக்கிறோம். (யாக் *1:18*).

மேற்கூறிய வசனங்களின் மூலம் பரிசுத்த ஆவியினால் அருளப்பட்ட தேவனுடைய வசனங்களே ஜீவனைக் கொடுக்கக்கூடிய ஆற்றல் உள்ள வித்தாக நம்முடைய உள்ளங்களில் ஊன்றப்படுகின்றன என்பது தெளிவாகிறது.

**விசுவாசம் கேள்வியினாலே வரும்; கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்** என்று பவுல் கூறுவது எவ்வளவு உண்மை! (ரோமர் 10:17) விதை போடாமல் செடி முளைத்து வளராது என்பது யாவரும் அறிந்த உண்மை. ஆணின் வித்து பெண்ணின் கருப்பைக்குள் செலுத்தப்படும் போது பெண் கருவுறுகிறாள். ஆனால், குழந்தைப் பிறப்பு உடனே நடந்து விடுவதில்லை. அதற்கு முன்னதாக கருவுற்றதினால் ஏற்படும் விளைவுகளை நாம் காண்கிறோம். குழந்தை கருப்பைக்குள் வளர வளரத் தாய்மை அடைந்த பெண்ணின் சரீரத்தில் சில மாற்றங்கள் தென்படுகின்றன. இது இயற்கைச் சட்டம்.

அதே போன்று ஒருவன் தேவனுடைய வார்த்தைக் கேட்கும் போது அதை விசுவாசிக்கிறான் அதைப் பற்றிச் சிந்திக்கிறான். அதன் காரணமாக, அவனுடைய செயல்களில் மாற்றம் உண்டாக வேண்டும். தன்னிடத்தில் இருந்த தவறான பழக்க வழக்கங்கள், பாவச் செயல்கள் ஆகியவைகளுக்காக மனம் வருந்தி அவைகளை விட்டுவிட வேண்டும். நற்பழக்கங்களைக் கைக்கொண்டு, தேவனுக்குப் பிரியமான வாழ்க்கையில் தேறி வருகிறது யாவருக்கும் தெரிய வேண்டும். அதைத் தான் மனந்திரும்புதல் என்கிறோம்.

**தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்யான். ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது. அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ் செய்யமாட்டான்** என்று யோவான் எழுதுகிறார். I யோவான் 3:9. இதற்கு, ஒரு விசுவாசி பாவம் செய்யவே மாட்டான். பரிசுத்தமடைந்து விடுவான் என்று கொள்ளக்கூடாது. ஒரு உண்மையான விசுவாசி பாவம் செய்யும் இயல்பிலே இன்பம் காணமாட்டான். அவனையும் மீறி பாவம் செய்யக்கூடிய இயல்பு மேற்கொள்ளும்போது அவன் அதற்காகத் துக்கப்பட்டு, வெட்கப்பட்டு வேதனைப்படுவான் ( ரோமர் 7:15-24 ) வாசித்துத் தியானிக்கவும்.

மேலும், I யோவான் 5-ஆம் அதிகாரம், 4,5 வசனங்களில் **தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும். நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். இயேசுவானவர் தேவனுடைய குமாரன் என்று ஏற்றுக் கொள்கிறவன், உலக ஆசைகளை வெறுத்து, ஜென்ம சுபாவ மனிதர்களைப் போல சிற்றின்பம், பாவம் ஆகியவைகளில் நாட்டம் செலுத்தாமல் தேவனுக்கடுத்த காரியங்களில் ஈடுபாடு கொண்டு வெற்றி பெறுவான்** என்று பொருள்.

எப்படி கருவுற்ற நிலையே குழந்தையைப் பெற்றெடுத்ததற்கு சமம் ஆகாதோ அது போன்று மேலே சொல்லப்பட்ட விசுவாசம் மற்றும் மனம் திரும்புதல் மட்டுமே ஆவியின் பிறப்பு ஆகிவிடாது. இந்த

இரண்டு காரியங்களும் தேவ வசனத்தினால் ஜெநிப்பிக்கப்பட்ட நிலையே ஆகும்.

இனி ஆவிக்குரிய பிறப்பு என்பது தண்ணீர் முழுக்கினால் ஏற்படுகிறது என்பதைக் கவனிப்போம். இயேசு ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்க வேண்டும் என்று கூறினார். அதன் பொருள், விசுவாசித்து மனம்திரும்பிய ஒரு மனிதன், தண்ணீரில் மூழ்கி எழுந்திருக்கவேண்டும். அதாவது, நாம் விசுவாசித்து மனம் திரும்பும் போது ஜெநிப்பிக்கப்படுகிறோம். ( கருத்தரிக்கிறோம் ) திருமுழுக்குப் பெற்றுக் கொள்ளும்போது பிறக்கிறோம் ).

விசுவாசமுள்ளவனாகி ( கருத்தரித்து ) ஞானஸ்நானம் பெற்றவன் ( பிறப்பு எய்தியவன் ) இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் ( மாற்கு *16:16* ) ஞானஸ்நானம் பெறாதவன் ஆக்கினைத் தீர்ப்படைவான் என்று இயேசு சொல்லவில்லையே என்று சிலர் வாதிடலாம். கருத்தரித்திடுதலே பிறப்பாகாது. அதே போன்று விசுவாசமும், மனந்திரும்புதலுமே ஆவிக்குரிய பிறப்பு ஆகிவிடாது.

நாம் எப்படி இரட்சிப்படைகிறோம் என்பதை விளக்க **நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல் தமது இரக்கத்தின்படியே மறு ஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்** என்று பவுல் கூறுகிறார். தீத்து *3:5*, ஆக, ஒருவன் மறுபடியும் பிறக்க வேண்டுமானால் மறுஜென்ம முழுக்கும் ( ஞானஸ்நானமும் ) பரிசுத்த ஆவியின் புதிதாக்குதலும் ( மனம் திரும்புதலும் ) தேவை என்றாகிறது. இங்கேயும் ஜலமும், ஆவியும் சொல்லப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். ஆகவே, மறுபடியும் பிறப்பதற்கு வேதம் சொல்லுகிற ஞானஸ்நானம் இன்றியமையாதது.

கருவுறாமல் பிள்ளைப்பேறு கிடையாது. அது போல ஒருவன் விசுவாசித்து, மனந்திரும்பாமல் ஞானஸ்நானம் மட்டும் பெற்றுக் கொண்டு வேதம் சொல்லுகிற இரட்சிப்பை பெறமுடியாது. ஒரு மனிதனை வலுவான கயிற்றினால் கட்டித் தூக்கிக் கொண்டு போய் தண்ணீரில் முழுக்கி எடுத்துவிட்டால் அவன் இரட்சிப்புக்குத் தகுதியடைந்து விடுவானா? அதே போல விசுவாசிக்க இயலாத ஒரு குழந்தைக்குத் திருமுழுக்குக் கொடுத்துவிட்டு, *12* அல்லது *15* ஆண்டுகள் கழித்து திடப்படுத்துதல் என்ற ஒரு சடங்கின் மூலம் அவனுக்கு வேதம் கூறுகிற இரட்சிப்புக்குத் தகுதியுள்ளவனாக்க முடியுமா? விசுவாசமும், மனந்திரும்புதலும் கருவுறுதல் என்றும்

தண்ணீர் ஞானஸ்நானம் பிறப்பு என்றும், நாம் மேலே பார்த்தோம். அப்படியிருக்கும் போது இன்று பிறப்பு; பிறகு, *12,15* ஆண்டுகளுக்குப் பிறகு கருத்தரித்தல் என்பது இயற்கைக்குப் பொருந்துமா? ஆனாலும் அதைத் திருத்திக் கொள்வதற்கு நம்முடைய பாரம்பரியப் பெருமை இடம் தருவதில்லை. இதுதான் நாம் தேவனுடைய வசனத்துக்குக் கொடுக்கும் மரியாதையா? **சிறுமைப்பட்டு ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன்** என்கிறாரே தேவன் ( ஏசாயா *66:2* ) சகோதரர்களே! சிந்தித்துப் பாருங்கள்.

அதே போல கருவுறுதலே ( விசுவாசம், மனந்திரும்புதல் ) புதிய பிறப்பு ஆகிவிடாது என்பதும் கூட உண்மை. ஜலமும், ஆவியும் ஒருங்கிணையும் போதே புதிய பிறப்பு உண்டாகிறது. **நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் அவருடைய புத்திரராயிக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே** ( கலா *3:26,27* ) என்கிறார் பவுல். குழந்தைப்பிறப்பை ஆங்கிலத்தில் Delivery என்று கூறுகிறார்கள். கொலோ *1:13* கூட அதே அர்த்தத்தைத்தான் தெரிவிக்கிறது. **இருளின் அந்தகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி (delivered) தமது அன்பின் குமாரனுடைய இராஜ்ஜியத்துக்குட்படுத்தினார் என்று.** அதாவது, கருவி லிருந்து குழந்தை எப்படி உலகுக்கு வருகிறதோ அதே போன்று இருளில் அதிகாரத்தினின்று அன்பின் குமாரனுடைய இராஜ்ஜியத்திற்குள் கொண்டு வரப்படுகிறது.

( விசுவாசித்து, மனந்திரும்பி இருந்தாலும் (கருவுற்றிருந்தாலும்) ஒருவன் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளாவிடில் (delivery ஆகாவிட்டால்) கருவில் ஏதோ கோளாறு அல்லது குழந்தை கருவிலேயே இறந்து போயிற்று என்று தானே பொருள்! )

ஆகவே, ஒரு மனிதன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறப்பதற்கு, தேவனுடைய வசனமும், பாவங்களை மன்னிக்கிற கிருபையும் தேவை. அது தேவனுடைய இலவசமான ஈவு. வசனத்துக்குக் கீழ்ப்படிந்து, மனந்திரும்பி திருமுழுக்குப் பெற்றுக் கொள்வது மனிதனுடைய கடமை. நாம் இந்தச் சிறிய விஷயத்தைக் கூடச் செய்ய மனமில்லாமல் அதையும் தேவனே செய்யவேண்டும் அல்லது அதிலும் சலுகை வேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியல்ல. தேவனுடைய மகத்தான இரக்கத்தைப் பயன்படுத்தி இரட்சிப்பைப் பெற்றுக் கொள்வோமாக!

✠

# ஏன் வேதமும், நானும்
## *My Bible and I*

### Hollis Miller

நாம் வாழ்க்கையின் கரடுமுரடான பாதைகளில் பயணித்திருக்கிறோம்.
நிலத்திலும், தண்ணீரிலும், இரவிலும், பகலிலும் நாம் பயணித்தோம்.
அதில்லாமல் பயணிப்பதை நான் ஒருபோதும் முயற்சிக்க மாட்டேன்.
வேதமும், நானும் ஒன்றோடொன்று பின்னப்பட்டிருக்கிறோம்

நான் துக்க வேளையில் மூழ்கிய போது அதுவே என் ஆறுதலும்
என் தேறுதலும் என் மகிழ்ச்சியுமாயிருந்தது என்பதை நிரூபித்தேன்
மரணம் என் அருகில் வந்து நான் மரித்துவிடுவேன் என்று நினைத்தபோது
அதையும் தாண்டி வேதமும் நானும் இன்றும் இணைந்திருக்கிறோம்

தீய சக்திகள் எனக்கெதிராய் வந்து பரலோக வீட்டை என்னிடத்திலிருந்து
பறித்துவிடுவதாக என்னை அச்சுறுத்தியபோது
தேவனுடைய வார்த்தை என்னை பரத்திற்கு நேராய் வழிநடத்தி
என்னையும் வேதத்தையும் அது பிரிக்கமுடியாமல் செய்துவிட்டது

சோதனைகள் என் கண்களுக்கு முன்பாக வந்தபோது
நான் என் பெலவீனத்தில் செய்வதறியாது தவித்தபோது
என் பெலனாகிய கிறிஸ்துவை நான் சார்ந்திருக்க போதிக்கப்பட்டபடியால்
வேதமும் நானும் இணைந்து நடந்து செல்கிறோம்

வாழ்க்கைப் பாதை முடிவடைந்து இயேசு கிறிஸ்து வந்தால்
இரத்தத்தால் வாங்கப்பட்ட சபையை நித்தியத்திற்கு அழைத்துச் சென்றால்
அல்லது நீடிய பொறுமையுடன் நான் மரிக்கும் வரை காத்திருந்தால்
வேதமும் நானும் ஒருபோதும் பிரியமாட்டோம்

மகிமை பொருந்திய நிலையில் நான் கர்த்தரைக் காணும்போது
மீட்கப்பட்ட கூட்டமாகிய மந்தையைப் நான் காணும்போது
வேதமும் நானும் இணைபிரியா நண்பர்களாயிருந்தோம்
ஏனென்றால் சத்திய வசனம் நித்திய நித்தியமாய் நிலைத்திருக்கும்

உலகத்திலிருந்து ஆவிக்குரிய குடும்பத்திற்கு இடம்பெயர்தல், தண்ணீர் ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவோடு அடக்கம் பண்ணப்படுவதால் ஏற்படுகிறது

ஒரு மனந்திரும்பிய பாவி கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஞானஸ்நானம் பெறுகிறார்

நீங்கள் அங்கம் வகிக்கும் சபை கிறிஸ்துவின் பெயரால் அழைக்கப்படுகிறதா? (யாக்கோபு 2:7) ; ரோமர் 16:16).

## வேதாகமம்

வேதாகமம் மனிதனுக்கான தேவனுடைய கடிதமாயிருக்கிறது.

வேதாகமம் நித்திய ஜீவன் சம்மந்தமான தகவல்களின் ஆதாரமாயிருக்கிறது.

வேதாகமம் அனுதின வாழ்க்கைக்கான வழிகாட்டியாயிருக்கிறது.

வேதாகமம் மதசம்மந்தமான காரியங்களில் இறுதி வாக்காயிருக்கிறது.

வேதாகமம் நம்மை பாவத்திலிருந்து விடுதலையாக்கும் சத்தியத்தைச் சொல்கிறது.


வேதாகமம் நமக்கு பெலனையும், ஆறுதலையும் தருகிறது.

வேதாகமம் நாம் எப்படி மகிழ்ச்சியாக வாழ வேண்டுமென்று சொல்கிறது

இப்படிப்பட்ட புத்தகம் நமக்கு கிடைத்திருக்கிறபடியால், நாம் நிச்சயமாக அதில் இடம் பெற்றுள்ள காரியங்களை ஜாக்கிரதையாக அறிந்துகொள்ள வேண்டும். நாம் வேதாகமத்தைப் படிக்கிறோமா?

# கிறிஸ்துவுக்குள்
# In Christ

Harvey Porter




நீங்களெல்லாம் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே *(கலாத்தியர் 3:26,27).*

ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம் *(Iகொரிந்தியர்12:13).*

எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார் *(எபேசியர்1:22,23).*

**கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்குள் எவைகளைப் பெற்றிருக்கிறீர்கள்?**

தேவனுடைய நித்திய நோக்கத்திலும், மனித இனத்துக்கான திட்டத்திலும் கிறிஸ்துவின் நிலையைப் பற்றிய விரிவான விளக்கத்தை எபேசியர் நிருபம் நமக்குத் தருகிறது. **கிறிஸ்துவுக்குள்** என்னும் வெளிப்பாடு அல்லது அதற்கு இணையான வெளிப்பாடு கிறிஸ்துவோடு நமக்கிருக்கும் உறவின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது. கிறிஸ்துவுக்குள் நாம் எவைகளைப் பெற்றுக்கொள்கிறோம் என்பதைக் கவனியுங்கள்.

> ***"......கிறிஸ்துவுக்குள் சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் இருக்கின்றன " (எபேசியர்1:3).***

> ***"......கிறிஸ்துவுக்குள் பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது " (எபேசியர்1:7)***

> ***"......கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் நம்மை உன்னதங்களிலே அவரோடுகூட உட்காரவும் செய்தார் "(எபேசியர்2:7)***

"......கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் நம்மை உன்னதங்களிலே அவரோடுகூட உட்காரவும் செய்தார்" (எபேசியர் 2:7)

"......கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் நம்மிடத்தில் தயவு வைத்திருக்கிறார்" (எபேசியர் 2:7)


"......நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்" (எபேசியர் 2:10)

"......கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமாயிருக்கிறோம்" (எபேசியர் 2:13).


"....நாம் கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறோம்" (எபேசியர் 2:21).

"....கிறிஸ்துவுக்குள் தேவன் பண்ணின வாக்குத்தத்தத்துக்கு உடன் பங்காளிகளுமாயிருக்கிறோம்" (எபேசியர் 3:3).

✝



## சத்திய வழி



❖ பேச்சாளர் : சகோ. P.R. சுவாமி (ஊழியர்)

❖ ரேடியோ : ஞாயிறு to வெள்ளி 5.30 p.m.

❖ நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

<u>தொடர்புக்கு</u> : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560084.

போன் : 080-25463507, செல் : 09844070763

## கிறிஸ்துவின் வசனம்




❖ பேச்சாளர் : சகோ. B. அர்ஜுனன்

❖ தமிழன் : திங்கள் காலை 6:00 மணி & சனி மாலை 6:15 – 6:30 மணி

❖ மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்

❖ ரேடியோ : SW 25 & 41 M (சனி மாலை 5.30 5.45)

Srilanka all Asia Service



<u>ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம்</u> ;

கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்லகுண்டு – 624 206.

திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041

## கிருபையுள்ள வார்த்தை



❖ பேச்சாளர் : சகோ. B. பிலேமோன் ராஜா

❖ தமிழன் : ஞாயிறு காலை 6:45 மணி & வெள்ளி காலை 6:00 மணி

❖ பைபிள் பாடங்கள் : அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்

❖ பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரெயில் இதழ் (தமிழ் / English)


❖ தமிழ் மாதப் பத்திரிக்கை : THE VOICE OF TRUTH INTERNATIONAL

❖ **English Quaterly Magazine** : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பணி

❖ **J.C. School of Evangelism** : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.

<u>தொடர்புக்கு</u> : செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## திருமறை தியானம்



**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:15 மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:00 மணி |

## அஞ்சல் வழி வேதாகமகல்வி

வேதாகமஅஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

தொடர்புக்கு :இயக்குனர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ. எண் 27, காங்கேயம் 638 701.
தமிழ்நாடு, இந்தியா.

பேரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் **பல்வேறு தலைப்புகளில்** வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன **கைப்பிரதிகள்** (Tracts) வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்

**E.Z.S. ராஜநாயகம்: 98427 30382**
**P.R. சுவாமி : 098440 70763**
**P.C. பிலேமோன் ராஜா: 9244204420**
**B. அர்ஜுனன் : 994435 58041**

## " சத்தியத்தின் குரல் " சந்தா விண்ணப்பம்

❑ "சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 (4 இதழ்கள்) (அ) ரூ. 200 (8 இதழ்கள்) க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

❑ "சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழுக்கு என்னுடைய ........................................ முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. ........................ காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

❑ "சத்தியத்தின் குரல்" நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

**(இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்)**

கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி

**E.Z.S. ராஜநாயகம்**

"சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழ்

288, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701.

Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385

E-mail : rajarichal@yahoo.co.in

பெயர் : ____________________

தெரு / ரோடு : ____________________

நகரம் : ____________________ பின் கோடு : ____________

மாநிலம் : ____________________